ஓம்:

மானஸ
மர்ம சாஸ்திரம்.

இரண்டாம் புஸ்தகம்.

ஹிப்னடிஸம்.

AL4

BOOK 2.

HYPNOTISM.

இஃது
யாவர்க்கும்
சுகசெல்வ நன்மைகளையும் சுகிர்தபாக்கிய
பொக்கிஷத்தையும் நீடூழி பெருகுவிக்க விரும்பிய
மானிடமர்மசாஸ்திர நூலாசிரியரும், "இரஞ்சிதபோதினி"
பத்திராதிபரும், கல்கத்தா சர்வகலாசங்கத்தின் தமிழ்ப்
பரீக்ஷகரும், இரங்கோன் செண்ஜான்ஸ் கல்லூரிப் பிரதம
ஆசிரியரும், கணித சாஸ்திரம், பூமிசாஸ்திரங்களின் கிரந்த
கர்த்தாவும், குடும்ப ஔஷதஏஜன்சியின் மானேஜரும்,
மானஸமர்ம சாஸ்திரப் பண்டிதருமாகிய

எஸ். சாமிவேல், பி.ஏ., அவர்கள்

இயற்றியது.

—:*:—

Samuels Electric Printing Works,
49, Barr Street, Rangoon.

ALL RIGHTS RESERVED.

1913.

விலை ரூபா. 5.

ரிஜிஸ்தர் அறிவிப்பு.

இதனால் யாவருக்கும் அறிவிப்பது யாதெனில்: 1867-வது வருஷத்திய 25-வது ஆக்டின் 20-வது பிரிவிலுள்ள 6-வது விதியின் பிரகாரம், இப்புஸ்தகமானது இங்கிலீஷ் இலாக்காவாகிய இரங்கூனிலும், பிராஞ்சு இலாக்கர்வாகிய புதுச்சேரியிலும் காப்பி ரைட் ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்நூலாசிரியனாகிய எனது அநுமதியில்லாமல் இதை இதரபாஷைகளில் மொழிபெயர்க்கக்கூடாது. மேலும் இதில்கண்டிருக்கிற எதேனும் பாகத்தையாவது பாகங்களையாவது ஒருவரும் அச்சிடலாகாது. அப்படி அச்சிடும்பக்ஷத்தில் அதனாலுண்டாகும் சர்வ நஷ்டமும் கோர்ட்டின் மூலமாய் வசூல் செய்யப்படும்.

இப்படிக்கு,

எஸ். சாமிவேல், பி. ஏ.

49, பார் வீதி, இரங்கோன்.

ஆசிரியர் கருத்து

மனோவசிய சாஸ்திரமானது சுய மனோவசியம், பிறமனோவசியமென இருவகைப்படுமென்றும், சுயமனோவசிய அப்பியாசங்களின்னதென்றும் அவ்வித அப்பியாசங்களால் அடையக்கூடிய பயனையும் மானஸ மர்மசாஸ்திரம் முதலாம்புஸ்தகத்தில் சொல்லியிருக்கிறோம். இங்கு பிற மனோவசியமாகிய ஹிப்னடிசம், மெஸ்மரிசம், முதலிய சாஸ்திரங்களின் சாராம்சத்தை அவற்றின் சரித்திரத்துடன் தொட்டுக் காண்பித்திருக்கிறோம். ஆனால் இது ஓர் கூறிய வாளுக்கொப்பான ஓர் சாஸ்திரம். சாந்தம், தயை, தாக்ஷண்யம், பரோபகார சிந்தை முதலிய சற்குணங்கள் வாய்ந்த புண்ணியவான்கள் இச்சாஸ்திரத்தைக்கற்று பிறரின் நோய்களைக் குணமாக்குவதுடன் தங்களிலும் மற்றவர்களிடத்திலுங் காணப்படும் குற்றங்குறைகளைநிவர்த்திசெய்யும்பொருட்டே இப்பரம ரகசியத்தை வெளியாக்கலானோம். துஷ்டர்கள் கைகளில் இவ்விதசாஸ்திரங்கள் அகப்படுமாகில் அவர்களதைப் பற்பல துர்க்கிருத்தியங்களுக்கு உபயோகிக்கலாம். உதாரணமாக:—கற்பு நிலையைக் காத்துக்கொள்வதற்கத்யாவ்சியமான மனோதிடங்குறைந்துள்ள ஸ்திரீகளை எளிதில் கெடுத்துவிடலாம். பிறரை ஏமாற்றி அவர்களின் கையெழுத்துகளைப் பெற்று அவர்களின் பொருளை அபகரித்துக் கொள்வதற்கும், மற்றும் அனந்தங் கெடுதிகளைச் செய்வதற்கும் இச்சாஸ்திரத்தை உபயோகப் படுத்தலாம். அவ்விதஞ் செய்யுந் துஷ்டர் கடவுள் தண்டனைக் காளானபோதிலும் இம்மையில் பிறரைத் துன்பத்துக் காளாக்குவர். ஆதலால் நாம் **மானிடமர்ம சாஸ்திரம்** 10-ம் பக்கத்தில் சொல்லியிருக்கும் பிரகாரம் இவ்வித மர்மங்களை அறிந்து கெடுபவர்களைப் பார்க்கிலும் அறியாமையால் கெடுபவர் அனந்தம்பேராதலின் அறிவைப்புகட்டி துஷ்டர் கைக்குத் தப்பித்துக்கொள்ளும் வகைகளைக் காண்பித்திருக்கிறோம்.

மெஸ்மரிச விளையாட்டு பலவற்றையும் நாம் சவிஸ்தாரமாக இங்கு சொல்லியிருப்பது இச்சாஸ்திரத்தைக் கற்றுக்கொள்பவர்கள் பற்பல விளையாட்டுகளைக்காண்பிந்துக்கொண்டு திரியவேண்டுமென்னும் நோக்கத்துடனல்ல. ஒருவனை நித்திரைக்குள்ளாக்கி இவ்விதமான பல அற்புத விளையாட்டுகள் காண்பிப்பது சாத்தியமாகுமாயின் இனிமேல் நாம் வெளியாக்க உத்தேசித்திருக்கும் மெஸ்மரிச வைத்தியமென்னும் மானத வைத்திய முறைகள் எளிதில் பலிக்கக்கூடியவைகளென்பதை உணர்த்தும்பொருட்டே.

இவ்வளவு அருமைவாய்ந்த சாஸ்திரமானது வைத்தியத்தொழில் செய்துவரும் புண்ணிய சீலர்களுக்குமட்டுமே உபயோகமாகவேண்டுமென்னும் விருப்பத்துடன் எழுதப்பட்டிருப்பதால் நோயாளிகளை ஹிப்னடிச தூக்கத்துக்குக் கொண்டுவரும் பல வகைகளையும் ஒருங்கே திரட்டி மிகக் குறைந்த விலையாகிய ரூ 5-க்கு இச்சாஸ்திர ரத்தினத்தை விற்பனைசெய்கிறோம். இப்புஸ்தகங்கிடைக்கப்பெறும் புண்ணியவான்கள் இதனைப்பரமரகசியமாகவைத்து உபயோகித்து வருவார்களாக. தாம் செய்யுங் கிரியைகளின் பயனின்னதென்றுணருஞ் சக்தியற்ற சிறுவர்கள், துஷ்டத்தனமுள்ள மூர்க்கர் முதலியவர்களின் கைகளில் இச்சாஸ்திரம் சிக்கிக்கொள்ளாதவண்ணம் பார்த்துக்கொள்வார்களாக இவ்வளவு காலதாமதத்துடன் இச்சாஸ்திரம் வெளியானதற்குக் காரணங்கள் மேற்குறிப்பிட்டவைகளே.

சமயம் வாய்த்ததற்குத் தக்கது மேஸ்மரிசவைத்தியம், ஜீவாதார மந்திரோபதேசம், தூர சிரவணம், முதலிய அரிய ரகசியங்கள் ஒன்றன்பின்னொன்றாக வெளியாகும். ஓம் தத்சத்!! சுபம்!!!

இரங்கோன் : செப்டம்பர், 1, 1913.	}	எஸ். சாமிவேல்.

98

Mr. Chinnattamby
Merchant
Yonkari

பொருளடக்கம்.

பாடம்.	விஷயம்.	பக்கம்.
1	ஹிப்னாடிஸம்	1
	மெஸ்மர்	4
	டி. பூசிகர்	9
	டாக்டர் பிரேயிட்	15
	டாக்டர் லிபால்ட்	17
2	சூக்ஷமதேகம்	18
3	நித்திரையே யோசனைக்குறிப்பு பதியுஞ்சமயம் ...	22
4	யோகநித்திரைக்கு கையாடவேண்டியவஸ்துக்கள் ...	26
5	2-வது முறை. (மேஸ்மரிச தாடனம்) ...	31
	கீழ்நோக்கித் தடவுதல்	33
	மேல்நோக்கித்தடவுதல்	33

பாடம்.	விஷயம்.	பக்கம்.
6	நெடில் தாடனம்	34
	குறில் தாடனம்	35
	குறிப்புகள்	35
7	ஹிப்னாடிசத்தாலுண்டாகக்கூடிய நன்மை தீமைகள்	38
8	சாதாரணத் தூக்கத்திற்கும் ஹிப்னாசத் தூக்கத்திற்குமுள்ள சம்பந்தம்.	41
	ஒற்றுமை	41
	வித்தியாசம்	42
9	ஒருவனின் விருப்பத்திற்கு விரோதமாய் ஹிப்னாடிஸ தூக்கமுண்டாக்கலாமா? ...	42
10	தூங்கும்போது தீமையான விஷயங்கள் செய்யத் தூண்டுதல் சாத்தியமாகுமா? ...	43
11	சிலரை மாத்திரம் தூங்கவைக்காதிருப்பதற்குக் காரணமேன்?	44
12	சில பரீக்ஷைகள்	
	1. கை ஒரேநிலையில் நிற்குதல் ...	47
13	2. பின்புறமாக விழச்செய்தல் ...	48
14	3. முன்புறமாக விழச்செய்தல் ...	51
15	4. கைகள் ஒட்டிக்கொள்ளுதல் ...	53
16	விழிப்புநிலையில் செய்யக்கூடிய அற்புதங்கள் ...	53
17	ஹிப்னாடிஸ நித்திரையினின்றெழுப்புதல் ...	56

பாடம்.	விஷயம்.	பக்கம்.
18	ஹிப்னுடிஸ தூக்கத்தின் அந்தரங்க காரணம் ...	59
19	ஒருவன் தூங்கிவிட்டானென்றறியும் விதம் ...	61
20	ஹிப்னுடிஸ நித்திரைக்குக் கையாடவேண்டிய மூன்ருவது முறை ...	63
21	,, ,, நான்காவது முறை ...	63
22	,, ,, ஐந்தாவது முறை ...	64
23	,, ,, ஆருவது முறை ...	65
24	,, ,, ஏழாவது முறை ...	66
25	,, ,, எட்டாவது முறை ...	67
26	,, ,, ஒன்பதாவது முறை ...	67
27	,, ,, பத்தாவது முறை ...	68
28	அநேகரைத் தூங்கச் செய்வது. } பதினோராவதுமுறை ...	73
29	,, ,, பன்னிரண்டாவதுமுறை ...	77
30	பயங்காலிகள், சிறுவர்களுக்குத் தூக்கமுண்டாக்கும் விதம். } பதிமூன்ருவது முறை ...	79
31	,, ,, பதினுன்காவது முறை ...	81

பாடம்.	விஷயம்.	பக்கம்.
32	,, ,, பதினைந்தாவது முறை...	82
33	உடனே தூங்கச்செய்தல், பதினாறாவது முறை...	82
34	தூரத்திலுள்ளவர்களை தூங்கச்செய்யும்விதம். } பதினேழாவது முறை ...	84
35	கடிதம், தந்தி, மன தந்தியை உபயோகிப்பது. } பதினெட்டாவதுமுறை...	85
36	கருவிகளையும், படங்களையு முபயோகிப்பது. } பத்தொன்பதாவது முறை	86
37	சாதாரணதூக்கத்தை ஹிப்னடிஸத் தூக்கமாக மாற்றுவது. } இருபதாவது முறை ...	88
38	யோகிகளின் முறை, இருபத்தோராவது முறை...	90
39	விளையாட்டு வேடிக்கைகள்	
	1. சிறிப்பு விளையாட்டு	93
40	2. தூக்க விளையாட்டு	94
41	3. மீன் பிடித்தல்	95
42	4. குடிவெறிக்காக்ஷி	96
43	5. மோக்ஷக்காக்ஷி	96
44	6. இல்லறக்காக்ஷி	97
45	7. பூஞ்சோலைக்காக்ஷி	99
46	8. சுடுகிற நாற்காலி	100

பாடம்.	விஷயம்.	பக்கம்.
47	9. இனிப்பைக் கசப்பாகவும், கசப்பை இனிப்பாகவும் மாற்றுவது ...	101
48	10. அக்கினிப் பிரவேசம்	102
49	11. செடில்குத்துவது	103
50	12. விழிப்புநிலையில் நோயில்லாமல் செடில் குத்துவது	106
51	13. சரீரத்தை விறைக்கச்செய்தல் ...	109
52	14. விழிப்புநிலையில் விறைக்கச்செய்வது 1-வது முறை	113
	2-வது முறை	113
53	தூங்கிவிழித்தபின்பும் கிரியைசெய்ய ஏவுதல் ...	114
	1-வது உதாரணம்	116
	2-வது உதாரணம்	117
	3-வது உதாரணம்	117
54	4-வது உதாரணம்	118
	5-வது உதாரணம்	119
55	ஐம்புலவிர்த்தி	119
	கண்பார்வை 1-வது உதாரணம் ...	120
	,, 2-வது உதாரணம் ...	122

பாடம்.	விஷயம்.	பக்கம்.
	கண்பார்வை 3-வது உதாரணம் ...	123
56	செவியின்கூர்மை 1-வது உதாரணம் ...	124
	,, 2-வது உதாரணம் ...	124
57	நாவின் ருசியை அதிகரிக்கச் செய்தல் ...	125
58	வாசனையின் கூர்மை	125
59	உயிர்ப்பிராணிகளை வசியஞ்செய்யும் முறை. கோழிகளை வசியஞ்செய்தல் ...	127
60	பாம்புகளை வசியஞ்செய்யும் முறை ...	128
61	புருக்களை வசியஞ்செய்யும் முறை	128
62	குதிரை, குரங்கு, நாய், பூனை வசியம் ...	129
63	காட்டுப்பிராணிகளின் வசியம் ...	130
64	மானிட வசியம்	131
	மௌன சக்தி	131
	தன்னடக்கமே வசிய சக்தி	132
65	காந்த திருஷ்டி	133
66	தாமதிக்காதே	135
67	மானத தந்தி	136

சித்திரப்படங்களின் ஜாப்தா.

நெம்பர்.	விஷயம்	பக்கம்
1	நோயாளி தூக்கநிலைக்கு வரக்கூடியவனென்றறியும் விதம்.	46
2	கை நின்ற நிலையிலேயே நிற்குதல்	47
3	பின்புறமாக விழச்செய்தல்	48
4	பின்புறமாக சாய்ந்து விழுதல்	49
5	முன்புறமாக விழச்செய்தல	51
6	முன்புறமாக சாய்ந்துவிழுதல	52
7	அநேகரை ஓரே முறையில் தூங்கச் செய்தல்	77
8, 9, 10	ஹிப்னடிஸ கருவிகள்	86, 87
11	யோகிகளின் முறை	90
12	பூனை விளையாட்டு	98
13	பூஞ்சோலைக் காக்ஷி	99
14	சுவரில் ஒட்டிக்கொள்ளுதல்	101
15	கையில் ஊசிகுத்துதல்	104
16	கன்னத்தில் ஊசிகுத்துதல்	107
17	சரீரத்தை விறைக்கச்செய்து மேலே பாரமேற்றுதல்	109
18	சரீரத்தை விறைக்கச்செய்து மேலே ஆட்களை ஏறச்செய்தல்	111
19	விழிததபின் கிரியை செய்ய ஏவுதல்	115
20	கோழிகளை வசியஞ்செய்தல்	127
21	பாம்புகளை வசியஞ்செய்யும் முறை	128
22	காட்டுப்பிராணிகளின் வசியம்	130

கடவுள் வணக்கம்.

அருளகத்தனைத்துமே யாளுநாதனை
மருளகத்தகற்றிட வணங்கிநூற்படி
தெருளகத்துயிலறத் தெளிர்துதூங்குவான்
பொருவில்ஹிப்னட்டிசம் புகலுவாமரோ.

ஓம்.

மானஸ மர்ம சாஸ்திரம்.

இரண்டாம் புஸ்தகம்.

Book 2.

HYPNOTISM.

ஹிப்நாடிஸம்.

1-வது பாடம்.

ஆனந்தசாகரன்:—அருள்ஞானரவியென நனிபிரங்கியோங்கி அறியாமையகற்றும் என் குருவே! அடியேனுக்கு ஹிப்னடிசம், மெஸ்மரிசம், மாக்னிடிசம் என்னும் பதங்களின் தாரதம்மியத்தை நன்குவிளக்கி, இச்சாஸ்திரம் உற்பத்தியான விதத்தையும், சுருக்கிச்சொல்ல அஞ்சலி செய்கின்றேன்.

சர்வகலாநிதி:—மானிடரொவ்வொருவருக்குள்ளும் ஓர் மகிமை மறைந்துகிடக்கின்றது. அந்த மகிமையை யறிந்தவர்கள் தமது நிலையையும், தமக்கிருக்கும் வல்லமையையும் எளிதில் அறிந்துகொள்ளுவார்கள். தமது வல்லமையை யறிந்துகொண்டவர்களுக்கு நினைத்தகாரியங் கைகூடும். ஆஸ்தியோ, செல்வமோ, மரியாதையோ, கனமோ, கண்ணியமோ, தெய்வபக்தியோ, தெய்வ

வசியமோ, எதெதை விரும்புகின்றார்களோ அவைகளெல்லாங்கிட்டும். இச் சாஸ்திரத்தைக்கற்றவன், இதை யறியாத மற்றெல்லாருக்கும் மேலானவனுவான். உலக விவகாரங்களிலும் சாஸ்திரங்களிலும் எவ்வளவு தேர்ந்தவனுயினும், ஹிப்னடிச சாஸ்திரங் கற்காதவன் கற்றவனுக்கடங்கியே நடப்பான். ஏனெனில் இதுவே வசிய சாஸ்திரத்திற்காதாரம். இதைக்கற்றவன் தனக்குள்ளிருக்கும் காந்தசக்தியை அதிகரிக்கச் செய்வதற்குத் தகுந்த அப்பியாசங்களை பழகிவருவானுனல் உலகம் அவனுக்கு வசியமாகும். அவன் நினைத்த விஷயங்கள் நினைத்தமாதிரி கைகூடும். அவன் சொல்வதை யாவரும் நம்புவார். அவன் செல்லுமிடங்களிலெல்லாம் அவனுக்கு மதிப்புண்டாகும். சுருங்கச்சொல்லில் இவ்வுலக போராட்டத்திற்கு அத்யாவசியமான ஆயுதம் இச் சாஸ்திரத்தால் வெளியாகும். வெற்றிகொள்ள விரும்புவோன் கையாடுங் கருவி இதுவேயாகும்.

ஹிப்னடிசம், மெஸ்மரிசம், மாக்னடிசம் என ஆங்கிலத்தில் உபயோகிக்கப்படும் பல் பதங்களின் கருத்தெல்லாம் ஒன்றேயாம். ஒருவனைத்தூங்காமற் றாங்கும் நிலைக்குக் கொண்டுவருவது காந்தம் முதலியவஸ்துக்களை உபயோகிப்பதால் அல்லது நம்மிலுள்ள காந்த சக்தியை உபயோகிப்பதால்மட்டுமேயாகும் என்று எண்ணுபவர்கள் “தூங்காமற் றாங்கும்நிலையை” காந்ததூக்கம் என்றர்த்தங்கொள்ளும் (மாக்னடிசம்) என்பார்கள்.

சாதாரண ஜனங்கள் இத்தூக்கநிலையின் அந்தரங்கத்தை யறிதலரிதாதலால் தங்களறிவுக்கும் புத்திக்கும் எட்டாத சகல விஷயங்களும் ஏதோ ஓர் அபார சக்தியுள்ள ஆவேசம், பேய், பிசாசு அல்லது தெய்வத்தாலேயே நடக்கக்கூடுமென்றெண்ணுவது சகஜம். ஆகவே கண்கட்டுவித்தை, இந்திரஜாலம், மகேந்திரஜாலம் செய்பவர்களெல்லாம் தங்களிடத்திலுள்ள எக்ஷிணிமுதலிய தேவ

தையினுதவியால் தாம் அரிய காரியங்களைச் செய்துமுடிப்பதாகச் சொல்லி ஏமாற்றிவந்தனர். அதனால் மெஸ்மரிச வித்தையானது ஓர் தந்திரவித்தையென்றும் அதை உபயோகிப்பவர்கள் புரட்டரென்றும் உலகத்தவர் எண்ணத் தலைப்பட்டனர்.

ஆதலால் இவ் வித்தையின் அந்தரங்கத்தை அறிய விரும்புகிறவர்களுக்கு ஹிப்னடிச வித்தையின் ஆதிமுதலந்தம்வரையுமுள்ள சரித்திர நுட்பத்தைச் சுருக்கிச் சொல்வாம். எகிப்தியர், கிரேக்கர், ரோமர் முதலிய ஜாதியார் இந்த வித்தையைப் பூர்வீகத்தில் அப்பியசித்துவந்தனர். கிறிஸ்துவுக்குமுன் 1552-ம் ௵த்தில் எகிப்து தேசத்தில் எழுதப்பட்ட (Ebers Papyrus) என்ற வைத்திய கிரந்தத்தில் நோயாளியின் தலையிற் கையைவைத்தும், தடவிக்கொடுத்தும் சொஸ்தமாக்கும்வகைசொல்லப்பட்டிருக்கின்றது. பிராஞ்சு தேசத்து அரசர்களும், நார்வே சுவீடனிலுள்ள ராஜவம்சத்தாரும் நோயாளிகளாய்த்தம்மிடம்வந்த பிரஜைகளைத் தொட்டு சொஸ்தப்படுத்தினரெனவும் வாசித்திருக்கிறோம்.

சென்ட் அகுஸ்தீன் எழுதிய கிரந்தத்தில் ரோமகுருக்களில் ஒருவர் மௌன நிலையையடைந்திருக்கும்பொழுதெல்லாம் அவர் சரீரம் பிரேதம்போலவே தோன்றியதென்று சொல்லுகிறார்.

இந்தியாவிலும் தொன்றுதொட்டு யோகிகள் விரதமிருந்து தமது ஐம்புலாதிகளையடக்கி ஏகாக்ரசித்தராய்த் தமது மூக்கின் நுனியைப் பார்த்துத் தியானித்து யோகநித்திரைக்குள்ளாகி, ஞானதிருஷ்டியினால் அனேக காரியங்களை வெளியாக்கியதுடன் அற்புதமான பலவிஷயங்களைக் காண்பித்து உலகத்தவரை பிரமிக்கச் செய்துவந்தனர்.

இவ்விதமாக இந்தியர், கிரேக்கர், ரோமர், பார்சிகர், எகிப்தியர் முதலிய பலஜாதியாரின் கிரந்தங்களிலும் ஹிப்னடிசத்திற் கி

சைவான அற்புதக்கிரியைகள் தொன்றுதொட்டு செய்யப்பட்டு வந்தன என்று தோன்றுகிறது. ஆனால் அதன் மூலகாரணம் ஒரு வருக்குந் தெரியாததலால் அபார சக்தியமைந்த ஆவேசத்தின் கிரியையே இதுவென் றெண்ணினர்.

மெஸ்மர்.

ஆகவே அநேகசாஸ்திரிகள் இச்சாஸ்திர நுட்பத்தை அறியத் தலைப்பட்டு அதில் தமது வாழ்நாளெல்லாங் கழித்தனர். கடைசியாக மெஸ்மர் என்றவரே இதை ஓர் சாஸ்திரமாக்கினார். இவர் பிரான்சுதேசத்தில் 1734-ம் வருஷம் பிறந்து வைத்திய சாஸ்திரங் கற்று டாக்டர் பட்டம் பெற்றனர். அக்காலத்தில் ரோமகுருவாயிருந்த (Father Hehl) என்பவர் வானசாஸ்திரங் கற்றவராயிருந்தமையால் கிரகங்களின் தன்மையைப்பற்றி பலகிரந்தங்கள் எழுதியும் பக்குவப்படுத்திய ஊசிக்காந்தத்தைக்கொண்டு அனேக நோய்களைத் தீர்த்தும் யாவரையும் பிரமிக்கச்செய்துகொண்டிருந்தனர். அவருடையரகசியத்தை மெஸ்மரும் கற்று அப்பியாசித்துக்கொண்டுவருங்காலத்தில் ஒருநாள் நோயாளிஒருவனின் ரத்தத்தை எடுத்துவிட்டு காயத்தை அற்றும்படிக்குக் காந்தக்கருவியைஎடுக்கும் பொருட்டு அங்குமிங்கும் தடவிப் பார்த்துக்கொண்டிருக்கையில் தமது கையின் அசைவினால்நோயாளியின் வலிநீங்கி ரணம்சொஸ்தமாகிவிட்டது. அதுமுதல் காந்தக் கருவியை உபயோகியாமல் தமதுகைகளினாலேயே தடவிக்கொடுத்து அநேக நோய்களைக்குணமாக்கிவந்தனர். ஒவ்வொரு மனுஷனுக்குள்ளும் (ஜீவகாந்தசக்தி) இருக்கின்றமையால் அப்பியாசத்தால்அதை விர்த்திசெய்துகொள்ளலாம். ஜீவகாந்த சக்தியானது ஜலம்போன்ற வஸ்துவானதால் அதை நம்மிஷ்டம்போல் நமது கையால் தடவிக் கொடுப்பதாலும், உதறித்தெளிப்பதாலும், காந்தப் பார்வையாலும், ஏகாக்ர சித்தத்தாலும் மற்றவர்களிடத்தில்செலுத்தி நோய்களைக்குணமாக்கலாம்.

மற்றவர்களின் மனதையும் வசியஞ் செய்து சௌக்கிய மாக்கலாம் என்றும் வற்புறுத்திப்பேசினுர். அப்பொழுது அனேக எதிரிகள் எழும்பி இவரை புரளிக்காரன், பிரட்டு உருட்டுச் செய்கிறவன் என்று பரியாசம்பண்ணி இம்சிக்க ஆரம்பித்தார்கள். இவர் தாம் புறக்கணிக்கப்பட்ட வியன்ன நகரத்தைவிட்டு உயிர்தப்பும்படி ஓடி பாரிஸ் பட்டணத்தில் வந்து ஸ்தாபகமாகி அங்கே ஓர் வைத்திய சாலையைத் திறந்தார். அதைச்சற்று விவரிப்பாம்.

ஒரு பெரிய அறையின் மத்தியில் ஐந்து அடி குறுக்களவும் ஒருஅடி உயரமுமுள்ள ஓக்மரத்தால் செய்த வட்டத் தொட்டி யொன்று வைக்கப்பட்டிருந்தது.

இந்தத் தொட்டியின்கீழ் வேறொரு தொட்டியும் வைக்கப் பட்டிருந்ததுடன், மேல்மூடியாக இரண்டு பலகைளும் இணைக்கப் பட்டிருந்தன. தொட்டியினுள் அநேக சீசாக்கள் வாய்களெல்லா மொரேயிடத்தில் பொருந்தத் தக்கதாக சாய்த்துவைக்கப் பட்டி ருந்தன. அவற்றின் பக்கத்தில் காந்தத் தண்ணீரடைத்த சீசாக் கள் எதிர்முகமாய்ச் சாய்த்துவைக்கப்பட்டிருந்தன. இவ்விதம் அநேகவரிசை சீசாக்கள் ஒழுங்கொழுங்காய் அடுக்கப்பட்டிருந் தன. அவற்றிற்குமேல் தொட்டி நிறைய தண்ணீர்விட்டிருந்தது. அதனுள் கண்ணுடித்துண்டுகளும், இரும்புத் தூள்களும் போடப் பட்டிருந்தன. இதே விதமான பலதொட்டிகள் தண்ணீரால் நிற ப்பப்படாமலு மிருந்தன. தொட்டியின் மூடியிலுள்ள பலபெரிய துவாரங்களில் வளைவான இரும்புக் கம்பிகளை நுழைத்திருந்தது. அந்தக் கம்பிகளை நோயாளிகளின் சரீரத்தின் பல பாகங்களில் வை க்க அவற்றிலுள்ள நோய்நீங்கிச் சொஸ்தமாயினர். மேலும் மூடி யிலுள்ள இரும்பு வளையங்களில் கட்டியிருந்த நீண்ட கயிற்றைப் பலர் தமது சரீரத்தைச்சுற்றிக் கட்டிக்கொள்வதினுல் சொஸ்தமா யினர். ஆனுல் அந்த இடத்தில் பார்வைக்கு அசங்கிதமாகத்தோ

ன்றும் ரணங்கள், அங்கப்பழுது முதலிய அசுசியான ரோகங்களை யுடையவர்கள் வருகிறதில்லை. சில சமயங்களில் திரளான வியாதியஸ்தர்கள் தொட்டியைச் சூழநின்றுகொண்டு ஒருவர்கையை ஒருவர் சங்கிலிப்பின்னல்மாதிரி பிடித்துக்கொண்டு நிற்பர். அவர்களில் ஒருவன் தொட்டியினுள் விடப்பட்டிருக்கும் இரும்புக்கம்பியைத்தொட அங்குள்ள யாவருக்கும் அந்தக் காந்தசக்தி மின்சாரம்போல் ஊடுருவிப்பரவ அவர்களிலனேகர் கூச்சலிடுவர். சிலர் ரண்கள் சோர்ந்து மயக்கங்கொள்வர். சிலருக்கு வலிப்புகாணும். எவ்வித கீத ஓசைகளாலும் இவர்களைச் சாந்தப்படுத்த முடியாது. பெருநகை கொள்வோர் சிலர், கண்ணீர் விடுவோர் சிலர், கூக்குரலிடுவோர் சிலர், தெய்வமாடுகிறவர்களைப்போல் அங்குமிங்கும் விழுந்து அலமோதுவோர் பலர், இவ்விதமாகச்சிறிது நேரம் குழப்பமுண்டானபின் திடீரென்று அவர்கள் தத்தம் கைகளால் மற்றவர்களைத் தள்ளி உதறிவிட்டு வெறிமயக்கத்திலிருந்து தெளிந்தவர்கள்போல ஒருவரையொருவர் பார்த்து நகைக்க ஆரம்பிப்பர்.

சிலசமயங்களில் காந்தசக்தி யூட்டப்பட்ட இரும்புக் கம்பிகளை அல்லது கயிறுகளைத் தொட்டவுடன் அநேகருக்கு நடுக்கமும் அதிர்ச்சியும் உண்டாகி நோய்களுங்கூட சொஸ்தமாயின.

மற்றோர் அறையும் வெகு அலங்காரமாய் ஜோடிக்கப்பட்டிருந்தது. அதின் சுவர்களும் தரையும் பஞ்சுமெத்தைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தமையால் மிக்க மெல்லிதாகத் தோன்றின. இனிய சங்கீதவாத்தியம் மிக்க மிருதுவான இன்னிசையுடன் வாசிக்கப்பட்டது. கந்தர்வச்சங்களின் புகையின் வாசனை ஒருபக்கம் கமகமவென்று வீசிற்று. ஜாஸ்தி பிரகாசமும், ஜாஸ்தி இருளுமில்லாமல் அங்கங்கே தீபங்கள் ஏற்றியிருந்தன. இந்த அறையினுள் நாட்டிலுள்ள வியாதிக்காரரெல்லாம் வந்து கூடியிருப்பார்கள். சிலர் நோயின்வேதனை பொறுக்கமாட்டாமல் சுவற்றில் முட்டுவார்கள். வேறு சிலர் கீழேகிடந்து புரளுவார்கள். சிலர் திக்கு

முக்கடைத்து அழுவார்கள். அழுகையும் பற்கடிப்பும் கூக்குரலும் நிறைந்திருக்கும் சமயத்தில் ரமணீயமான நீணட அங்கி தரித்தவராகவும் கையில் மந்திரக்கோல் பிடித்தவராகவும் மெஸ்மர் என்பவர் ஓர் பக்க வாசலைத் திறந்துகொண்டு திடீரென்று உட்பிரவேசித்து அறையைச் சுற்றிவருவார். அற்ப சொற்ப நோயுள்ளவர்களின்பக்கத்தில் வந்தவுடன் அவர்களுக்கு நேராகத் தமது மந்திரக்கோலை நீட்ட அவர்கள் உடனே சுகமடைவார்கள். அதிகமாகக் கஷ்டப்படுகிறவர்களின் முன்வந்தவுடன் அவர்களினிரு கரங்களையும் தமது கைகளால் பிடித்துக்கொண்டு மத்திய விரல்களைப் பொருந்தச்செய்து அவர்களின் கண்களை ஊடுருவப்பார்த்துக்கொண்டு நிற்க, காந்தசக்தி அவர்களுக்குள் செல்லும். உடனே சுகமாகி ஆனந்தமுறுவர். வேறு சில சமயங்களில் தமது கைவிரல்களை விரித்துக்கொண்டு நோயாளியின்மேல் அதிதுரிதத்துடன் வீசிக் காந்தசக்தியைத் தெளிப்பார். இப்படிப் பலதடவைசெய்து அயர்ந்த நித்திரையுண்டுபண்ணி நோய்களைக் குணமாக்குவார். இவர் கி.பி. 1779-ம் ஹூ எழுதிய புஸ்தகத்தில் சர்வரோக நிவாரண சக்தியைத் தாம் கண்டுபிடித்திருப்பதாகக் குறிப்பிடுகின்றனர். அதிலவர் சொல்வதாவது :—

1. அண்டசராசரங்களிலுள்ள கிரகங்களிலும், பூமியிலும், ஜீவராசிகளிலு மிருந்து ஜீவகாந்தச் சக்தி வெளியேறிக்கொண்டிருக்கின்றது.

2. இந்தக் காந்த சக்தியானது சராசர மனைத்திலும் பரவி, இடைவிடாது நிறைந்திருக்கும் (சமுத்திரம்போன்ற) ஓர் வஸ்துவின் மூலமாய் ஒரு கிரகத்தி னிடமிருந்து மற்றக் கிரகத்திற்கும் ஒரு வஸ்துவிலிருந்து மற்ற வஸ்துவிற்கும் பாய்ந்துகொண்டிருக்கிறது.

3. சில இயற்கைப் பிரமாணங்களுக் கமைந்தே ஜீவகாந்த சக்தியானது ஓர் வஸ்துவிலிருந்து மற்றோர் வஸ்துவிற்குத் தாவு கின்றது.

4. இந்த சக்தியின் மூலமாகவே கிரகங்களுக்கும் பூமிக்கும் அதிலுள்ள வஸ்துக்களுக்கும் தொந்தபந்தம் ஏற்பட்டிருக்கின் றது.

5. இந்த ஜீவகாந்த சக்தியை ஓரேயிடத்தில் கூட்டிச்சேர்க் கலாம். ஓர் வஸ்துவிலிருந்து மற்றோர் வஸ்துவிற்கு மாற்றலாம்.

6. ஆனால் எல்லா வஸ்துக்களும் ஒரே மாதிரியாக ஜீவகாந்த சக்தியை ஏற்குந் தன்மையுடையனவல்ல. சில வஸ்துக்கள் ஏற் றுக்கொள்ளவேமாட்டா. அவ்வித கடினவஸ்துக்களின் முன்னு ள்ள வஸ்துக்களிலும் ஜீவகாந்தசக்தியை ஏற்றுவது கஷ்டமாகும்.

7. ஜீவஜெந்துக்களுக்குண்டாகும் நரம்பையடுத்த வியாதிக ளெல்லாவற்றையும் நேராகவே சுகமாக்குந்தன்மை காந்தசக்திக் குண்டு. மற்றவியாதிகளையும் ஒருவாறு சுகமாக்கலாம். வைத்தி யர்கள் இதன் தன்மையை அறிந்திருந்தால் நோய்களின் தன்மை, காரணம் முதலியவைகளை எளிதில் தெரிந்துகொண்டு அந்தந்த நோய்க்குத்தகுந்த சிகிச்சைசெய்ய ஏதுவாகும்.

மெஸ்மர் இந்த நவீன ஆராய்ச்சியை வெளிப்படுத்திய காலத் தில் திரளான ஜனங்களும் இராஜவம்சத்தார்களுங்கூட அவரிடத் தில் சிகிச்சைக்காகச் சென்றனர். 1785-ம் வூல் பிரான்சுதேசத் தரசன் வைத்திய சாஸ்திர சங்கத்தினரை மெஸ்மர் சொல்வது சரியோ, அல்லவோ, என்று தீர்க்கவிசாரித்துத் தெரிவிக்கும்படி சொல்லியிருந்தனர். இந்தசங்கத்தில் பெஞ்சமின் பிராங்கிலினும் ஒருவராக விருந்தனர். அவர்கள் தீர்க்க விசாரித்ததின் பின்னர்

மெஸ்மர்சொல்லிய விஷயங்களில் உண்மையேயில்லை. ஜீவகாந்த சக்தியால் நோய்கள் சுகமாக்கப்படுகின்றனவென்பதற்குப் போந்த ஆதாரமில்லை. ஜனங்கள் நோய்நீங்கிச் சொஸ்தமாவது அவரவரின் மனோசிருஷ்டியின் காரணமேயன்றி, வேறொன்றினாலுமன்று, என்று தீர்மானித்தனர். இந்த ரிப்போர்ட்டைப் பார்த்தவுடன் மெஸ்மர் மிக்க மனத்தளர்ச்சியுடன் பாரிஸ் பட்டணத்தைவிட்டு, ஜெர்மனிக்குச் சென்று, அங்கே சிலகாலமிருந்து 1815-ம் ஹு பெர்லின் பட்டணத்தில் தேகவியோகமானார்.

அவரின் சத்துருக்களிற் பலர் எழும்பி, அவரைப் பேராசைக்காரன், புரட்டுருட்டு செய்கிறவன், ஜனங்களை மோசம்பண்ணி வெகுபணத்தை அபகரித்தவன் என்று பலவாறாய் நிந்தித்தபோதிலும், அவர் மரித்தபோது அவரிடத்தில் பணமிருந்ததாகக் கண்டவர்கள் ஒருவருமில்லை. ஆகவே, அவர் ஏழைகளுக்குக் காண்பித்த இரக்கம் தானெடுத்த காரியத்தி னந்தத்தைக் கண்டுபிடிக்க அவரெடுத்துக்கொண்ட ஊக்கம், விடாமுயற்சி, முதலியவற்றிற்காக பெர்லின்நகரத்து வைத்தியரெல்லாருஞ்சேர்ந்து அவருக்கு ஓர் ஞாபகச் சின்னம் ஏற்படுத்தினர். அவருக்குப்பின் அவருடைய சிஷ்யர்களும் தாங்கள் கற்றுக்கொண்ட விஷயங்களை விடாமுயற்சியுடன் அப்பியாசித்து, நவீன ஆராய்ச்சியில் மனந்தளராது முயற்சித்து வந்தனர்.

டி. பூசிகர்.

மெஸ்மருடைய சிஷ்யர்களிலொருவரான டி. பூசிகர் (De Puysegur) என்பவர் க்ஷயரோகி யொருவனுக்குக் குளிரும், ஜ்வரமும் வருத்துகிற சமயத்தில், திடீரென்று அவனைத் தூங்க வைத்து அந்தக் குளிர் ஜ்வரம் தோன்றாதபடிக்குச் சந்தோஷமாக ஆடிப்பாடி யிருக்கச் செய்தனர். இவருக்கு மெஸ்மருக்கிருந்ததுபோல

முற்கோபமில்லை. மேலும், எதிரிகளைப் பகைக்கும் சுபாவமும் இல்லை. மெஸ்மரின் வைத்தியசாலைக்குச்செல்லும் ஜனங்கள் கோணக்கோண வலித்து ஆடி அலங்கோலமானார்கள். பூசிகரின் வைத்தியசாலைக்குப் போனவர்களோ ஆறுதலாகவும் அமைதலாகவும் தூங்கினார்கள். ஆதலால் பூசிகருடைய வைத்தியசாலைக்கு ஆயிரக் கணக்கான ஜனங்கள் வந்துகொண்டிருந்தார்கள். இவர் ஒரு பிரபுவாயிருந்தபடியால் தமது சொந்தநிலத்தில் பிரமாண்டமான வைத்தியசாலை ஒன்றுகட்டி, அங்கே மிக்க ஆறுதலுடனும், அமைதலுடனும், களங்கமற்ற இருதயத்துடனும் மானத வைத்தியமே செய்து தமது குருவைவிட அதிகமாகத் தேர்ச்சியடைந்து பிரக்யாதியும் பெற்றனர்.

இவர் நூதனமாகக் கண்டுபிடித்த விஷயம் யாதெனில், தூங்காமல் தூங்கும் நிலைமையி லிருக்கும் சிலருக்கு ஆழ்ந்த நித்திரையுண்டாகத்தக்கதாகத் தடவிக்கொடுத்துக்கொண்டிருந்தால் அவர்களுக்குத் தெளிவான மானத சிருஷ்டி யுண்டாகும் என்பதும், மறைந்த பொருட்களைக் கண்டுபிடிக்கவும் தூரதேசங்களில் நடக்கும் விஷயங்களைப் பார்த்துச் சொல்லவுங் கூடுமென்பதுவுமே. இதை அக்காலத்திலிருந்த ஜாலவித்தைக்காரர் பிடித்துக்கொண்டு அங்கங்கே சென்று பிரஜைகளைப் பிரமிக்கச் செய்தனர்.

பற்பல ஐக்கிய சங்கங்கள் (Harmonic Societies) ஆங்காங்கு எழும்பி அதியற்புத விநோத வேடிக்கைகள் காட்டத் தலைப்பட்டன.

1813-ம் வருஷத்தில் இந்தியாவி லிருந்து அப்பே பாரியா (Abbe Faria) என்பவர் பிரான்சுதேசஞ்சென்று அங்கே மெஸ்மர் சொன்னதெல்லாம் சரியன்றெனவும், தூங்காமல்தூங்கும் நிலைக்கு வருங் காரணம் மாந்திரீகனிடத்தி லன்றெனவும், நோயாளியினுடைய மூளையிலேயே இருக்கின்றதெனவும் வற்புறுத்திக் கூறினர்.

அதே வருஷத்தில் டி. லூயிஸ் (De-Leuze) என்பவர் ஜீவகாந்த சக்தி (Animal Magnetism) என்ற புஸ்தகத்தையும் பிரசுரஞ் செய்தார்.

மெஸ்மரிசத்தைப்பற்றிய ஆராய்ச்சியானது பிராஞ்சு தேசத்தில் மாத்திரமன்று. 1785-ம் வரு த்தில் ஜர்மன் தேசத்திலும் வைத்தியர்கள் சாஸ்திரோக்தமாய் இதனுண்மையைக் கண்டுபிடிக்கத் தலைப்பட்டனர். 1850-வருத்தில் ஐரோப்பா முழுவதிலுமே இந்த நவீன கிளர்ச்சி பரவிற்று. 1812-ம் வரு புருஷியர் ராஜ்ஜியத்தார் டாக்டர் வால்பர்ட் (Dr. Wolfart) என்பவரை மெஸ்மரிடம் அனுப்பி அவருடைய தொழிலி னுண்மையைப்பற்றித் தமக்குத் தெரிவிக்கக் கேட்டார்கள். அவர் மெஸ்மரிடஞ் சென்று அதிவாஞ்சையுடன் மெஸ்மரிச வித்தையைக் கற்றுத்தேறி புருஷியாவுக்குத் திரும்பிவந்து அப்பியாசஞ் செய்துவந்ததுடன் பெர்லின் யூனிவர்ஸிட்டியில் மெஸ்மரிச வித்தையைக் கற்றுக்கொடுத்தும் வந்தார்.

1825-ம் வரு பதினொரு தேர்ந்த டாக்டர்களை ஏற்படுத்தி ஜீவகாந்த சக்தியினுண்மையை ஆராய்ச்சி செய்யச் சொன்னார்கள். அவர்கள் ஐந்து வருஷங்களாக வெகு ஊக்கத்துடன் ஆராய்ச்சி செய்து தமது ரிப்போர்ட் எழுதி 1831-ம் வரு வெளியாக்கினார்கள். அந்த ரிப்போர்ட்டின் சுருக்கத்தை இங்குக் கூறுவாம்.

1. மாந்திரீகன் தன்துகரங்களால் நோயாளியின் பெருவிரலை அல்லது கைகளைத் தொடுவதாலும், நோயாளியைத் தொட்டு தடவிக் கொடுப்பதாலும், நோயாளியின் சரீரத்தைத் தொடாமலே அதனருகில் கைகளை விரித்து அசைத்து பாஸ் (Pass) செய்வதாலும் தன்னிலுள்ள காந்தசக்தியை நோயாளிக்குச் செலுத்தி வியாதியை நீக்கலாம்.

2. வெளிக்குப்பகிரங்கமாகத் தெரியத்தக்கதாக நோயாளியின்மேல் கைகளை விரித்து உதறித் தெளித்தெடுக்கவேண்டியது எப்பொழுதும் அவசியமில்லை. மாந்திரீகன் தனது காந்தப் பார்வையாலும் ஏகாக்ரசித்தத்தாலும் தன்னிடத்திலுள்ள காந்த சக்தியை நோயாளிக்குத் தெரியாமலே அவன்மேல் செலுத்திச் சுகமுண்டாக்கலாம்.

3. ஆண்பெண் யாவரும் வசியமாகத் தக்கவர்களே.

4. ஒரு நிமிஷமுதல் அரைமணி நேரத்திற்குள் அவரவரின் தன்மைக்கேற்ப மெஸ்மரைஸ் பண்ணப்படும் நேரமும் வித்தியாசப்படும்.

5. மெஸ்மரிசத்தால் சிலருக்கு சாந்தமான அமைதிநிலையும் வேறுசிலருக்கு மனதில்குழப்பங்களுமுண்டாகின்றன. இவைகள் அவரவரின் சுபாவத்தைப் பொருத்தவைகளாம்.

6. மின்சாரம் சரீரத்தில் பாய்ந்ததா லுண்டாகும் நடுக்கத்திற்கொப்பான ஓர்விததிகிலும், அயர்ந்த நித்திரையும், அசதியுமுண்டாகின்றன. கைகால்களின் நுனிகளில் ஓர்வித உஷ்ணமுந் தெரிகிறது.

7. மெஸ்மரிசத்தா லுண்டாகும் ஆழ்ந்த தூக்கத்தில் தூரதிருஷ்டி, சுயதிருஷ்டி ஆராய்ச்சி (Intuition), பிரக்ஞையற்றிருத்தல், திடீரென்று நினைத்தமாத்திரத்தில் தைரியம், வீரியம், சொல்லற்கரிய பெலன் முதலிய பல தன்மைகள் உற்பத்தியாகக் கூடும்.

8. ஒருவனை ஒரு தடவை மெஸ்மரைஸ் பண்ணித் தூங்கச் செய்துவிட்டால் மற்றசமயங்களி லெல்லாம் மாந்திரீகனின் ஒரு பார்வை அல்லது வார்த்தை அல்லது சைகையால் தூங்கச் செய்யலாம்.

9. மெஸ்மரிச தூக்கத்திலிருப்பவனைக் கூச்சலிட்டு இரைந்துகொண்டிருக்கும் எந்தக்கூட்டத்தில் நிறுத்தினுலும், தனது மாந்திரீகனின் சத்தத்தை எளிதில் தெரிநதுகொண்டு மாந்திரீகன் கேட்குங் கேள்விகளுக்கெல்லாம் விடைபகரக்கூடும. ஆனுல் அங்கே மற்றவர்களால் பேசப்படும் விஷயங்களொன்றும் அவன் காதில் ஏருது. ஒரு பெரிய மணியை அவன் காதின் பக்கத்தில அடித்தாலும் அவனுக்குக் கேட்காது. அவன் அவைகளைக் கவனிக்கவு மாட்டான்.

10. தூங்காமல் தூங்கும் நிலையிலிருப்பவனின் கணகள் மூடியிருந்தால் வெகு கஷ்டமாகவே அவனின் கணணிமைகளை மற்றவர்கள் திறக்கக்கூடும். அப்படித் திறந்துபார்த்தால் அவன் கண்விழிகள் மேல்நோக்கிச் சொருகியிருப்பனவாகத் தோன்றும்.

11. சிலசமயம் அவன் நாசியில் எவ்வித வாசனையும் ஏருது. எந்தக்காரமான வஸ்துவையும் அவன் நாசியின்முன் பிடித்தால் வாசனையே தெரியாது. சிலருக்கு வாசனை நன்ருய்த தெரியும்.

12. தூங்காமல் தூங்கும் நிலையிலிருப்பவர்கள் ஸ்மரணையென்பதே முற்றும் இல்லாதிருப்பதால் அவர்கள் கால்களைக் கிள்ளினுலும், எந்த இடத்திலும் ஊசியால் குத்தினுலும், ஒரு பாகத்தைக் கத்தியாலறுத்தாலுங்கூட அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது.

13. அவர்கள் கணகளை இறுக மூடிக்கொண்டாலும் அவர்கள்முன் வைக்கப்பட்டிருக்கும் வஸ்துக்களைச் சொல்வார்கள். அவற்றின் நிறம், சாயை முதலியவற்றையும் சொல்லக்கூடும். அவர்கள்முன் புஸ்தகத்தைத் திறந்துவைத்தால் வாசிப்பார்கள்.

14. அநேகரைப் பரீக்ஷைசெய்து பார்த்ததில் தூங்காமல் தூங்கும் நிலைக்குக் கொணடுவரப்பட்ட ஒரு ஸ்திரீ மாத்திரம் மற்

றவர்களுக்கு வியாதியுண்டாகுங் காலம், சுகமாகும் நாள், முதலிய வற்றை முன்னுரைக்குஞ் சக்திவாய்ந்தவளா யிருந்தனள்.

15. மெஸ்மரைஸ் பண்ணப்பட்ட சிலருக்கு நோய் சுகமாக வில்லை. சிலருக்கு வேதனை நீங்கிவிட்டது. சிலர் இழந்துபோன தமது பெலனைத் திரும்ப பெற்றுக்கொண்டார்கள். காக்கை வலி யுள்ள சிலர் முற்றிலும் நீங்கிச் சுகமாயினர். வெகு நாள் திமிர் வாதத்தால் கஷ்ட மடைந்தவர்களையும் முற்றிலும் சுகமாக்கியிரு க்கிறோம்.

இந்த ரிப்போர்ட் வெளியானபின்பும் அனேகர் எழும்பி ஒரு வன் கண்களை ஓர் துணியால் கட்டிவிட்டு, "உனக்குச் சுகமான நித்திரையை உண்டாக்கும் காந்தக்கருவியை உன் பக்கத்தில் வை த்திருக்கிறோம், நீ நிச்சயமாகவே தூங்குவாய்" என்றுசொன்னால் அவன் தன் பக்கத்தில் காந்தக்கருவியிருக்கிறது அதனால் தனக்கு நித்திரையுண்டாகும் என்ற யோசனைக்குறிப்புகளை நம்பித் தூங்கி விடுகிறான். அதே விதமாக அவன் பக்கத்தில் காநதக் கருவியை வைத்துவிட்டு, "உன் பக்கத்தில் காந்தக் கருவியொன்றும் வைக் கப்படவில்லை" என்று சொன்னால், தனக்கு நித்திரையை உண்டா க்குங்கருவி தன் பக்கத்திலில்லை தனக்கு நித்திரை யுண்டாகாது என்ற யோசனைக் குறிப்பை அவன் நம்புவதால் அவனுக்கு நித்தி ரையே வருகிறதில்லை. ஆதலால் காந்த சக்தியினால்மட்டும் நித்தி ரை வருகிறதென்பது பொய்.

காந்தசக்தி ஒரு மனிதனிலிருந்து மற்றவனிடஞ் செல்லுகிற தென்பது சரியானகொள்கையல்ல. அதை ரூபிக்கப் போதுமான ஆதாரங்களில்லையென்றே சொன்னார்கள்.

1864-ம் வருஷம் பெரிலாக்கோர்டேயர் என்ற கிறிஸ்தவ பாதிரி யார் மெஸ்மரிசத்தின் மூலமாகவே அளவற்ற ஞானமுள்ள தெய்

வத்தின் மகிமையும் சக்தியும் மனிதருக்கு வெளியாகும் என்று பிரசங்கஞ் செய்தனர்.

1856-ம் வருஷம் ரோமாபுரியின் போப்புவானவர் குருமார் மெஸ்மரிச வித்தையை அப்பியாசிக்கக் கூடாதென்று பிரசுரஞ் செய்தனர். ஆனுல் அதை ஒருவரும் கவனிக்கவில்லை.

பிராஞ்சு ஜெர்மனி முதலிய தேசத்தவர்கள் நூதன விஷயங்களைக் கண்டுபிடிப்பதில் வெகு ஆத்திரத்துடன் ஆராய்ச்சி செய்து மிகுதியான பணங்களைச் செலவிடுவர். இங்கிலீஷ்காரர் ஆரம்பத்தில் அஜாக்ரதையா யிருந்துவிட்டு மற்றவர்கள் மிக்க பணவிரயத்துடனும் பிராணசேதத்துடனும் கண்டுபிடித்த விஷயங்களைச் சிறிதுகாலத்திற்குள் கற்றுக்கொள்ளுந் தன்மை யுடையவர்கள்.

1837-ம் வருஷம் டாகடர் எலியட்சன் என்ற ஆங்கிலேயர் இந்த வித்தையைக்கற்று ஆஸ்பத்திரியிலுள்ள நோயாளிகளின்மேல் அப்பியாசித்துவந்தனர். ஆனுல் அங்குள்ள வைத்திய சங்கத்தார் அவரைப் பைத்தியக்காரனென்று பரியாசஞ் செய்தனர். அவர் தமது வேலையை ராஜிநாமா செய்துவிட்டுச் சொந்தத்தில் தூரசிரவணம் (Clairvoyance), கபால்சாஸ்திரம் (Phrenology) முதலியவைகளை ஆராய்ச்சி செய்துவந்தார். அதற்காக அவரை இங்கிலாந்தில் இம்சை செய்தார்கள்.

டாக்டர் பிரேயிட்.

மேன்செஸ்டர் நகரிலுள்ள டாக்டர் பிரேயிட் (Dr. Braid) என்பவர் வெகு நுண்ணிய சாஸ்திராராய்ச்சிசெய்து 1843-ம் வருஷத்தில் (Neurypnology) "நரம்புசக்தி" என்ற சாஸ்திரம் ஒன்று எழுதினர். அதில் அவர் சொல்வதாவது:—

1. ஒருவனைத் தூங்காமல் தூங்கும் நிலைக்குக் கொண்டுவருவதற்கு மாந்திரீகனின் ஜீவகாந்தசக்தி அவசியமன்று.

2. சரீரத்தினது நரம்புகள் தளர்ச்சியடைந்தவுடனே எவனுக்கும் நித்திரை உண்டாகக்கூடியது.

3. ஒருவன் யாதேனுமோர் வஸ்துவைத் தனது கண்களை நிமைக்காமல் பார்த்துக்கொண்டு ஒரே கருத்தாய் "தூங்கவேண்டும்" என்று சிந்தனை செய்துகொண்டிருப்பானாயின் அவனது கண்களின் நரம்புகள் இளைத்துக் களைத்துத் தளர்ச்சியடையவே, தன் கண்களை மூடிக்கொண்டு நித்திரை செய்வான்.

4. யோசனைக்குறிப்பு வசனங்களாலும் ஒருவனுக்குத் தூக்க மயக்கத்தை யுண்டுபண்ணலாம்.

5. தூங்காமல் தூங்கும் நிலையி லிருப்பவனின் சரீரத்தின் பாகங்களை எந்தெந்தவிதமாகவைக்கிறோமோ அந்தந்த மாதிரியாசக் குணக்குறிகள் தோன்றும். உ-தாரணமாக, கோப மீறினவன் செய்வதற் கொப்பாக அவனுடைய கைகளைக்குவித்துவைக்க அவனுக்குடனே கோபமுண்டாகும். அதேவிதமாக அன்பின் அடையாளங்களால் அவனில் அன்புண்டாகச் செய்யலாம். அவன் கையை நெற்றியில் தூக்கிவைத்தால் தாழ்மையோடுவணங்குவான். இருகைகளையுங் குவித்து கும்பிடும்பாவனையில் வைத்தால் வணக்கத்துடன் கும்பிடுவான்.

பிரேயிட் என்பவரே ஹிப்னடிசத்தை முதலாவதாக சத்திர வைத்திய (Surgery) த்திற்கு உபயோகித்தவர். இவரே ஹிப்னடிசம்—தூங்காமல் தூங்கும்நிலை அல்லது யோக நித்திரை என்ற பதத்தை முதலாவதாக உபயோகித்தவர். ஆனால் டாக்டர் எலியட்சனைப்போல் தனக்கும் ஆபத்து நேரிடக் கூடியதென் றஞ்சித்

தமது ஆராய்ச்சியை அதிகமாய் பிரபல்யப் படுத்தவில்லை. சிறிது காலத்திற்குப்பின் ஜெர்மனி, பிரான்சு, அமெரிக்கா முதலிய தேசத்தார்கள் டாக்டர் பிரேயிட் வெளிப்படுத்தின ஹிப்னடிசத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்யத் தொடங்கி அனந்தம் புஸ்தகங்களைப் பிரசுரஞ் செய்தார்கள்.

டாக்டர் லிபால்ட்.

1866-ம் வருஷத்தில் பிரான்சு தேசத்தில் (Dr. Libault of Nancy School) டாக்டர் லிபால்ட் என்பவர் "யோசனைக் குறிப்புகளால் மாத்திரமே ஒருவனுடைய வியாதியைச்சொஸ்தப்படுத்துவது சாத்தியமென" ஓர் புஸ்தகமெழுதினார். அதைக்கவனிப்பார் ஒருவருமில்லை. பார்த்தவர்களெல்லாம் நகைத்துப் பரியாசம் பண்ணினார்களேயன்றி ஆராய்ச்சி செய்து அவர் சொல்லியதில் உண்மை ஏதேனுமுண்டோவென்று பார்ப்பவர் ஒருவருமில்லை. ஆனால் 1884-ம் வருஷத்தில் (Bernheim) பேர்ன்ஹேயிம் என்பவர் "யோசனைக் குறிப்பு" என்ற புஸ்தகத்தைப் பிரசுரஞ் செய்தார். இவரும் லிபால்ட் உடன் நான்சி ஸ்கூலில் ஆராய்ச்சி செய்தவரே. யாதலின் சிறிது காலத்தில் பிரான்சு தேசத்திலுள்ள மாந்திரீகர்களெல்லாம் (Hypnotists) நான்சி ஸ்கூலில் கூடினார்கள். அங்கே பலவித தர்க்கங்களுண்டாக அவர்கள் இரு கக்ஷிக்காரராய்ப் பிரிந்தார்கள். ஒரு சாரார் (Charcot) சார்காட் என்பவர் பக்கத்தைச் சார்ந்து யோகநித்திரையானது ஓர்வலிப்புநோய் (Hysteria) இது நரம்பைச்சேர்ந்தது. இதின் ஸ்தானம் மூளை. யோசனைக் குறிப்புகளால் ஆகக்கூடியதொன்றுமில்லையென்றனர். மற்றோர் சாரார் லிபால்ட், பேர்ன்ஹேயிமைச் சார்ந்து எல்லாம் மனதின் செயலே. யோசனைக் குறிப்புகளால் மனதை வசியஞ் செய்யலாம். ஒருவன் விழிப்பு நிலையிலிருக்கும்போதுங்கூட யோசனைக் குறிப்புகளால் அவனைச்சுகமாக்கலாம் என்றனர். லிபால்ட் வகையாரே கடைசி

யில் ஜெயமடைந்தனர். அவர்கள் கொள்கை ஐரோப்பா முழுவதிலும் உலகமெங்குமே பரவத்தலைப்பட்டது.

இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் மனோதத்துவ ஆராய்ச்சிச் சங்கங்கள் (Psychic Research Society) ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றில் உலகப்பிரசித்திபெற்ற டாக்டர்களும் மனோதத்துவ சாஸ்திரிகளும் ஆராய்ச்சிசெய்து வருகின்றனர்.

வைத்தியத்தொழில் செய்யும் ஒவ்வொருவரும் தற்காலத்தில் ஹிப்னடிசம் என்ற சாஸ்திரத்தைக் கட்டாயங் கற்றுக்கொள்ள வேண்டுமென்பதே ஷை சங்கங்களின் அபிப்பிராயம்.

தற்கால சாஸ்திரிகள் மெஸ்மர் செய்த பிரகாரம் தாடனம் செய்து தடவிக்கொடுப்பதுடன் நான்சி ஸ்கூலைச் சேர்ந்தவர்களின் அபிப்பிராயப்படி யோசனைக் குறிப்பு வசனங்களை உபயோகிப்பதாலும் தூங்காமல் தூங்கும் நிலைகருக் கொண்டுவருகிறார்கள்.

2-வது பாடம்.

சூக்ஷ்ம தேகம்.

(The Transliminal.)

ஆனந்தசாகரன்:—அன்புடையீர்! சூக்ஷ்மதேகமாவதியாது? அதன் கிரியைகளென்ன?

சர்வகலாநிதி:—ஸ்தூல தேகத்துக்கடுத்துவைகட் கப்பாலுள்ள சூக்ஷ்ம தேகத்தைச் சேர்ந்தவை (Across the threshold).

நாம் ஜாக்ரத்தில் (விழிப்பு நிலையிலிருக்கும்பொழுது) உணரும் உணர்ச்சிகளும் செய்யுங் கிரியைகளும் அறியும் அறிவும் ஸ்தூல தேகத்தைச் சேர்ந்தன. ஐம்புல அறிவுக்கெட்டாத ஆவிக்குரிய விஷயங்கள் சூக்ஷ்ம தேகத்தைச் சேர்ந்தவை. ஆகவே நாம் ஏக காலத்தில் இரண்டு உலகங்களில் வசிக்கிறோம். நாம் விழிப்பு நிலையிலிருக்கும்பொழுது ஐம்புலாதிகளின் மூலமாய் ஸ்தூல உலகத்திலுள்ளவைகளைக் கிரகிக்கின்றோம். நித்திரையிலிருக்கும்பொழுது ஆன்மாவின் மூலமாய் சூக்ஷ்ம உலகத்திலுள்ளவைகளைக்கிரகிக்கின்றோம். ஸ்தூலதேகத்தின்மூலமாய் ஸ்தூல உலகத்தைக் கிரகித்து அதனோடு சம்பந்தப்பட்டிருக்கும் மனிதன் தனது ஆன்மாவாகிய சூக்ஷ்மதேகத்தால் கடவுளோடு சம்பந்தப்பட்டிருக்கிறான். ஜகதீசரின் அம்சமாகிய ஆன்மா மேலான விஷயங்களையே நாடித் தேடும். இதற்கு நமது சரீரத்தை அடக்கி ஆளும் வல்லபம் மிகஉண்டு. நமது சரீரத்திற்கு நேரிடக்கூடிய அநேகவித நோய்களையுஞ் சொஸ்தமாக்கும் வலிமை இதற்குண்டு. பால் மகா முனிவர் கலாத்தியருக்கு எழுதின நிருபம் 5-ம் அதிகாரம் 16-26 வரை சொல்லியிருப்பது இந்த சூக்ஷ்ம தேகத்தின் சிறந்த மகிமைப் பிரதாபத்தையும் மகாவல்லமையையும் குறித்தே. அவர் சொல்வதாவது, "ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள். அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றீர்கள். மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்திற்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கின்றன. மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன. அவையாவன, விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகை, விரோதம், வைராக்கியம், கோபம், சண்டை, பிரிவினை, மார்க்கபேதம், பொறாமை, கொலை, வெறி, களியாட்டு முதலானவைகளே. இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று

முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சை யடக்கம். இப்படிப் பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை. கிறிஸ்துவி னுடையவர்கள் தங்கள் மாம்சங்களையும் அதன் இச்சைகளையும் சிலுவையிலறைந்திருக்கிறார்கள். நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால் ஆவிக்கேற்றபடி நடக்கவுங் கடவோம். வீண் புகழ்ச்சியை விரும்பாமலும் ஒருவரையொருவர் கோபமூட்டாமலும் ஒருவர்மேலொருவர் பொறாமை கொள்ளாமலு மிருக்கக் கடவோம்."

நமக்குள் வாசஞ்செய்யும் ஆவியாகிய இந்த உள் மனிதனைச் சரியானபடி தூண்டி ஏவுதல்செய்தால் இப்பூலோக ஜீவியத்தைப் பரலோக பாக்கியமாக்கி கடவுளுக்குச் சமானமாகும் நிலைமையை யடைவோம். "உங்கள் பிதா பூரண சற்குணராயிருப்பதுபோல, நீங்களும் பூரணசற்குணராயிருக்கக்கடவீர்கள்" என்றார் கிறிஸ்து. (Be ye perfect, even as your Father.) யோவான் 5: 4.

ஐம்புலாதிகளுக்கடுத்த வெளிமனம் நித்திரை செய்கையில் உள்மனதைக் கிரியை செய்ய ஏவிவிடின் அது செய்து முடிக்கக் கூடிய அபாரசக்தியை விளக்கும்பொருட்டு இவ்வளவு சொன்னேன். இனிமேல் ஒருவன் அயர்ந்து நித்திரை செய்கையில் அவனிடத்தில் அனுதாபமும் விசுவாசமுமுள்ள ஒருவர் அல்லது அவன்தானே தகுந்த யோசனைக்குறிப்பு வசனங்களை உபயோகிப்பதால் உள்மனதைக் கிளப்பிவிட்டு வேலைவாங்கும் விதத்தைப்பற்றி சொல்வேன். டாக்டர் குவேகன்பாஸ் M. D. ஏறக்குறைய ஏழாயிரம் பேருக்கு யோகநித்திரை யுண்டாக்கி நோய்களைச் சொஸ்தமாக்கியதுடன் அவர்களின் சூக்ஷ்மபேதகமாகிய உள் மனதின் கிரியைகளையும் வல்லமையையும் பரீக்ஷித்துப் பார்த்திருக்கிறார். அவர்

சொல்வதாவது "வாயினல் அல்லது மனதினல் உச்சரிக்கப்படும் யோசனைக்குறிப்புகளால் ஞானம், பக்தி, விசுவாசம், சுய அடக்கம், மேலான கோரிக்கைகள், உன்னதபதவி யடையவேண்டுமென்ற ஆவல், சிருஷ்டிக்கும் சக்தி முதலியவைகளை சூக்ஷ்ம தேகததிலிருந்து ஸ்தூலதேகத்துக்குள் சென்று கிரியை செய்யும்படி ஏவிவிடலாம்." (Suggestion of either kind, whether verbal or mental, reveals itself as a means through which may be effected the transfer of knowledge, faith, self-command, ideals, aspiration, and creative power, from the transliminal to the supraliminal sphere, from the sphere that is richly endowed to the nature that is starving for spiritual energy.)

1. யோசனைக்குறிப்புகளாகிய வித்தை மற்றவர்களின் மனதாகிய நிலத்தில் ஊன்றும்பொருட்டு அவர் கையாடிவந்த உபாயங்களாவன :—

2. அறையிலுள்ள ஓர் வஸ்துவை அல்லது பிரகாசமான ஓர் ஆபரணத்தைக் கண்ணிமைக்காமல் பார்ததுக்கொண் டிருப்பதால் கண்களை களைக்கச் செய்வது.

3. மாந்திரீகனல் தனக்கு நன்மை உண்டாதக்கூடுமென்ற நம்பிக்கையை நோயாளியின் மனதிலுதிக்கச் செய்வது.

தூக்கத்தை யுண்டாக்கும் யோசனைக் குறிப்பு வசனங்களை மெதுவாய் உச்சரித்துக்கொண் டிருப்பதால் கண்களின் தசை நரம்பு தளர்ச்சியடைய, கண்கள் வெறும்னே பார்க்க காதுகளில் சப்தம்விழாமல் செவிடுபோலிருக்க, மூளையில் எண்ணங்கொன்றும் பிரவேசியாமல் வெறும் பாண்டமாகி, மனதானது யாதொன்றை

யும் யோசியாமல் வெறுமனேயிருக்க, அசதிமேலிட, அயர்ந்த நித்திரைக்குள்ளாக்குவது.

Methods of inducing the Suggestible state are:—

1. Establishment of patient's confidence in Operator's desire and ability to extend aid. (Rapport must be consensual).

2. Arrest of the visual attention by a brilliant jewel or some object in the room

3. Monotonous sleeping suggestions-the several steps being, relaxed eye muscles, vacant stare, indolent audience, passive brain, blank objective mind, the state of mental abstraction called *Reverie*, sleep.

3-வது பாடம்.

நித்திரையே யோசனைக்குறிப்பு பதியுஞ் சமயம்.

(Sleep as the Suggestible State).

ஆனந்தசாகரன்:—சுவாமி! யோசனைக்குறிப்புகள் நோயாளியின் மனதில் பதிவதற்குத் தகுந்த சமயம் நித்திரை மயக்கமே என்று தாங்கள் அடிக்கடி சொல்லிவந்திருக்கிறீர்கள். அதன் கருத்து எனக்கு விளங்கவில்லை. ஒருவன் நித்திரை செய்கையில்

அவனிடத்தில் உச்சரிக்கப்படும் மந்திரம் எப்படி அவன் மனதில் பதிந்து பலன்கொடுக்கக் கூடியது? அதைச் சிறிது அடியேனுக்கு விளக்க அஞ்சலி செய்கின்றேன்.

சர்வகலாநிதி:—ஆனந்தா! குடைநிழலிருந்து குஞ்சர மூரும் முடிமன்னர்முதல் ஏழைகளீருயுள்ள சகல மனிதருக்கும், மஹா தபோதனரான ரிஷிகள், முனிவர்கள் முதலிய தேவாநுக்கிரக சிரேஷ்டர்களுக்கும், மற்றும் ஜீவபேதங்கட்கும், விருக்ஷங்கட்கும் நித்திரையே ஜீவாதாரத்தையும் பெறுதற்கரிய இன்பத்தையும் சுக த்தையும் விளைவிக்கக் கூடியதாயிருக்கின்றது.

நித்திரா சர்வவியாபி
பரமேஸ்வர்க்கீ ஓர்மாயா.

பரமேஸ்வரன் அண்டகோடி சராசரமனைத்திலும் ஏகவெளி யாய் வியாபித்திருப்பதுபோல நித்திரையானது இவ்வுகை மெங்க ணும் வியாபித்திருக்கும் ஓர் மாயை. நித்திரையி லிருக்கையில் பஞ்சேந்திரியங்கள் அலுத்தயர்ந்து தங்கள் தொழில்களைச் செய் யாது அமர்ந்திருக்கின்றன. சரீரத்தின் சக்திகள் குன்றி அவயவ ங்கள் யாதொரு வேலையுஞ் செய்ய ஏலாம லிருக்கின்றன. சரீரத் தின் தசை மாம்சங்கள் தளர்ச்சியடைந்து கண்கள் பாராமலும் காதுகள் கேட்காமலும் மந்தமடைகின்றன. இரத்த ஓட்டங் குறைந்து இருதயம் மெதுவா யடிப்பதால் நாடி நரம்புகள் மெது வா யடிக்கின்றன. உசுவாச நிசுவாசங்களுங் குறைந்து நெஞ்சுக் குள்ளேயே மெதுவான மூச்சு கிளம்பிக்கொண் டிருக்கின்றது. ஒருவன் விழிப்பு நிலையிலிருக்கையில் சுவாசிக்கும் ஆகாயத்தில் ஏழிலொருபாகமட்டுமே நித்திரை காலத்தில் சுவாசிக்கின்றான். சரீரத்தினின்று வெளியாகும் ஜலமலாதி முதலிய அழுக்குகளில் வியர்வை தவிர மற்ற விஸர்க்கங்களெல்லாம் வெளியேறு திருக்கி ன்றன. சரீரத்தின் உஷ்ணங்குறைந்து நரம்புகளினுணர்ச்சிகுன்றி

மூளைக்குச்செல்லும் இரத்தமும் மிகக் குறைந்துபோவதால் நித்திரை காலத்தில் இவ்வுலகத்தைப்பற்றிய அறிவுகளெல்லாம்மழுங்கி மறைந்து போகின்றன. ஐம்புலன்களுமடங்கி வெளிமன மயர்ந்து சகல கருமங்களையும் மறந்து ஸ்மரணையற்று நித்திரை செய்யுங்காலமே சரீரத்தின் ஒவ்வொரு அவயவங்களும் இளைப்பாறுவதற்கும் பழுதுபட்ட மாம்சாம்சங்கள், திருத்தப்படுவதற்கும் தகுதியான சமயம். விழித்திருக்கையில் சரீர சக்தியை ஏராளமாய் உழைப்பிலும் நினைப்பிலும் செலவிடுவதால் ஆயாசமும் கஷ்டமும் இளைப்புமுண்டாகின்றன. நித்திரையில் அவயவப்பழுதுகள் சீர்திருந்தி சக்தி அதிகரிக்கின்றது. நாம் எவ்வளவு உழைக்கின்றோமோ அவ்வளவுக்கு சக்திகுன்றி களைப்புண்டாகின்றது. அதாவது சரீரத்தில் நுண்ணிய அம்சங்கள் பழுதாகி அழுக்காகமாறி இரத்தத்தில் கலந்து அழுக்கு இரத்தம் மூளையில் பிரவேசித்தவுடன் நஞ்சாக மாறி மூளையை கிரியை செய்யவொட்டாமல் மழுக்கவே, களைப்புண்டாகி நித்திரை வந்துவிடுகிறது. இதைப் பரீக்ஷிக்கும் பொருட்டு ஓர் அமெரிக்க டாக்டர் மிகவும் அலுத்து இளைத்துப் போயிருக்கும் நாயினுடைய நாளத்தில் செல்லும் உதிரத்தை குழாய்களின் மூலமாய் ஓர் துடுக்கான நாயில் செல்லவிடவே அத்துடுக்குள்ள நாய் உடனே மூலை தேடிப்போய் படுத்து நித்திரை செய்தது. சரீரத்திற்கு இளைப்பை உண்டாக்கும் விஷ அழுக்குகளை இரத்தத்தினின்றும் நீக்கி சுத்திசெய்துவிட்டால் நமக்கிருந்த ஆயாசமும் வருத்தமும் நீங்கி மறுபடியும் வேலைசெய்ய உற்சாக முண்டாகின்றது. ஆகவே, நித்திரையால் இளைப்பாறுதல் மட்டுமன்று. நாமுட்கொள்ளும் அன்னபானாதிகளின் சத்து சரீரத்தினம்சங்களில் சேர்ந்து உறுதியுண்டாக்கும் சமயமுமாகின்றது. நித்திரையில் ஸ்தூலதேகத்துக் கடுத்த முன் மூளையும், பஞ்சேந்திரியங்களும், வெளிமனமும் அடங்கி அமர்ந்திருக்கின்றன. ஆனால் மனிதனிடத்துள்ள சூக்ஷ்ம பாகமாகிய உள்மனம் வெகு ஜாக்ரதையுடன் தொழில்புரிய ஆயத்தமாயிருக்கின்றது. ஜாக்ரத்தில் ஒருவனு

டைய கவனம் பற்பலகாரணங்களால் சிதறிப்போவதால் எதையும் ஆழ்ந்து ஊன்றி யோசிக்கவாவது செய்யவாவது முடியாது. சொர்ப்பன ஸ்திதியிலோ நோயாளியின் கவனத்தை ஒரே நிலையில் நிறுத்தலாம். மனக்காக்ஷியும் மானத சிருஷ்டிப்பும் வெகு உன்னத நிலையை அடைகின்றன. நித்திரை காலத்தில் உள்மனதின்கவனத்தை கூர்மையாக்குவதும் நாம் விரும்பிய காரியத்திலேயே அதை நிறுத்துவதும் மிக்க எளிது. ஆகவே விழிப்பு நிலையில் செய்து முடிக்கக்கூடாத அநேகவிஷயங்களை நித்திரையில் செய்துமுடிக்கலாம். சொர்ப்பனுவஸ்தையி லிருக்கிறவன் சூக்ஷ்ம லோகத்தில் வசிக்கின்றான். அவனது உள்மனமானது சூக்ஷ்மலோகத்தில் சஞ்சரித்து ஜாக்ரத்தில் விளங்காத அனந்த விஷயங்களை மிகத் தெளிவாக்குகின்றது. உதாரணமாக வரப்போகிற விஷயங்களை முன்னதாகவே தெரிவிக்கின்றது. தூரத்தில் நடக்கும் விஷயங்களைப் பற்றி அறிவிக்கின்றது. மறைந்த பொருள்களை வெளியாக்குகின்றது. அறிவையும் ஞாபக சக்தியையும் கூர்மையாக்குகின்றது. இவவிஷபங்களெல்லாம் உண்மையென மனேவசிய சாஸ்திராராய்ச்சிச் சங்கத்தினர் கண்டுபிடித்திருக்கின்றனர். ஆதலால் சொர்ப்பனங்களெல்லாம் நித்திரையிலுண்டாகும் மனக்குழப்பத்தின் பயனே யென்று சொல்வதிற்கிடமில்லை. ஆகவே, நித்திரை காலமே 'நான்' என்ற ஆத்மா அல்லது உள்மனமானது சுதேச்சையாய் யாதொரு இடையூறுமின்றித் தன் தொழிலை வெகு மும்மரத்துடன் நடப்பிக்கும் சமயமாகின்றது. ஆதலால் ஒருவன் நித்திரை மயக்கத்தி லிருக்கையில் அவனுடைய உள் மனதை கிரியை செய்ய ஏவுவதற்குத் தகுந்த யோசனைக்குறிப்பு வசனங்களை உச்சரித்துக் கொண்டிருந்தால் செவிட்டு விரியனைப்போல் அசதி யுற்றிருந்த உள் மனமானது விழித்துக்கொள்ளும். அதன்பின்பு நாம் அதை என்ன செய்யச்சொல்லி ஏவுகிறோமோ அந்தப்படிசெய்து முடிக்க வெகுவினயத்துடன் காத்திருக்கும். ஆதலால் ஒருவன் நித்திரை

மயக்கத்தி லிருக்கும்பொழுது சமயோசிதமான யோசனைக்குறிப்பு வசனங்களை உச்சரித்துக்கொண் டிருப்போமாயின், அவனுடைய உள்மனமானது யாதொரு ஆலோசனையுமின்றி அவற்றை ஏற்றுக் கொண்டு, உடனேகிரியைசெய்ய ஆரம்பிக்கின்றது. இவ்விதமாக ஒருவனின் நோய்களை சொஸ்தமாக்கும் பொருட்டும் அவன் நடவடிக்கைகளில் சீர்திருத்த முண்டாக்கவும் அவனுக்குத் தூரதிருஷ்டி முதலியவைகளை உண்டாக்கும்பொருட்டும் மந்திரோச்சாடனம் செய்வதற்குத் தகுந்தகாலம் அவன் நித்திரை மயக்கத்திலிருக்கும் பொழுதேயாம்.

4-வது பாடம்.

ஆனந்தசாகரன் :—அருள் நிறைந்தோங்கும் என் அருமைக் குருவே! ஒருவனுக்கு யோகநித்திரை உண்டாக்கும் பொருட்டு மாந்திரீகன் கையாடவேண்டிய ஏதுக்களெவை.?

சர்வகலாநிதி :—நித்திரையை யுண்டாக்கக்கூடிய விசேஷித்த ஏதுக்கள் எவையெனில்—சப்தம் வெளிச்சமுதலிய ஐம்புல உணர்ச்சிகளைக் கிளப்பிவிடுவதற் கேதுவில்லாத ஏகாந்தமான தனித்த இடம் மிக நன்று. ஏற்றத் தாழ்வில்லாமல் ஒரே விதமாகத் தோன்றும் சப்தத்தினாலும் காட்சியாலும்நித்திரை எளிதிலுண்டாகும் தாய்மாரின் தாராட்டைக்கேட்டுப் பிள்ளைகள் தூங்குவதும் யாதேனும் ஓர் காரியத்தைப் பார்த்துக்கொண்டிருப்பவனுக்கு அல்லது கேட்டுக்கொண்டிருப்பவனுக்கு தூக்கம் வருவதும் இதனாலேயே. ஒரேவித காட்சியால் அல்லது பாடலால் அல்லது மந்திரோச்சாடனத்தால் மெதுவாகத் தூக்க நிலைமைக்குட்படு மொருவனை

நோக்கி; "நீ தூங்குகிறாய். உன் சரீர மனோசக்திகள்யாவும் இளைத்துக் களைத்துப்போயின. உன் கண்கள் இருண்டு ஐம்புல அறிவுகள் ஒடுங்குகின்றன. நான் சொல்வதைத் தவிர மற்ற எந்த சப்தமும் உன் காதில் எறாது. நிச்சயமாகவே நீ தூங்குகிறாய். உன் மூளையும் மனமும் வெறுமனே இருக்கின்றன. உன் மனதில் ஒரு நினைவுந் தோன்றாது. நீ தூங்குகிறாய் தூங்கு-கி-றா-ய் தூங்குகிறாய்" என்று மெதுவாகவும், உறுதியாகவும் மாந்திரீகன் உச்சரித்துக்கொண்டிருந்தால் நோயாளி தூங்கிவிடுவான். இந்த நிலைக்கு சொர்ப்பனாவஸ்தையென்று பெயர். என்னிடம் சிகிச்சைக்குவரும் நோயாளிகளுக்கு நான் செய்யும் விஷயங்களை ஒவ்வொன்றாக உரைக்கின்றேன். அவைகளை நீ கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு நீயும் அப்படியே செய்வாயாயின் எவ்விதமும் சித்தியடைவாய். தைரியத்தைமட்டும் கைவிடாதே. (Screw your courage to sticking place and you will not fail.) ஆரம்பத்தில் எந்த வித்தையும் சிறிது கஷ்டமாகவே தெரியும். ஆனால்,

சித்திரமுங் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம்.

என்பதுபோல் அப்பியாசத்தினால் ஆகாததொன்று மில்லை. என்னிடம் சிகிச்சைக்கு வருபவர்களிடம் இரண்டொரு மணிநேரமாக வெகு சந்தோஷத்துடனும் அனுதாபத்துடனும் பேசிக்கொண்டிருப்பேன். அப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் அவனுக்கிருக்கும் கஷ்டநஷ்டங்கள் நோய் நொம்பலங்கள் அவன் மனதில் குடிகொண்டிருக்கும் விருப்ப வெறுப்புகள் அவன் வந்திருக்கும் நோக்கம் முதலியவைகளை யெல்லாம் கிரகித்துக் கொள்வேன். அதோடு நான் ஓர் பெரிய மாந்திரீகன் என்பதையும், நோயாளிக்கு உண்மையாகவே நன்மைசெய்யவிருப்பங்கொண்டிருக்கிறேன் என்

பதையும், அவனுடைய நோயைக் குணமாக்கும் வல்லமை எனக்குண்டென்பதையும் அவன் நம்பி விசுவாசிக்கத் தக்கதாக நடந்து கொள்வேன். அவனுக்கு என்னுடைய திறமையில் பூரண நம்பிக்கையுண்டாகிவிட்டதென்று கண்டவுடன் அவனை ஓர் சாய்மான நாற்காலியில் அல்லது வசதியான படுக்கையில் நன்ருய்ச் சாய்ந்து கொள்ளும்படி செய்துவிட்டு அவன் கண்களுக்கும் காதுகளுக்கும் களைப்புண்டாகத் தக்கவிதமாக தாராட்டுப்போல் மனோகர நித்திரையை யுண்டாக்கும் வசனங்களை அமைதலும் ஆறுதலுமான சப்தத்துடன் முன் சொல்லியபடி உச்சரித்துக்கொண்டிருப்பேன். மேலும் அவனுக்கு மோதிரத்தில் பதித்திருக்கும் ஓர் ரத்தினக்கல்லை, அல்லது ஓர் பிரகாசமான புத்தான், தீபம், சுவற்றிலறைந்திருக்கும் ஆணியின் தலைப்பு, சிறிய ரசக்குண்டு முதலியவற்றிலெதையேனும் ஒன்றைக் காண்பித்து அதைஅதிக கூர்மையாகப் பாராமலும் மனதை அதில் ஊன்றிச் செலுத்தாமலுமிருந்து கொண்டு தூக்கமயக்கத்தில் பார்ப்பதுபோல் ஒன்றைப்பற்றியும் நினையாமல் வெறுமனே பார்த்துக்கொண்டு அசதியாக கண்களின் நரம்பைபத்தளரவிடுவாயாயின் கண்களின்முன் ஒன்றுந் திட்டமாகத் தெரியாமல் எல்லாங் குழம்பித் தோன்றும். சமீபத்தி லிருக்கும் ஓர் வஸ்துவை அது என்னவென்று கண்டறியும்பொருட்டு கூர்ந்துபார்ப்பதுபோல் பார்க்கவேண்டாம். ஆனால் ஓர் தோட்டத்திலுள்ள காக்ஷிகளைக் கண்குளிரப் பார்த்துக்கொண்டிருக்கும் ஒருவன் தன் முன் நிற்கப்பட்ட மரமொன்றைக் கவனியாது விடுவதுபோல், ரத்தினக்கல்லைக்கூர்ந்துபார்க்காமல் அதற்கப்பாலுள்ள வஸ்துக்களைப்பார்க்க பிரயத்தனப்படுவதுபோல் அதை ஊடுருவப் பார். நான் உன்னை இப்படி வெறும் பார்வை பார்க்கச் சொல்வதற்குக் காரணமுண்டு. ஒருவனுக்கு கோபம்வரின் அவற்றிற்குக் குறிப்பாயுள்ள கொடுமொழி பகர்வன், கைவிரல்களை மடக்கிக் கதவைக் குத்துவன், மூர்க்கமாகப் பார்ப்பன், இதேவிதமாக ஒருவன் கோபக்குறிகளைக் காண்பிப்பானுயின் அவனுக்கு கோபம் தா

ளுகவேவரும். ஒருவன் ஜெபதபம் செய்வதுபோல் பாவனை பண்ணிக்கொண்டு தன் திரு கரங்களையுங் குவித்துக் கும்பிடத் தெய்வ நினைவுண்டாகும். நாளடைவில் உண்மையாகவேபக்திமானுவான். இப்படியே ஒருவன் தூக்கமயக்கத்தி லிருப்பதுபோல் பாவனை பண்ணி ஒன்றையுங் கூர்ந்துபாராமல் வெறுமனே பார்த்துக்கொண்டிருப்பானுயின் அவனுக்கு நிச்சயமாகவே தூக்கம் வந்துவிடும். ஆகவே தூக்கத்திற்குக் காரணம் நீ பார்க்கும் இரத்தினக்கல்லன்று. தூக்கத்தை உண்டாக்கும் வல்லமை உன்னிடத்திலேயேயிருக்கின்றது. ஒன்றையுங் கவனியாமல் நிம்மதியா யிருப்பதே தூக்கத்தை உண்டாக்கும். ஒருவன் வர்த்தமானப்பத்திரிகையைப் பார்த்துக்கொணடிருக்கையில் நடப்பதை கவனித்திருக்கின்றுயா? சிறிது நேரத்தில் அவன் கண்கள் களைத்துப்போக எழுத்துகள் அசைவதுபோல் தெரியும். மனதை எதிலும் ஊன்றி வாசிக்க முடியாது. எதையுஞ் செய்யமுடியாது. தசைகளெல்லாம் தளர்ந்துவிடக் கையிலிருந்த பத்திரிகை நழுவிக் கீழே விழுந்துவிடும். சொர்ப்பன லோகத்தில் பிரவேசிப்பதுபோலெண்ணி நித்திரைக்குள்ளாவான். இதே மாதிரியாக இப்பொழுது நீ விழிப்பு நிலையிலிருந்து இலேசான நித்திரைக்குள்ளாகி உண்மையைக் கண்டறியப் போகின்ருய்.

ஆனல் நீ ஒன்றுக்கும் பிரயாசப்படவாவது ஆத்திரப்படவாவது கூடாது. ஏனெனில் உன் பிரயாசையால் தூக்கம்வரவே மாட்டாது. மேலும் என்ன நடக்கப்போகிறதோவென்று ஆச்சரியப்படுவதையும் ஆராய்ந்து பார்ப்பதையும் விட்டுவிடு. ஏனெனில் இப்பொழுது விசேஷமொன்றுமில்லை. ஆத்திரம், பயம், சந்தேகம், விசுவாசக்குறைவு, அவநம்பிக்கை முதலியவைகளொன்றும் உன்னைத் தொந்தரவுசெய்ய விடாதே. இப்போது எதாவது நடக்கவேண்டுமென்று விரும்பாதே. நடக்கப்போகிறதின்னதென்று கவனிக்கவும் கருத்துக்கொள்ளாதே. உன் மனதில

ஒன்றன்பின்னென்ருகத் தோன்றும் நினைவுகள் இன்னின்னவென்றுபகுத்துப்பார்க்கவும் துணியாதே. யாதொரு சிரமமில்லாமலே நீ எவ்வளவு சோம்பலாகவும் அசதியாகவும் இருக்கக்கூடுமோ அவ்வளவு அமைதிநிலையி லிருக்கின்ருய். உனக்குள் ளிருக்கும் உறுதியானவிசுவாசமானது உன்னை இவ்வளவு அஜாக்ரதையாயிருக்கச் செய்கின்றது. முதலாவது நான் உன்னை சொஸ்தமாக்கக் கூடுமொன்றும், இரண்டாவது நீ எவ்விதமும் சொஸ்தமடைவாயென்றும், மூன்ருவது இந்த யோகநித்திரையால் உனக்கு நன்மையே யுண்டாகுமென்றும் உறுதியாக நம்புகிருய். நீ இந்த நித்திரையி லிருக்கும்பொழுது உனக்கு எவ்வித தீங்கும் நேரிடாது. உன் விருப்பத்திற்கு விரோதமான எந்தக் காரியமும் நீ செய்யமாட்டாய். நானெவ்வளவு கெட்ட எண்ணமுடையவனு யிருந்தாலும் உனக்கு மானபங்கமுண்டாக்கத்தக்க அல்லது எவ்வித உபத்திரவத்தையுங் கொடுக்கத்தக்கவிஷயமொன்றும் செய்யமுடியாது. உன்னிஷ்டத்திற் கிசைவாகவே சகலமும் நடக்கும். இதை நீ உறுதியாய் நம்பவேண்டும். உனக்கு சுகத்தையும் சவுக்கியத்தையும் சந்தோஷத்தையும் விளைவிக்கும் ஆனந்த நித்திரையில் சிறிது நேரம் அமிழ்ந்து சுகித்துவிட்டு உற்சாகத்துடன் எழுந்திருப்பாய். இதோ ஆனந்த வெள்ளத்திலமிழ்ந்து நித்திரை லோகத்திற்கு செல்கின்ருய். நீ தினந் தினம் நித்திரை செய்வதுபோலவே இப்பொழுதும் நித்திரைபோகின்ருய். ஆனல் இச்சமயத்தில் நீ நித்திராலோகத்தில் செல்லுகையில் என்னை உனக்குத் தோழனுகவும் வழிகாட்டியாகவும், உன்னைப் பிடித்திருக்கும் பீடையினின்று உன்னை மீட்கும் உயிர்த்துணைவனுகவும், உனக்குள் மறைந்துகிடக்கும் மகா சக்தியைக் கிளப்பிவிட்டு உனக்கனுகூலமுண்டாக்கும் ஆப்த நண்பனுகவும் தெரிந்துகொண்டாய்.

இதோ நீ நித்திரை மயக்கத்திற்குள் ளாகின்ருய். உன் கைகால்கள் சோர்ந்து தளர்ந்துபோகின்றன. உன் புலன்களும் மூளை

யும் தத்தம் தொழிலை நடத்தாது அமர்ந்திருக்கின்றன. கண்ணி மைகள் பளுவாகி மூடிக்கொள்ள யெத்தனிக்கின்றன. இதோ! நீ ஆனந்த நித்திரைக்குள்ளாகின்ருய். ஓர் அபாரசக்தி உன்னைச் சூழ்ந்து உன்னை இன்பக்கடலில் ஆழ்த்துகின்றது. இதோ! ஆனந்தம், இன்பம், சுகம், சௌக்கியம். நீ ஆனந்தநித்திரைகுள்ளாகி விட்டாய். இன்பமான தூக்கம் உன்னைச் சூழ்ந்துகொண்டது. இதனுல் உனக்கு இளைப்பாறுதலும் சுகமும் அனந்தமுமுண்டு, நீ தூங்குகிருய்.

மாந்திரீகன் சமயோசிதமாக இவ்விதமந்திரத்தைக்கூட்டி அல்லது குறைத்துச் சாந்தமான தொனியுடன் உச்சரித்துவருவானுயின் நோயாளி தூங்கிவிடுவான். திகில், சந்தேகம், ஆச்சரியம், சீக்கிரம் சுகமாகவேண்டுமென்ற ஆத்திரம் முதலிய பலகாரணங்களிலெதனுலேனும் நோயாளி முதல்தடவை தூங்காதிருக்கலாம். அப்படி யிருக்குமாயின் மறுநாளும் அதே நேரத்தில் வரும்படி சொல்லவேண்டும். இப்படி பத்துபதினைந்து தடவை செய்தபின் தூங்கியிருப்பவர்களுமுண்டு.

5-வது பாடம்.

2-வது முறை.

யோசனைக்குறிப்பு வசனங்களை மந்திரமாக உச்சரிப்பதுடன் நித்திராகாரி (Hypnogenic Drugs) ஔஷதங்களைக் கொடுப்பதாலும் ஆழ்ந்த நித்திரையை வருவித்து சிகிச்சை செய்யலாம். ஆனுல் கைதேர்ந்த வைத்தியர்கள்மட்டுமே ஔஷதங்களால் நித்தி

ரை யுண்டாக்கவேண்டும். சில வாசனைத் திரவியங்களுக்கும் வர்ணங்களுக்குங்கூட நித்திரையுண்டாக்குந் தன்மையுண்டு.

மெஸ்மரிச தாடனம்.

Mesmeric Passes.

நோயாளியைத் தூங்காமல் தூங்கும் நிலைக்குக் கொண்டுவந்து, யோசனைக்குறிப்பு வசனங்களை மந்திரோச்சாடனஞ் செய்து சொஸ்தமாக்க விரும்பும் மாந்திரீகனெவ்வொருவனும் தாடனஞ் செய்து (அதாவது தன் கைகளால் தொட்டுந் தொடாமலும் தடவித் தடவிக்கொடுத்து) நித்திரையை வருவிக்கும் விதத்தைக் கற்றுக்கொள்வ தவசியம்.

ஹிப்னடிசதூக்கத்திற்குத் தடவிக்கொடுத்தல் அவசியமன்று. யோசனைக்குறிப்பு வசனங்களை உச்சரித்துக்கொண்டிருந்தால் மட்டுமே தூக்கம்வந்துவிடும். ஆனால் ஹிப்னடிச தூக்கம் மெஸ்மரிச தூக்கத்தைப்போல் அவ்வளவு ஆழமானதன்று. ஆகவே, தூர திருஷ்டிமுதலிய அரிய தொழில்புரிய விரும்புவோர் தடவிக்கொடுப்பதால் மட்டுமே ஆழ்ந்த மெஸ்மரிசநித்திரையை உண்டாக்குவர்.

தற்காலத்தில் நோய்களைச் சொஸ்தமாக்க விரும்புவோர் யோசனைக்குறிப்பு வசனங்களை உபயோகிப்பதுடன் தமது கரங்களால் தடவிக்கொடுத்தும் நித்திரையை வருவிக்கின்றனர்.

மாந்திரீகனெவ்வொருவனும் அரைமணிநேரம்வரை யாதொரு களைப்புமின்றித் தடவிக்கொடுக்க ஏற்கனவே அப்பியாசித்துக் கொள்வதவசியம். ஆதலால் மெஸ்மரிச வித்தையைக் கற்றுக் கொள்ளும் ஒவ்வொருவரும் ஓர் நாற்காலியில் தலையணையை ஆள் போல் நிறுத்திவைத்துக்கொண்டு, உச்சந் தலைமுதல் உள்ளங்கால் வரை தடவிக் கொடுக்கும் வித்தை அந்தரங்கத்தில் அப்பியாசிக்

கவேண்டும். இவ்விதம் பிரதி தினமும் காலையிலும் மாலையிலும், அரைமணி நேரமாக பதினைந்து நாளைக்குப் பழகவேண்டும்.

கீழ்நோக்கித் தடவிக்கொடுத்தல்.

நோயாளியின் சிரசிலிருந்து பாதம்வரை கீழ்நோக்கித் தடவிக்கொடுப்பதால் அவனுடைய தலை மந்தமாகி சரீரம் ஸ்மரணையற்று அசதிமேலிடவே ஆரோக்கியமான ஆழ்ந்த நித்திரை அவனுக்குண்டாகும்.

கீழ்நோக்கித் தாடனஞ் செய்கையில் மாந்திரீகனின் உள்ளங்கையை நோயாளிக்கு நேராக விரித்திருக்கவேண்டும். மாந்திரீகனின் கைவிரல்கள் ஒன்றையொன்று தொடாமல் விரிந்து உள்ளங்கைக்கு நேராக சிறிது மடங்கி இருக்கவேண்டும்.

தடவிக்கொடுக்கையில் மாந்திரீகனின் கைவிரலகள் நோயாளியை தொட்டும் தொடாமலும் சாந்தமாகவும் மிருதுவாகவும் தடவிக் கொடுக்கவேண்டும். சில சமயம் நோயாளியைத்தொடாமலே அவன் சரீரத்திறகு ஒரு அங்குல உயரத்திற்குமேல் பரவித் தடவுவதே உத்தமம்.

மேனேக்கித் தடவுதல்.

நோயாளியின் பாதங்களிலிருந்து சிரசு வரை மேனேக்கித் தடவுவதால் அவனுடைய தூக்கம் நிவர்த்தியாகி விழித்துக்கொள்வான். மேனேக்கித் தடவுவதானது கீழ்நோக்கித் தடவுவதற்கு நேரெதிரிடையான பயனை விளைவிக்கும். மேனேக்கித் தடவும்பொழுதும் மாந்திரீகனின் உள்ளங்கை நோயாளிக்கு நேராகவே விரிந்திருக்கவேண்டும்.

நெடில் தாடனம்.

Long Passes.

தாடனம் அல்லது தடவிக்கொடுத்தலானது குறில், நெடில் என இருவகைப்படும். நெடில் தாடனமாவது நோயாளியின் சிரசிலிருந்து பாதம்வரை தடவும்பாவனைசெய்வது. அதி துரிதத்துடன் நெடில் தாடனஞ்செய்யக்கூடாது. ஆனால் மாந்திரீகன் தன திருகரங்களையும் உட்கார்ந்திருக்கும் நோயாளியின் சிரசின்மேல் உயர்த்தி, தனதுவிரல்களை சிறிது விரித்துக்கொண்டு, நோயாளியின் முகம்வரை மெதுவாகக் கொண்டுவரவேண்டும். முகத்தண்டை வந்தவுடன் 4 விநாடிநேரம் நோயாளியின் கண்களுக்கு நேரில் தனது விரல்களை காண்பித்துக்கொண்டு நிற்கவேண்டும். பின்பு மெதுவாக முழந்தாள் வரைக்கும் அதன் பின்பு பாதம்வரைக்கும் கொண்டுவநது வியர்வையை வழித்தெறிவதுபோல் கைகளை உதறவேண்டும்.

இனிமேல் கைவிரல்களை மடக்கிக்கொண்டு இருகரங்களையும் விரித்து வட்டஞ்சுற்றி நோயாளியின் சிரசிற்குமேல் கொண்டுவரவேண்டும். அதன்பின் முன்செய்ததுபோலவே உச்சந் தலைமுதல் உள்ளங்கால் வரையில் வியர்வையை வழித்தெறிவதுபோல் கைகளைக் கொண்டுவந்து உதறவேண்டும். இத்தாடனங்கள் செய்யும் பொழுது நோயாளியை மாந்திரீகன் தன் கைகளால் தொட்டுத் தடவவேண்டிய தவசியமன்று. தன் கரங்களின் மூலமாக தன்னிடத்திலுள்ள ஜீவகாந்த சக்தியை நோயாளியின்மேல் உதறி தெளித்து அவனிடத்திலுள்ள நோய்க்குணங்களை வழித்தெறிவதாக மனதில் பாவனை செய்துகொண்டு மெதுவாக நிறுத்தி, நெடில் தாடனஞ் செய்யவேண்டும்.

குறில் தாடனம்.

மாந்திரீகன் தனதிருகரங்களையும் நோயாளியின் சிரசிலிருந்து முகத்திற்குக் கொண்டுவந்து அதன்பின் இருதயம் அல்லது நாபி வரையி லிழுத்தல் முதலிய தாடனங்களுக்குக் குறில் தாடனம் எனப்பெயர். குறில் தாடனமானது நோயுள்ள இடத்தில்மட்டும் தடவிக்கொடுப்பதையுங் குறிக்கும். காந்த நித்திரையை வருவிக்கும்படி தடவிக்கொடுப்பதில் குறில் தாடனமே அதிகமாக உபயோகிக்கப்படும். ஏனெனில் சிரசிலிருந்து மார்புவரையில் அடிக்கடி தடவிக்கொடுப்பதால், நோயாளியின் மூளை சாந்தமாகி, காந்த சக்தியை ஏற்று, தூக்கத்தை வருவிக்கும் ஆனல் குறில் தாடனஞ் செய்கையிலும் இடைக்கிடையே நெடில் தாடனஞ் செய்வதால் காந்தசக்தியை நோயாளியின் சரீரமெங்கும் பரவச்செய்யலாம். ஆதலால் பத்துத்தடவை குறில் தாடனஞ் செய்தவுடன் இரண்டு நெடில் தாடனஞ் செய்வது மிக உத்தமம். ஆனல், ஆத்திரத்துடன் எவ்வித தாடனமுஞ் செய்யலாகாது. சில சமயம் நோயாளியின் சுவாசாசயத்திற்குச் சமீபத்தில் அதிக தாடனஞ் செய்துவிட்டால் நோயாளிக்கு மூர்ச்சைமுட்டுவதுபோல் தோன்றும். அப்படி யிருக்குமானல் மாந்திரீகன் தனதிரு சரங்களையும் நோயாளியின் நெஞ்சில் வைத்து மேனேக்கிப் பக்கமாய்ப் பிரித்திழுக்கவேண்டும். மேலும் எந்தப்பாகத்தில் உபத்திரவந் தோன்றுகிறதோ அந்தப்பாகத்தில் திடீரென்று ஊத உடனே சுகமுண்டாகும்.

குறிப்புகள்.

1. குறில் நெடில் தாடனங்கள் செய்யும்பொழுது மாந்திரீகன் தான் இன்ன நோக்கத்திற்காகத்தான் தாடனஞ் செய்கிறேனென்பதை மனதில் ஊன்றி யோசிப்பதுடன் அது சித்தியாவதற்கான விருப்பமுடையவனய்த் தாடனஞ்செய்யவேண்டும். ஆனல்

தனது கைகால்களை விரைக்க இழுத்துக்கொண்டாவது அதிக கஷ்டத்துடனாவது தாடனஞ் செய்யலாகாது.

2. மெதுவாகத் தாடனஞ்செய்தால் காந்த சக்தி சன்னஞ் சன்னமாகத் திரண்டு நித்திரையையும் சுகத்தையு முண்டாக்கும். விரைவாகத் தாடனஞ்செய்தால் கரங்களின் துரித அசைவால் காற்றுண்டாகி கூடியிருந்த காந்த சக்தியை குலைத்தெறிந்துவிடும். ஆகவே துரித தாடனத்தால் நித்திரைக்குப் பதிலாக விழிப்பு நிலையே யுண்டாகிவிடலாம்.

3. ஒவ்வொரு தாடனத்தின்பின்பும் கைகளை உயர்த்தும் பொழுது மாந்திரீகன் வெகு ஜாக்ரதையை அனுசரிக்கவேண்டும். அஜாக்ரதையாய் கையைஉயர்த்தினால் தாடனத்தின்பிரயோஜனம் அற்றுப்போய் நித்திரையை எளிதில் வருவிக்கக்கூடாமற் போய்விடும். ஆதலால் நோயாளியின் சிரசிலிருந்து பாதங்கள்வரை கைகளைக் கொண்டுவந்தவுடன், நோயாளிக்குச் சற்றப்புறத்தில் கைகளைக் கொண்டுபோய் விரல்களை மடக்கிக்கொண்டு உயர்த்தவேண்டும்.

4. தேர்ச்சியடைந்தபின் விரல்களை மடக்காமலே கைகளை மலெழுப்பித் தாடனஞ் செய்யலாம்.

5. மூளையின் ஒவ்வொரு பாகத்திற்கும் காந்தசக்தி ஏற்றுவதவசியமாதலால் கைகளை நோயாளியின் சிரசிலிருந்து முகத்திற்கு மட்டுங் கொண்டுவந்தால் போதுமென்றெண்ணலாகாது. சில சமயம் தலையின் பக்கங்களிலும், இடைக்கிடையே முதுகிலுங்கூட தாடனஞ் செய்வதவசியம். சிலர் நெற்றியிலும், மூக்கிலும், கழுத்திலுங்கூட மெதுவாய் தாடனஞ்செய்து நித்திரையுண்டுபண்ணுவார்கள்.

6. மாந்திரீகன் தனது கரங்களால் தாடனஞ்செய்துகொண்டிருக்கையில் அவனுடைய சித்தமும், கனவும், எண்ணங்களும், உணர்ச்சிகளும், விருப்பங்களும் நோயாளிக்கு எவ்விதத்திலும் சுகமுண்டாகி அனுகூலங் கிடைக்கவேண்டுமென்பதிலேயே ஏகோபித்து நிற்கவேண்டும்.

7. தாடனம் (Passes), காந்தப்பார்வை (The Magnetic gaze), ஏகாக்ரசித்தம் (Intense concentration) முதலியவற்றை உபயோகித்ததோடு நோயாளியின் ஐம்புல உணர்ச்சிகளைச் சாந்தப்படுத்தக்கூடிய நறுமண புஷ்பங்கள், சுகந்த வாசனைகள், இனிய கீதங்கள், சிறிய தீபங்கள் முதலியவற்றையும் உபயோகித்து மெஸ்மர் தம் தொழிலின் அந்தரங்க மர்மங்களை வெளியிடாதிருந்தாரென்பதையும் மாந்திரீகன் அறிய வேண்டியது. (Mesmer used every means in his power to affect the patient, sweet flowers, soft colors, music, lowered lights; in fact, he surrounded himself with mystery.)

8. ஏகாக்ரசித்த நிலை, சித்த சக்தியை உபயோகிக்கும்விதம் முதலிய முறைகளைப் பிரதிதினமும் மாந்திரீகன் அப்பியாசஞ் செய்யவேண்டும். ஆதலால் அவற்றைப்பற்றி நான் முன் பாடத்தில் சொல்லியதைக் கவனித்து அப்பியாசித்து வருவதுடன் நீ கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. அஃதியாதெனில் ஏகாக்ரசித்தநிலையை அனுசரிக்கின்ற நான் சொல்வதால் உன் சரீரத்தையும் பாப்சாப்சங்களையும் விறைக்கவிறைக்க இறுக்கிக்கொண்டு ஏதோ ஓர் அரிய காரியத்தைச் செய்வதுபோல் பாவனை பண்ணிக் கடினப்பிரயாசை எடுக்கவேண்டுமென்பது அர்த்தமல்ல. ஆனால் நீ உன் ஆகாரத்தை எவ்வளவு தாராளமாய்ச் சாப்பிடுகிறாயோ அவ்வண்ணமாகவே யாதொரு கஷ்டமுமின்றித் தாராளத்தில் உன் மனதையுஞ் சித்தத்தையும் ஒன்றுபடுத்தி உபயோகிக்கப் பழகவேண்டும்.

மாந்திரீகன் எப்பொழுதும் ஆறுதலோடும் அமைதலோடும், நோயாளிக்கு நன்மையை உண்டாக்கும் சக்தி தன்னிடத்திலுண்டு என்ற நம்பிக்கையுட னிருக்கவேண்டும்.

7-வது பாடம்.

ஆனந்தசாகரன்:—ஹிப்னாடிசத் தூக்கத்தால் ஏதேனும் தீங்குவிளைவதற் கிடமுண்டோ?

சர்வகலாநிதி:—ஹிப்னாடிசத்தின் காரணமாய் உண்டாகக் கூடிய தீங்குகள் அநேகமென்று பலர் சொல்லுகிறார்கள். வேறு சிலர் ஹிப்னாடிச நித்திரையால் எவ்வித தீங்கும் விளைவதற் கேதுவில்லையென்று உறுதிமொழி கூறுகின்றனர். நான் பல வருடங்களாக இச்சாஸ்திரத்தைக்கற்றுவந்ததில் எனது அநுபோகத்திற்கு வந்ததை இங்கு கூறுவேன்.

1. ஹிப்னாடிசத்தால் வியாதியைப் போக்குவது எவ்வளவு எளிதோ, அவ்வளவு அதை அதிகரிக்கவுஞ் செய்யலாம். ஆதலால்தான், மாந்திரீகன் சாந்தகுணமும் பெருந்தன்மையும் வாய்ந்தவனாயிருக்கவேண்டுமென்ப தவசியம்.

2. இச்சாஸ்திரத்தில் தேர்ச்சி பெறாதவர்கள் யோசனைக் குறிப்பு வசனங்களைச் சமயோசிதமாய் உபயோகிக்கத் தெரியாததால் சில கஷ்டங்கள் நேரிடலாம். ஆதலால் மாந்திரீகன் ஓர் நோயாளிக்கு ஹிப்னாடிசசிகிச்சைசெய்ய ஆரம்பிக்குமுன் சிறிதுநேரம் உட்கார்ந்து தான் உபயோகிக்கப்போகும் யோசனைக்குறிப்பு வசனங்கள் இன்னின்னவென்று ஓர் காகிதத்தில் குறிப்பிட்டு ஆயத்தம்பண்ணிக்கொள்வது அத்யாவசியம். ஏனெனில் அயுக்தமான

யோசனைக் குறிப்புகளை உபயோகிக்கின், அவைகள் நோயாளியின் மனதில் பதிந்து விகற்பமான பயனைப் பிறப்பிக்கலாம்.

3. சிலரை அடிக்கடித் தூங்கவைத்தால் அவர்கள் முகத்திலுள்ள களைமாறி, தேஜசு நீங்கி, தூங்குமூஞ்சிப்பட்டுத் தெரியும். ஆதலால் மாந்திரீகன் வெகுஜாக்ரதையுடன் ஒவ்வொரு நோயாளியின் தன்மையையும், இரண்டுமூன்றுதரம் பரீக்ஷைசெய்து கண்டுபிடித்தபின், எவர் முகத்தில் தேஜசு நீங்கித் தோன்றுகிறதோ, அவர்களை அடிக்கடி தூங்கச்செய்யாமல் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். வைத்தியனைப்போலவே, மாந்திரீகனும் "அளவுக்கு மிஞ்சினுல் அமிர்தமும் நஞ்சாம்" என்கிற முதுமொழியை மனதில் வைத்துக்கொள்ளவேண்டும்.

4. ஒருவனைத் தூங்கவைத்தபின் அவனுடைய சுகத்தையும் உற்சாகத்தையுங் கெடுக்கத்தக்க யோசனைக்குறிப்பு வசனங்களை மாந்திரீகன் உபயோகிப்பானுயின் நோயாளியின் சுகங் கெடுமென்பது நிச்சயம். ஆதலால் ஒருவனை ஹிப்னுடிசஞ்செய்யுமுன் அவனுடைய சிநேகிதன் அல்லது இனத்தாரில் ஒருவனைப் பக்கத்தில் சாக்ஷியாகவைத்துக்கொள்ளவேண்டும்

5. ஓர் மனிதனை அல்லது ஸ்திரீயை ஒரு தடவை தூங்க வைத்துவிட்டால் பிற்பாடு அவர்களைத் தூங்கவைப்பதும் யோசனைக்குறிப்பு வசனங்களை மாந்திரீகனிஷ்டம்போல் அவர்கள் மனதில் ஏற்றுவதும் மிக்கஎளிது. ஆதலால் ஸ்திரீகளின் கற்புக்கு பங்கம் நேரிடாவண்ணம் சிநேகிதரைப் பக்கத்தில் வைத்துக்கொண்டே தூக்கமுண்டாக்கவேண்டும்.

6. களங்கமற்ற இருதயமும் மாசற்ற மகத்துவம்பொருந்திய மேனியுமுள்ள மாந்திரீகனல்மட்டுமே நோயாளிக்குச் சகல விதத்திலும் அனுகூலமுண்டு. அயோக்கியன் இத்தொழிலைக்கற்று

அப்பியாசிக்க முயன்றால் அதனால் நோயாளிக்குத்தீமையும் மாந்திரீகனுக்குப் பாவமும் ஏற்படுவதுடன் அவன் சந்ததிக்கும் நஷ்டமுண்டாகுமாதலால் வெகு ஜாக்ரதையாகவும் பயபக்தியுடனும் இத்தொழிலைக் கற்று அப்பியாசிக்கவேண்டும்.

ஆனந்தசாகரன்:—பிறரைத் தூங்காமல் தூங்கும் நிலைக்குக் கொண்டுவரக்கூடிய தன்மையைக் கற்றுக்கொள்வது யாவருக்கும் சாத்தியமாகுமோ?

சர்வகலாநிதி:—பிறரை வசியஞ்செய்து யோகநித்திரைக்குட் படுத்துவது யாவரும் பிரமிக்கக்கூடியவிஷயமே. ஆதலால் இவ்வளவு அருமையும்பெருமையும்வாய்ந்த தொழிலைக்கற்றுக்கொள்வது யாவருக்கும் எளிதாயிருக்க மாட்டாது. விசேஷ வரப்பிரசாதம் பெற்றவர்களுக்குமட்டுமே இத்தொழில் சித்தியாகக்கூடியது என்பது சாதாரண ஜனங்களின் கொள்கை. ஆனால் நாம் சொல்வது யாதெனில், இப்புஸ்தகத்திற் சொல்லியபடி செய்யும் எவனும் மற்றவர்களுக்கு யோகநித்திரையை வருவிக்கும் மாந்திரீகனாகக்கூடும். ஜீவகாந்த சக்தியைக் கிரகித்துக்கொண்டவர்கள் மிக எளிதில் மற்றவர்களை வசியஞ்செய்யக்கூடுமாயினும், தான் தொடங்கிய காரியத்தை முடிக்கவேணுமென்னும் ஊக்கமுடைய எவனுக்கும் இது அசாத்தியமானதன்று. ஆதலால், இத்தொழிலைக் கற்றுக்கொள்ளவேண்டுமென்னும் விருப்பமுள்ள எவனுக்கும் இது சித்தியாகும்.

8-வது பாடம்.

ஆனந்தசாகரன் :—சாதாரணத் தூக்கத்திற்கும், ஹிப்னடிச தூக்கத்திற்கும் ஏதேனும் வித்தியாசமுண்டோ?

சர்வகலாநிதி :—சாதாரணத்தூக்கத்திற்கும், யோகநித்திரைக்கும் யாதொரு வித்தியாசமுமில்லை. நாம் தூங்கும்பொழுதெல்லாம் ஹிப்னடிசத் தூக்கத்திற்குட்படுகிறோம். ஒருவன் தனக்குத் தானே நித்திரையுண்டாக்கி இளைப்பாறுவதை நீ கவனித்திருக்கலாம். நினைத்தமாத்திரத்தில் நித்திரைக்குட்புகும் வழக்கத்தை நான் அனுசரித்துவருகிறேன். யாதேனும் வேலைசெய்து அலுத்துப்போயிருக்கும் சமயம் ஓர் சாய்மான நாற்காலியில் சாய்ந்து கொண்டு "நான் இப்பொழுது பத்துநிமிஷம் தூங்கி எழுந்திருப்பேன்" என்று மனதில் தீர்மானம் பண்ணிக்கொண்டு கைகால்களைச் சோரவிட்டு, மனதை ஒரு விஷயத்திலும் செல்லவிடாமல் சூனியமாக்கியவுடன் நித்திராலோகத்தில் பிரவேசித்து இளைப்பாற்றியடையும்வழக்கம் என்னிலுண்டென்பதை நீ அறிந்திருப்பாய். இவ்விதமாகப் பத்து நிமிஷம் தூங்கினபின் எந்த வேலையையும் அதிக உற்சாகத்தோடு செய்துமுடிக்கலாம். இதுவே ஹிப்னடிச தூக்கம். தாய்மார் பாடல்கள்பாடி குழந்தைகளின் கவனத்தை ஒரே நிலையில்நிறுத்தி, தூக்கமுண்டாக்குவது வழக்கம். சில பிள்ளைகளுக்கு "தூங்கிவிடு, மிட்டாய் தருகிறேன்" என்று சொன்னால் தூங்கிவிடுவார்கள். இவைகளெல்லாம் ஹிப்னடிச தூக்கந்தான். சிலர் புஸ்தகம் வாசிக்கும்போதே தூங்கிவிடுவார்கள். வேறுசிலர் கண்கள் திறந்திருக்கும்போதே தூக்கநிலைமைக்குட்படுகின்றனர். பட்டாளத்துச் சேவகர் வழியில் நடந்துகொண்டிருக்கும்பொழுதே தூங்கிக்கொண்டு நடப்பார்கள். இவைகளெல்லாம் சுய ஹிப்னடிசத் தூக்கந்தான்.

வித்தியாசம்.

ஆனால் சாதாரண தூக்கத்திற்கும் ஹிப்னடிசத் தூக்கத்திற்கும் ஒரே ஒரு வித்தியாசமுண்டு. அஃதியாதெனில் மாந்திரீகன் சொல்லும் யோசனைக்குறிப்புகளால் நித்திரைக்குட்புகும் மனிதனின் உள்மனமானது மாந்திரீகனின் வார்த்தையையே கவனித்துக் கொண்டிருக்கும். ஆகவே அவனது வெளிமனம் நித்திராலோகத்தில் பிரவேசித்தபின்பும் உள்மனமானது மாந்திரீகனைத் தனக்கு வழிகாட்டியாகப்பாவித்து அவன் சொல்லைக்கேட்டுக்கீழ்ப்படியும். அப்படியே சுயநித்திரைக்குட்படும் யோகிகளும் தாம் நித்திராலோகத்தில் பிரவேசித்த பின்பு ஜாக்ர.ஸ்திதியை அனுசரிததுத் தமது கோரிக்கை நிறைவேறுவதற்சான விஷயங்களை உள்மனதில் அழுந்தப் பதித்துக்கொண்டே யோகநித்திரைக்குட்படுவர்.

9-வது பாடம்.

ஆனந்தசாகரன் :—ஒருவனின் சம்மதமில்லாமல் அல்லது அவனின் விருப்பத்திற்கு நேர்விரோதமாய் ஹிப்னடிசத் தூக்கத்திற் குட்படுத்துவது சாத்தியமாகுமா ?

சர்வகலாநிதி :—ஹிப்னடிசத்தைப்பற்றியொன்றும் தெரியாத ஒவ்வனை அவனின் சம்மதமில்லாமலே தூங்கவைக்கலாம். மேலும் ஒருவன் தூக்கமயக்கத்தி லிருக்கும் சமயத்தில் அமைதிநிலைக் குட்பட்டிருப்பான். அச்சமயம் அவனின் சம்மதமில்லாமலே சமீபத்திலிருந்து யோசனைக் குறிப்புகளை உச்சரிப்பதாலேனும், தூரத்திலிருந்து மானத தந்தியால் மந்திரங்களை உச்சரித்துக்கொண்டிருப்பதாலேனும் அவனைத் தூங்காமல் தூங்கும் நிலைக்குக் கொண்டுவந்து மாந்திரீகன் தன்னிஷ்டம்போல் கிரியை செய்விக்க

லாம். ஆனுல் ஒருவன் தன்னை திடப்படுத்திக்கொண்டு மாந்திரீகனின் எவ்வித பிரயத்தனத்திற்கும் உட்படமாட்டேன். என்னைத் தூங்கவைக்க ஒருவராலும் முடியாது என்று எப்பொழுதும் சிந்தித்துக்கொண்டிருப்பானுயின் அவனைமாந்திரீகனுல் தூங்கவைக்க முடியாது. ஏனெனில் மற்றவரின் யோசனைக்குறிப்பு தன்னில் பதியாவண்ணம் அவன் தனது சுயயோசனைக்குறிப்புகளால்தடை கட்டிக்கொள்ளுகிருன்.

ஆனந்தசாகரன் :—தூங்காமல் தூங்கும் நிலைக்குக் கொண்டு வரப்பட்ட ஒருவனை அவனுக்கு அரோசிகமான யாதாமொரு காரியத்தைச்செய்யத் தூண்டிவிடுதல் சாத்தியமாகுமோ?

சர்வகலாநிதி :—சாத்தியமாகாது. உதாரணமாக, மதுபானததை அருவருக்கிற ஒருவனைக் குடிகாரனுக்க முடியாது. அதேவிதமாய் கற்புள்ள ஸ்திரீயின் கற்பை யழித்தலுங் கூடாது. அப்படிச்செய்யின், அவர்கள் உடனே விழித்துக்கொள்வார்கள்.

10-வது பாடம்.

ஆனந்தசாகரன் :—ஒருவனைத் தூங்காமல் தூங்கும்நிலைக்குக் கொண்டுவந்து நீதிசாஸ்திரத்திற்கு விரோதமான விஷயங்கள் செய்யத் தூண்டுதல் சாத்தியமாகுமா?

சர்வகலாநிதி :—சன்மார்க்கனுன ஒருவனைக் குற்றஞ்செய்ய ஏவுதல் அசாத்தியமாகும். ஆனுல் ஒருவன் இயற்கையிலேயே தோஷக்குணங்களுடன் பிறந்திருப்பானுயின், அவன் விழிப்புநிலையிலிருக்கும்போது செய்யுங் குற்றங்களைத் தூக்கத்திலும் செய்வா

ன். தூங்காமல் தூங்கும் நிலையிலிருப்பவனுக்குத்தான் மாந்திரீகனின் சொற்களுக்கடங்கி நடப்பது நன்ருய்த் தெரியும். ஆனல் அவன் சுயமனச் சாக்ஷியும் ஜாக்ரைதயுடன் கிரியை செய்துகொண்டிருப்பதால் மனச்சாக்ஷிக்கு விரோதமான குற்றங்களைச்செய்ய துணியமாட்டான். ஒருவனைத தூங்கவைத்து அவன் கையில் கத்தியைக்கொடுத்து மற்றொருவன்மேல் குத்தும்படிச் சொன்னல் அவனைக் குத்த துணியமாட்டான். ஆனல் அந்தக் கத்தியைக் கொண்டு பக்கத்திலுள்ள ஓர் வஸ்துவையாவது, மரத்தையாவது குத்தித் தன் மனச்சாட்சிக்கு விரோதமில்லாத காரியஞ்செய்து மாந்திரீகனின் வார்த்தைக்கு கீழ்ப்படிவான். அதே மனிதன் கையில் ஓர் கடுதாசியால் செய்த கத்தியைக்கொடுத்துக் குத்தும்படிச் சொன்னல் உடனே குத்துவான். ஏனெனில் அதனல் யாதொரு தோஷமுமுண்டாகாதென்பது அவனுக்குத் தெரியும்.

11-வது பாடம்.

ஆனந்தசாகரன்:—ஐயன்மீர்! தாங்கள் கற்பித்த பிரகாரமே செய்து அநேகரைத் தூங்கவைத்தேன். சிலரைத் தூங்கவைப்பது மாத்திரம் கஷ்டமாகத் தெரிகிறது. இதன் காரணமென்ன?

சர்வகலாநிதி:—தமது சித்தத்தை எளிதில் ஏகாக்ரமாக்கக் கூடிய உறுதியான மனமும் திடச்சித்தமுமுள்ளவர்களைத் தூங்கவைப்பது மிக எளிது. அப்படியே தமக்குண்டாயிருக்கும் வியாதி நீங்கவேண்டுமென்னும் அவாவுடையவர்களும் மாந்திரீகன் உச்சரிக்கும் யோசனைக்குறிப்பு வசனங்களை ஏற்றுக்கொண்டு தூங்கிவிடுவார்கள். மேலும் அதிகாரத்துக்குக் கீழ்ப்படியும் தன்மையுள்ள யுத்தவீரர்கள், மாணவர்கள், வீட்டுவேலைசெய்பவர்கள் முதலிய

வியோரும், மற்றவர் யோசனையின்படியே நடத்தப்படும் பிரபுக்களின் பிள்ளைகளும் எளிதில் தூங்கிவிடுவார்கள். ஆனல் மந்தப்புத்தியுள்ளவர்களையும், சிறு குழந்தைகளையும், பைத்தியகாரரையும், உன்மத்தரையும் தூங்கச்செய்வதுகஷ்டமாகும். ஏனெனில் மாந்திரீகன் உச்சரிக்கும் யோசனைக் குறிப்பு வசனங்களை அறியவாவது, தமது மனதை ஏகாக்ர மாக்கவாவது அவர்களுக்கு மார்க்கந் தெரியாது. அப்படியே மாந்திரீகனின் சொந்தக் குடும்பத்திலுள்ளவர்களையும், மாந்திரீகனின் திறமையைப்பற்றி அவநம்பிக்கை யுள்ளவர்களையும் தூங்கவைக்க முடியாது. ஏனெனில் விசுவாசக்குறைவால் யோசனைக்குறிப்புவசனங்களில் அவர்கள் மனஞ்செல்லாது. ஒருவனுடைய இஷ்டமில்லாமல் அவனைத் தூங்கவைப்பது சாத்தியமாகாது. முதல் தடவையிலேயே எல்லாரையும் தூங்கவைக்கமுடியாது. முதல்நாள் தவறிவிட்டால் மறுநாளும் அதே நேரத்தில் வரும்படி செய்து மந்திரோச்சாடனஞ் செய்ய தூக்கமுண்டாகும். அப்படி பத்து அல்லது பன்னிரெண்டு நாட்களுக்குப்பின் தூங்கினவர்களுமுண்டு.

முன்னமே தூக்க நிலைமைக்குட்பட்டு கைவசமாகியிருக்கும் ஒருவனை புதிதாக வந்திருப்பவர்களின் முன் தூங்கவைத்து சில வேடிக்கைகள் காண்பித்தால் மாந்திரீகனின் திறமையில் நம்பிக்கையுண்டாவதுடன் தமக்கும் அநிலையால் மோசம் நேரிடக்கூடுமோவென்ற பயமும் ஐயமும் நீங்கி புதிதாய் வநதிருப்பவர்களும் எளிதில் கைவசமாகி தூங்கிவிடுவார்கள்.

12-வது பாடம்.

சில பரீக்ஷைகள்.

How to test the Susceptibility of the Subjects.

மாந்திரீகனிடத்தில் சிகிச்சைக்கு வருபவன் எளிதில் தூங்காமல் தூங்கும் நிலைக்குவரக்கூடியவனோ வென்பதை ஜாக்ர ஸ்திதியிலேயே பரீக்ஷித்தறியும் வழிகள் சிலவுள. அவற்றை விளக்குகின்றேன் கேள்.

1-வது பரீக்ஷை.

முந்தினபாடங்களில் சொல்லியிருப்பதுபோல் நோயாளிக்கு (தாங்கும் சக்தி அமைதிநிலை) முதலிய பதங்களின் அர்த்தத்தை விளக்கிக் காண்பி. பின்பு அவன் அமைதிநிலையாவ தின்னதென்பதை அறிந்துகொண்டானவென்பதை பரீக்ஷிக்கும்பொருட்டு படத்தில் காண்பித்திருப்பதுபோல் அவனுடைய வலதுகையை வைத்துக்கொள்ளச்சொல்லி உன்னுடையவிரலால் அவன்கையை சிறிது நேரம் தாங்கிக்கொண் டிருந்துவிட்டு திடீரென்று எடுத்துவிடு. உடனே அவனுடைய கையானது தாங்குகிறவனுடைய கை விழுவதுபோல் கீழே விழுந்துவிடுமாயின் அவனில் தாங்கும் சக்தி (Negative force) அதிகமாயிருக்கிறதென்றும் சீக்கிரம் அமைதி நிலைக்குட்படுத் தூங்கிவிடுவானென்றும் அறிந்துகொள்.

இந்தப்படத்தில் காண்பித்திருப்பதுபோல் அவனுடைய கை கீழே விழாமல் நின்ற நிலையிலேயே நிற்குமாயின் அவனிடத்தில் பாயும் சக்தியே அதிகமாயிருக்கிறது ஆதலால் எளிதில் தூக்க நிலைக்குட்படமாட்டான என்பதை அறிந்துகொண்டு திரும்பவும் அவனுக்கு அமைதி நிலையைப் பற்றியும் தாங்கும்சக்தியைப் பற்றியும் நன்றாய் விளக்கிக்காண்பி. அவன் அவற்றினர்த்தத்தை அறிந்துகொண்டவுடன் தன்சரீரத்தை தளரவிட்டு எளிதில் அமைதிநிலைக்குட்படுவான்.

13-வது பாடம்.

2-வது பரீக்ஷை.

பின்புறமாக விழச்செய்தல்.



நோயாளி தனது சரீரத்தையும் கைகால்களையும் தளரவிட்டு அமைதிநிலைக்குட்படுவதின்னதென் றறிந்துகொண்டான் என்று முதலாவது பரீக்ஷையால் தெரிந்துகொண்டவுடன் அவனை நிற்கச் சொல்லி கை, கால், சரீர முழுவதையும் தளர்த்திவிடச் சொல்லு. மேலும் அவன் கண்களை மூடிக்கொள்ளச்செய்து அவனுடைய மனதை அக்கம்பக்கம் சிதறவிடாமல் நீ சொல்வதிலேயே ஏகாக்ர

மாக்கி பின்புறமாகச் சாய்ந்துவிழுவதையே எண்ணிக்கொண்டிருக்கவும், பின்புறமாக அவனுடையசரீரம் ஏதோ அபாரசக்தியாலிழுக்கப்பட்டால் அதற்கு எதிர்த்துநிற்காமல் விழவும், பயப்படாதிருக்கவும் தைரியஞ்சொல்லி நீ அவன் பக்கத்திலிருக்கையில் அவனுக்கு யாதொரு தீங்கும் நேரிடாததலால் அவன் சரீரம் பின்புறமாகச் சாய்வதைப்பற்றி ஆலோசியாதிருக்கவுஞ் சொல். அவன் தன் குதிக்கால்களை சேர்த்துவைத்துக்கொண்டு நேராக நிமிர்ந்து நிற்கையில் நீ அவன் பின்பக்கத்தில் நின்று உன்னிரு கரங்களையும் அவன் புயங்களில் வைத்துக்கொண்டு அவனுடைய மூளையின் அடிப்பாகத்தை கூர்ந்துபார்த்து அரைநிமிஷநேரம் " அவன் பின்

புறமாகச் சாய்ந்துவிழவேண்டும்'' என்று உறுதியாக நினைத்து தியானம்பண்ணு. பின்பு நீ அமைதலாகவும் ஆறுதலாகவும் உச்சரிக்கவேண்டிய

மந்திரமாவது.

நீ பின்புறமாய்ச் சாய்ந்துவிழப்போகிறாய். நீ விழும்பொழுது உன்னைத் தாங்கிக்கொள்ள நானிருக்கிறேன். நீ விழுகிறாய், விழுகிறாய், விழுந்துவிட்டாய், விழுந்துவிட்டாய். (Now you are falling backward, you can not resist, you are falling, falling you are falling, you are falling) என்று உச்சரித்துக்கொண்டிருக்கையில் மெள்ள உன் கைகளை எடுத்து அவன் கீழே சாயும்பொழுது பிடித்துக்கொள்வதற்கு ஆயத்தமாக ஜாக்ரதையுடனிற்கவேண்டும். அவன் சிறிது தூரம் சாய்ந்தவுடன் கீழே விழுந்துவிடாமல் பிடித்துக்கொள்ளவேண்டும். இதே பிரகாரம் இரண்டு மூன்று தடவை பின்புறமாக விழச்செய்யவேண்டும்.

14-வது பாடம்.

3-வது பரீக்ஷை.

முன்புறமாக விழச்செய்தல்.

முன்சொன்னபிர்காரமே அவனை நேரே நிறுத்திக்கொண்டு சரீரமுழுவதையும் தளர்த்தி முன்புறமாக சாய்வதில் மனதை ஏகாக்ரமாக்கி அமைதியாய் நிற்கச்சொல். அவனுக்கெதிரில் நீ வந்து நின்றுகொண்டு அவனுடைய இரு கண்களுக்கு மத்தியிலுள்ள மூக்கினடிப்பாகத்தில் உன்னிரு கண்களையும் நிறுத்திப் பார்த்துக் கொண்டிருக்கையில் அவனது இரு சென்னிப்புறங்களிலும் உன்

கைகளால் லேசாய் தொட்டுக்கொண்டிரு. அவன் கண் ணிமைக் காமல் உன் கண்ணின் கருவிழியிலுள்ள பாவையை (கூர்ந்துபாரா மல் தூக்கமயக்கத்தி லிருப்பதுபோல் அசதியோடு) நோக்கும்படி

சொல்லவேண்டும். அவன் கண்ணிமைக்காமல் அசதியோடு தூக் க மயக்கத்திலிருப்பவன்போல் உன் கண்களை பார்த்துக்கொண்டி ருக்கையில் நீ சொல்லவேண்டிய மந்திரமாவது "நீ முன்புறமாய் சாய்ந்து விழுகிறாய், விழுகிறாய், விழுகிறாய்" (now, you are falling forward, you are falling, you are falling, falling, falling,) என்று சொல்லி உன் கைகளை அவன் சென்னியினின்று மெதுவாய் எடுத்துவிட்டு நீயும் பின்புறமாகச் சாய்கையில் அவன் முன்புறமாகச்சாய்ந்து உன் மீது விழுவான். கீழே விழுந்துவிடா

மல் பிடித்துக்கொள்ளவேண்டும். இதையும் திரும்பத் திரும்ப இரண்டு மூன்றுதடவை செய்து அப்பியாசிக்கவேண்டும்.

15-வது பாடம்.

4-வது பரீக்ஷை.

நோயாளியை உனக்கெதிரில் உட்காரவைத்து அல்லது நிற்கச்சொல்லி அவனுடைய இருகரங்களின் உள்ளங்கைகள் ஒன்றோடொன்று பொருந்தத் தக்கதாகவும் ஒரு கை விரல்களினடுவில் மறுகையின் விரல்கள் சேர்ந்து இருகரங்களும் இறுக்கிப் பூட்டிக்கொள்ளத் தக்கதாகவுஞ் செய்து, சிறிது நேரம் அவன் கைப்பூட்டை உன் கைகளால் இறுக்கிப் பிடித்துக்கொண்டு அவன் புருவமத்தியை உற்று நோக்கிப்பார். அவனையும் உன் கண்களுக்குள் உற்றுப் பார்க்கச்சொல். அவன் கைகளிரண்டும் உறுதியாய்ப் பூட்டிக்கொள்ளவேண்டுமென்று திடமாய்த்தியானித்துக்கொண்டு உன் கைகளை எடுத்துவிட்டு நீ திடமாய்ச்சொல்லவேண்டியதாவது,

மந்திரம்.

"உன் கைகளிரண்டும் பூட்டிக்கொண்டன, உறுதியாய் ஒட்டிக்கொண்டன, உன்னால் பிரிக்க முடியாது-முடியாது-முடியாது, பூட்டிக்கொண்டன, பூட்டிக்கொண்டன, உன்னால் பிரிக்க முடியாது, நன்றாக முயன்றுபார் உன்னால்முடியாது, ஒட்டிக்கொண்டன" என்று நீ சொல்லிக்கொண்டிருக்கையில் அவன் எவ்வளவு பிரயாசப்படினும் கைகளைப் பிரிக்கமுடியாமல் கஷ்டப்படுவான். பார்ப்பவர்கள் பிரமிப்படைவார்கள்.

இந்த நான்கு பரீக்ஷைகளினாலும் ஒருவன் தன்மனதை ஏகாக்கிரமாக்குந் தன்மையுடையவனா இல்லையாவென்று கண்டுகொள்ளலாம். இவற்றில் சித்தியடைந்தவனை எளிதில் தூங்காமல் தூங்கும் நிலைக்குக் கொண்டுவரலாம்.

16-வது பாடம்.

ஆனந்தசாகரன் :—கருணாநிதியே! ஒருவன் விழிப்பு நிலையிலிருக்கும்பொழுதே இவ்வித அற்புதங்கள் செய்யலாமென்பதை இதுகாறும் அறிந்திலேன். இவ்வித விழிப்புநிலை அற்புதங்கள் இன்னும் எத்தனையுளவென்பதை தெரிவிக்கக் கோருகிறேன். மேலும், ஓர் சந்தேகம்—விழிப்பு நிலையிலுள்ள ஒருவன் மயங்கி இக்கிரியைகள் செய்வானாயின் இதற்குக் காரணம் அவனுடைய உள்மனமேதா? வெளிமனமேதா?

சர்வகலாநிதி :—விழிப்பு நிலையிலேயே ஒருவனை மயங்கவைத்துச் செய்யக்கூடிய அற்புதங்கள் அனந்தம் உள; அவற்றில் சிலவற்றைக்கூறுகின்றேன கவனமாய்க்கேள். ஆனால் நீ இவைகளைச் செய்யும்பொழுது தேர்ந்தபண்டிதன்போல் பாவனைபண்ணி ஆத்திரப்படாமலும் பயப்படாமலும் மனக்குழப்பமில்லாமலும் பூரண தைரியத்தோடு செய்வாயாயின் மற்றவர்களுக்கு உன்னிடத்தில் நம்பிக்கையும் விசுவாசமும் அதிகரிக்கும். நீ கோரிய காரியங்களெல்லாம் சித்தியாகும். ஒரு தடவை தவறிவிட்டால் மனத்தளர்ச்சியுறாமல திரும்பத் திரும்பச் செய்து பார்க்கவேண்டும். முதலாவது சொல்லப்பட்ட நான்கு பரீக்ஷைகளுக்கும் ஒருவன் இணங்காவிடின் அவனுக்கு மனதை ஏகாக்ரமாக்கும் சக்தி இல்லையெ

ன்று தள்ளிவிட்டு வேறொருவனைப் பரீக்ஷித்துப்பார். மேற்கூறிய 4 பரீக்ஷைகளுக்கும் உள்ளானவர்களிடம் விழிப்பு நிலையிலேயே அனந்தம் வேடிக்கைகள் காண்பிக்கலாம். உதாரணமாக,

Coin Example

1. ஒரு ரூபாயை கீழே எறிந்துவிட்டு "உன்னால் இந்த ரூபாயை எடுக்க முடியாது, எடு பார்ப்போம், உன்னால் கூடாது, கூடாது" என்று சொன்னால் அநேகருக்கு எடுக்கமுடியாது.

Chair Example

2. அப்படியே, "நீ உட்கார்ந்திருக்கும் நாற்காலியில் ஒட்டிக்கொண்டாய். உன்னால் எழுந்திருக்க முடியாது, ஒட்டிக்கொண்டாய், எழுந்திருக்கமுடியாது" என்று தைரியத்துடன் சொல்வாயாயின் எழுந்திருக்கக்கூடாமல் போய்விடும்.

Wall and hand with touching

3. ஒருவனுடைய கையைச் சுவற்றில் விரித்துவைக்கும்படி சொல்லிவிட்டு, "உன் கை சுவற்றில் ஒட்டிக்கொண்டது, உன்னாலதை எடுக்கமுடியாது, முடியாது, கையை எடு பார்ப்போம், முடியாது" என்று சொல்வாயாயின் கையை எடுக்கமுடியாமல் தத்தளிப்பான். பார்த்தவர்கள் பிரமிப்படைவார்கள்.

Mouth disnormal

4. முதல் நான்கு பரீக்ஷைகளுக்குமுள்ளான ஒருவனின் வாயைத்தொட்டு உனக்கு "தெற்றுவாயாகிப்போயிற்று, உன்னால் நன்றாய்ப் பேசமுடியாது" என்று சொன்னால் அவன் திக்குவாயனைப்போல் பேசுவான்.

disconcentration

5. "உனக்கு ஞாபகசக்தியில்லை, உன் பெயரை மறந்துவிட்டாய், உன் பெயரென்ன சொல் பார்ப்போம்" என்று கேட்டால் தன் பெயர் சொல்லமாட்டாமல் தத்தளிப்பான்.

6. "உன் கையை நீட்டுபார்ப்போம். உன் கை மரம்போல் விரைத்துப் போயிற்று, நீ அதை மடக்க முடியாது, விரைத்துப்

disorder of hands

போயிற்று. மடக்கு பார்ப்போம்" என்று சொல்ல கை மரம்போல் மதத்துப்போகும்.

7. "உன் வாயைத்திற பார்ப்போம், இனிமேல் உன்வாயை மூடமுடியாது, வாய் திறந்தே இருக்கும்" என்றுசொல்ல வாயை மூடக்கூடாமல் போய்விடும். உடனே உன் கையால் அவன் வாயைத் தடவிக்கொடுத்து "இப்பொழுது சரியாகிவிட்டது. இனி மேல் வாயை மூடிக்கொள்ளலாம்" என்று சொன்னவுடன் சரியாகிவிடும். இதே விதமாய் முன் சொல்லிய விளையாட்டுகளொவ்வொன்றின்பின்னும் அந்தந்த அவயவத்தை உன்கையால்தொட்டு "இப்பொழுது சரியாகிவிட்டது. உன்னால் கூடும்" என்று சொல்லி கட்டவிழ்க்கவேண்டும்.

17-வது பாடம்.

யோகநித்திரையினின்றெழுப்புதல்.

ஆனந்தசாகரன்:—சுவாமி! ஒவ்வொரு விளையாட்டின் பின்னும் கட்டவிழ்த்துவிட வேண்டுமென்று சொன்னீர்களேயன்றி, தூங்காமல் தூங்கும் நிலைக்குக் கொண்டுவரப்பட்ட ஒருவனைத் தூக்கத்தினின் றெழுப்பும் விதங்களைச் சொன்னீர்களில்லையே. அதைச்சிறிதுசொல்ல வினயமாய் வேண்டிக்கொள்ளுகின்றேன்.

சர்வகலாநிதி:—அப்பா, நல்லசமயம் நினைப்பூட்டினாய். தூங்காமல் தூங்கும் நிலையிலிருக்கும் ஒருவனை நீ முன்னெச்சரிப்புக் கொடாமல் திடீரென்றெழுப்பக் கூடாது. அப்படிச் செய்வதால் அனேகர் விழிப்புநிலையி லிருக்கும்பொழுதும் தூங்குமூஞ்சியுடன்

திரிவார்கள். ஆதலால் ஒருவனை தூக்கத்தினின் றெழுப்புமுன் அவனுக்கு சுக செல்வ நன்மைகளுக்கான ஆசீர்வாதஞ் சொல்லி சுகம், சந்தோஷம், தைரியம், பெலன், மகிழ்ச்சி முதலிய தன்மைகள் அவனிடம் சதாகுடிகொண்டிருக்கத்தக்கதாக தகுந்த யோசனைக்குறிப்பு வசனங்களை உபயோகிக்கவேண்டும்.

மந்திரம்.

நீ இப்பொழுது சுகமும், ஆறுதலுமான ஆனந்த நித்திரையிலிருக்கின்றாய். நான் இப்பொழுது உன்னை நித்திரையினின் றெழுப்பப்போகின்றேன். நீ எழுந்திருந்த பின்பும் சுகமும் சந்தோஷமுமாகவே யிருப்பாய். நோய்நொம்பலங்கள் உன்னை அணுகாது. இனிமேல் உனக்கு வேதனை யென்பதே கிடையாது. உன்னைப்பிடித்த சனியன் இன்றோடு தொலைந்தது. ஆதலால் நீ எதைச்செய்தாலும் எவருடன் பேசினாலும் ஆனந்தத்துடன் நடந்துகொள்வாய். நீ பெலசாலி. தைரியஸ்தன். நீ தூங்கும்போது நடந்தவிஷயங்க ளெல்லாவற்றையும் நீ விழித்தவுடன் மறந்துவிடுவாய். மகிழ்ச்சி எப்பொழுதும் உன் முகத்தில் குடிகொண்டிருக்கும். ஸ்ரீதேவி உன்னோடு வாசம்பண்ணுவாள். தைரிய லக்ஷ்மி உன்னைத் தாங்கி நடத்துவாள். நீ எப்பொழுதும் ஆரோக்கியத்துடனும் ஆனந்தமாகவுமிருப்பாய். உன் முகத்தில் தேஜசும் உன் மனதில் மகிழ்ச்சியும் பெருகியுண்டாகும். இப்பொழுது நான் மூன்று எண்ணி கை தட்டுவேன்; அப்பொழுது விழித்துக்கொள்வாய். ஆனால் நான் எப்பொழுது தூங்கச்சொல்வேனோ அப்பொழுது தூங்கிவிடுவாய். இப்பொழுது விழித்துக்கொள்ள ஆயத்தமா யிருக்கிறாயா? ஒன்று இரண்டு மூன்றுஎன்றுசொல்லி கைதட்ட உடனே விழித்துக்கொள்வான்.

சிலர் திடீரென்று சொர்ப்பனுவஸ்தையைத் தாண்டி சுழுப்தி நிலையிலிருக்கலாம். அப்படிப் பட்டவர்களின் மனம் யாதேனுமோர் விஷயத்திலேனும், தெய்வ தரிசனையிலேனும் சொக்கி நிற்கையில் மாந்திரீகன் எழுப்பமுயன்றால் அவனுடைய வசனங்களைக் கவனியாமலும் கேட்கும் கேள்விகளுக்குப் பதில்கொடாமலுமிருக்கலாம். அப்படிப்பட்டவர்களுக்கு மாந்திரீகன் தனது இருகைகளையும் விரித்து மெதுவாய் மேல்நோக்கி தடவுவதுடன் தன் வாயாலும் அவனுடைய தாடையிலிருந்து நெற்றிவரை மேல்நோக்கி ஊதவேண்டும். இப்படிச் செய்துகொண்டிருக்கையில் மாந்திரீகன் தனது மனதில் "தூங்குகிற நீ உடனே விழித்துக்கொள்ள வேண்டும்" என்று ஒரு சிந்தையாயிருக்கவேண்டும். மேலும் அவன் கண்களை பலவந்தமாய்த் திறந்து விழித்துக்கொள் என்று சொல். இதற்கும் விழிக்காமலிருந்தால் அவனை உபத்திரவப் படுத்தாமல் தூங்கவிடு. சில நிமிஷங்களுக்குள் விழித்துக்கொள்வான். ஆத்திரப்படாதே. பயத்துக்கும் இடங்கொடுக்காதே. ஹிப்னடிசத் தூக்கத்தால் யாதொரு தீங்கும் நேரிடாது.

குறிப்புகள்.

1. ஒருவனைத் தூங்கச்செய்யுமுன்னதாகவே நான் உச்சரிக்கும் மந்திரத்தால் தூங்கிவிடுவாய். ஆனால் விழித்துக்கொள் என்று எப்பொழுது சொன்னேனே அப்பொழுது உடனே விழித்துக் கொள்வாய் என்று எச்சரித்திருந்தால் எவ்விதமும் உடனே எழுந்திருப்பான்.

2. ஒருவனைத் தூங்காமல் தூங்கும் நிலைக்குக்கொண்டுவந்த முதல் தடவையிலேயே சிகிச்சை செய்யவாவது விளையாட்டுகள் காண்பிக்கவாவது கூடாது. இரண்டு மூன்று தடவை தூங்கவைத்தபின்பே சிகிச்சை செய்ய ஆரம்பிக்கலாம்.

3. முதலாவதாக தூக்க நிலைமைக்குட்பட்டவனை எழுப்பு முன் "நீ விழித்துக்கொண்ட பின்பும் நான் எப்பொழுது உன்னைத் தூங்கச்சொல்வேனோ அப்பொழுது நீ தூங்கிவிடுவாய்" என்ற யோசனைக்குறிப்பை இரண்டு அல்லது மூன்றுதடவை உச்சரித்து விட்டு எழுப்பினால் அடுத்த தடவை அவன் தூங்குவதற்கு ஆயத்தமாக இருப்பான். "தூங்கு" என்று நீ சொன்னவுடன் அவன் தூங்கிவிடுவான். "தூங்கு" என்று நீ ஒரு கடிதாசியில் எழுதிக் காட்டினாலும் தூங்கிவிடுவான்.

4. மற்றோர் எச்சரிப்பும் முன்னதாகவே செய்துவைப்ப தவசியம். அதாவது "என்னைத்தவிர வேறெவரும் உன்னைததூங்கச் செய்ய முடியாது." என்று பலதடவை அவன் தூங்குகையில் சொல்லிவைக்கவேண்டியது.

18-வது பாடம்.

ஹிப்னடிச தூக்கம்.

ஆனந்தசாகரன்:—அடியேனின் அறியாமையகற்றும் அருள் ஞான ரவியே! நான் ஒருவனைப்பார்த்து நீ தூங்கிவிட்டாய் என்று சொன்னவுடனே அவனுக்கு தூக்கம்வந்துவிடுமோ? அதன் அந்தரங்க காரணத்தை அடியேனுக்கு விளக்க அஞ்சலி செய்கின்றேன்.

சர்வகலாநிதி:—ஆனந்தா! நீ ஒருவனை நோக்கி "நீ தூங்கி விட்டாய்" என்று சொன்னமாத்திரத்தில் அவனுக்கு தூக்கம் வந்துவிடாது. ஆனல் நோயாளியை வசதியான ஓர் ஆசனத்தி

னுட்காரவைத்து, அவன் சரீரத்தின் அவயவங்க ளனைத்தையுந் தளர்த்தும்படி செய்யவேண்டும். அவன்முன் நின்றுகொண்டு அவனை நோக்கி "நீ தூங்கப்போவதைத் தவிர வேறெந்த எண்ணமும் உன் மனதில் புகவிடாதே. இந்தத்தூக்கத்தினால் உனக்கு நன்மையுண்டாகும். உன் நோய் நீங்கிவிடும். கடவுள் கிருபையால் நீ சுகதேகி ஆகிவிடுவாய். இப்பொழுது நீ பராக்குப் பாராமல், என் கண்களுக்குள் ஒரே நிலையாய்ப் பார்த்துக்கொண்டு தூங்குவதற்கு ஆயத்தமா யிருப்பாயாயின் உடனே தூக்கம் வந்துவிடும் என்று சொல்லிவிட்டு அவன் புருவ மத்தியை நோக்கிப்பார். கண்ணிமைகளை அசைக்காமல் ஒரே நோக்காய் அவன் புருவ மத்தியை நோக்கிப்பார். உன் திறமையில் பூரணநம்பிக்கை யுள்ளவனாய் அதிகாரத்துடன் அவனை நோக்கி "உன் கண்ணிமைகள் களைத்துப் பளுவாகிவிட்டன. உன் கண்களைத் திறந்து வைத்திருக்க உன்னால் முடியாது. உன் கண்கள் மூடிக்கொள்ளும்." என்று பலதடவை உச்சரித்துக்கொண்டிருப்பாயாயின் சீக்கிரம் அவன் கண்ணிமைகள் அசைந்து மூடிக்கொள்ளும். இதைப்பார்க்க உனக்கே ஆச்சரியமாக இருக்கும்.

இப்பொழுது நோயாளியின் முகத்திலிருந்து பாதம் வரை நெடில் தாடனஞ்செய்து இரண்டு மூன்றுநெடில் தாடனத்திற்குப் பின் குறில் தாடனங்களும் சில செய்துவிட்டு உன் இடதுகையின் பெரு விரலை நோயாளியின் புருவமத்தியில் வைத்துச் சொல்லவேண்டியதாவது, "நீ நன்றாய்த் தூங்கிவிட்டாய். வசதியாய்த் தூங்குகிறாய். நான் சொல்வது மட்டுந்தான் உன் காதில் விழும். மற்றெந்த சப்தமும் உன் காதில் விழாது. நீ நித்திரை செய்கிறாய். நன்றாய்த் தூங்குகிறாய். நான் சொல்லுகிறதை மட்டுங் கேட்பாய். நான் சொல்லுகிறபடியே செய்வாய். நான் உன்னை "விழித்துக் கொள்" என்று சொல்லும்வரை நன்றாய்த்தூங்கு" என்று சொல

லிவிட்டு அவன் நோயை சொஸ்தமாக்கலாம். விளையாட்டு வேடிக்கைகளும் காண்பிக்கலாம்.

உன் திறமையில் நோயாளிக்கிருக்கும் நம்பிக்கையே இதற்குக் காரணம். அநேகர் கங்காதீர்த்தம், இராமேஸ்வரம், திருச்செந்தூர், மெக்கா முதலிய தெய்வ ஸ்தல யாத்திரைகளால் தமது நோய்களைத் தீர்த்துக்கொள்வதற்செல்லாம் காரணம் அவர்களுக்குள்ளிருக்கும் பக்தியும் நம்பிக்கையுமே யன்றி ஸ்தலங்களின் மகிமையாலாவது அபார சக்தியினலாவது அன்று என்பதைத் திட்டமாயறிந்துகொள். இவ்விஷயங்களைப்பற்றி மனேவசிய சாஸ்திரத்தில் **யோசனைக் குறிப்பு** என்ற பாடத்தின்கீழ் சவிஸ்தாரமாய்ச் சொல்லியிருப்பதைப் பார்த்துக்கொள்.

19-வது பாடம்.

ஒருவன் தூங்கிவிட்டானவென்றறியும் விதம்.

ஆனந்தசாகரன்:—கற்றவர் மெச்சும நற்றவமணியே! மந்திரோச்சாடனத்தாலும் தடவு பாவனை செய்து தாடனஞ செய்வதாலும் நோயாளி தூங்கிவிட்டானென்பதை கண்டுகொள்வதெங்ஙனம்? ஒருவனுக்குத் தூக்கமுண்டாக்கத் தக்கதாக எவ்வளவு நேரம் மந்திரோச்சாடன முதலியவை செய்யவேண்டும்?

சர்வகலாநிதி:—முதலாவது முறையிற் சொல்லியிருக்கிற பிரகாரம் நோயாளிக்கு தூக்கமுண்டாகும் விதங்களைப்பற்றி விளக்கிக் காட்டியபின் பிரகாசமான வஸ்துவைப் பார்க்கச் செய்து கண்களு

க்கு களைப்புண்டாக்கி தகுந்த யோசனைக்குறிப்பு வசனங்களை உபயோகித்தால் எறக்குறைய ஐந்து நிமிஷத்திற்குள் தூங்கிவிடுவான்.

ஆனால் இவ்வித தூக்கம் சொர்ப்பனவஸ்தையைத் தாண்டி சுழுத்தியில் உள்மனதை நிறுத்தி கிரியைசெய்யுந்தொழில்களாகிய தூரதிருஷ்டி முதலிய அரிய செயல்களுக்குதவாது. நோய்களைத் தீர்ப்பதற்கும் வெளிமனதைமயங்கவைத்துஉள்மனதின் செயலால் வேடிக்கை காண்பித்து ஜனங்களை பிரமிப்படையச் செய்வதற்கும் இதுவே போதுமானது.

ஆழ்ந்த நித்திரை யுண்டாக்கி சுழுத்தி, துரியம், துரியாதீதம் முதலிய நிலைகளில் மனதைச் சொக்கவைப்பதற்கு மெஸ்மரிச தாடனமே தகுந்தது. ஆனால் அவ்வித தூக்கமுண்டாக்க அரைமணி நேரம் வரை பிடிக்கும். இது மிகக் கஷ்டமானவேலை.

ஒருவன் தூங்கிவிட்டானா வென்று பரீக்ஷிப்பதற்கு அவனுடைய கையைத்தடவிக்கொடுத்து "உன் கை விரைத்துக் கட்டையைப்போலாகிவிட்டது" என்றுசொல்லிவிட்டு மடக்கிப்பார்த்தால் மடக்கமுடியாமல் கட்டைபோல் விரைத்து நிற்கும். அப்பொழுது அவன் தூங்கிவிட்டானென் றறிந்துகொள்ளலாம். கை மடங்கினால் தூங்கவில்லை யென்பதர்த்தம். அப்படிப்பட்டவனை மறுநாள் வரச் செய்து திரும்பவும் தூக்க மந்திரமுதலியவற்றை யுச்சரித்துத் தூங்கச்செய்ய வேண்டும்.

20-வது பாடம்.

3-வது முறை.

நோயாளியை உன்முன் உட்காரவைத்து, நீ அவனுக்கு முன்பாக, ஓர் உயர்ந்த ஆசனத்தில் உட்கார்ந்துகொள். உன்னிரு கரங்களாலும் அவனுடைய இரு கரங்களின் பெருவிரல்களையும் நன்றாய்ப் பிடித்துக்கொண்டு அவன் புருவ மத்தியைப்பார். அவன் உன் கண்களுக்குள் பார்த்துக்கொண்டிருக்கையில் முன்சொல்லிய தூக்கமந்திரத்தை மெதுவாக உச்சரித்துக்கொண்டிருப்பாயாயின் உன்னிலுள்ள காந்தசக்தி அவனில் பாய்வதை அவன் உணர்ந்து தூங்கிவிடுவான்.

21-வது பாடம்.

4-வது முறை.

உன் கால்கள் அவன் கால்களைத் தொடத்தக்கதாக உட்கார்ந்துகொண்டு உன் கைகளை அவன் கைகளுக்குள் விரலைச் செலுத்திப் பிடித்துக்கொண்டு தியானத்துடன் அவன் புருவமத்தியை நோக்கி தூக்கமந்திரத்தை உச்சரிப்பாயாயின் அவன் தூங்கிவிடுவான்.

22 வது பாடம்.

5-வது முறை.

ஓர் தனித்த அறையில் நோயாளியை உட்காரச் செய்துகொண்டு, முன்னதாகவே தூங்கப்பழகியிருக்கும் ஒருவனை அவன் பக்கத்தில் நிறுத்தி தூங்கச்செய்து சிகிச்சை செய்வாயாயின் அதைப் பார்த்திருந்த புதிய நோயாளிக்கு உன் திறமையில் நம்பிக்கையுண்டாகி அவனும் தூங்குவதற்கு உடனே ஆயத்தத்துடனிருப்பான். அவனிடத்தில் நீ சொல்லவேண்டியதாவது:—

"நீ ஒன்றைப்பற்றியும் நினையாமல் உன் மனதை வெறுமனே வைத்துக்கொள். (மாந்திரீகன் தனது கை விரல்களிலொன்றை அல்லது யாதேனும் பிரகாசமான ஓர் சிறிய வஸ்துவை, அல்லது சுவற்றிலுள்ள ஓர் ஆணியை, அல்லது புள்ளியை, அல்லது வீட்டுக் கூறையிலுள்ள ஓர் குறியைக் காண்பித்து) உன் கண்களை ஏறெடுத்து இந்த அடையாளத்தைப் பார்த்துக்கொண்டிருக்கையில் நீ தூக்கமயக்கத்திலிருப்பதாக எண்ணிக்கொள். இப்பொழுது உன் பார்வை மங்கலாகி உன் கண்ணிமைகள் பளுவாகின்றன. உன் கைகால்கள் அசைவற்று அசதியுற்றிருக்கின்றன. உன்னால் அசையமுடியாது. உனக்கு எல்லாம் இருள்மயமாகி விட்டது. உன்னிடத்தில் உணர்ச்சியே யில்லை. நீ தூக்கமயக்கத்திலிருக்கிறாய். நீ தூங்குகிறாய். உன் சரீரம் அயர்ந்து சோர்வுற்றிருக்கிறது. உன் கண்கள் பளுவாகி மூடிக்கொண்டன. நீ தூங்குகிறாய். உன் கண்கள் நன்றாய் மூடிக்கொண்டன. (இப்பொழுது கண்கள் தானாக மூடிக்கொள்ளும். இல்லாவிடில் மாந்திரீகன் தனது கையால் நோயாளியின் கண்களை மூடிவிடவேண்டும்.) இந்த

முறையால் முதல்முதல் தூக்கநிலைமைக்குட்படுபவன் ஐந்துமுதல் பத்து நிமிஷத்திற்குள் தூங்கிவிடுவான்.

23-வது பாடம்.

6-வது முறை.

ஓர் கட்டிலில் உயரமில்லாத தாழ்வான தலையணையில் தன் தலைகளை வைத்துக்கொண்டு நோயாளி நீட்டி நிமிர்ந்து படுத்துக் கொள்ளட்டும். அவன் தலைப்பக்கத்திற்குப் பின்னுலுள்ள ஓர் நாற்காலியில் மாந்திரீகன் உட்கார்ந்துகொண்டு முன்னுக்கு வளைந்து, படுக்கையிலுள்ளவன் கண்களுக்குள் பார்க்கவேண்டும். நோயாளியின் கண்களுக்கும் மாந்திரீகனின் கண்களுக்கு மிடையில் ஆறு அங்குல தூரமிருக்கட்டும். நோயாளி அதிக கஷ்டமில்லாமல் அண்ணார்ந்து பார்க்கையில் மாந்திரீகனின் கண்களுக்குள் பார்க்கத்தக்கதாக இருக்கவேண்டும். நோயாளி தன் கண்களைத் தட்டாமல் பார்க்கவேண்டும். எவ்வித சப்தமும் நோயாளியின் கவனத்தைச் சிதறவிடாத வண்ணம் எச்சரிக்கை செய்துவிட்டு மாந்திரீகன் தன் மனதுக்குள்ளே "நோயாளி கட்டாயம் தூங்க வேண்டும்; ஆழ்ந்த நித்திரைக்குள்ளாகவேண்டும்" என்று உறுதியாய் உச்சரித்துக்கொண்டு நோயாளியை நோக்கி "உன்னையறியாமல் உன் கண்கள் மூடிக்கொண்டாலன்றி நீயாக உன் கண்களை மூடவே கூடாது" என்று எச்சரிக்கவேண்டும். திரும்பவும் மூடிக்கொள்வானுனல் திரும்பவும் எச்சரித்து திறக்கச்செய்து அவன்

கவனத்தை உன்மேல் செலுத்தச் சொல்லு. அவன் கண்களை திறக்கமுடியாமல் போனவுடன் நீ தூக்க மந்திரத்தை உச்சரிக்க அவன் ஆழ்ந்தநித்திரைக்குள்ளாவான். சஸ்திரவைத்தியத்திற்கு தகுந்த முறை இதுவாகும்.

24-வது பாடம்.

7-வது முறை.

நோயாளி அமைதி நிலையில் அமர்ந்திருக்கையில் அவன் பின்னுக்கு ஒரு மேஜைமேல் ஓர் கைக்கடியாரத்தை வைத்து அதன் சப்தத்தைக் கவனித்திருக்கச் சொல்லிவிட்டு மாந்திரீகன் தூக்க மந்திரத்தை உச்சரித்துக்கொண்டிருந்தால் அவன் தூங்கிவிடுவான். இதேபிரகாரம் ஏழு அல்லது எட்டுப்பேரை மேஜையைச் சுற்றி முதுகு காட்டி உட்கார வைத்திருந்தால் அவர்களெல்லாரும் தூங்கிவிடுவார்கள். இவர்களிலெவர்களுக்குத் தமது கை கால்களைத் தளர்த்திவிட்டு அமைதி நிலைக்குட்படத் தெரியாதோ அவர்கள்மட்டுமே தூங்கமாட்டார்கள்.

25-வது பாடம்.

8-வது முறை.

அமைதி நிலையின் தன்மையைப்பற்றி நோயாளிக்கு விளக்கிக் காண்பித்தபின் அவனை ஓராசனத்தில் உட்காரச்சொல்லி மாந்திரீகன் அவன்முன் நின்றுகொண்டு அவன் கண்களுக்கு நாலங்குலத்துக்கப்பால் தனது இரண்டு விரல்களைக்காட்டி அதை அண்ணார்ந்துப் பார்க்கச் சொல்லவேண்டும். நோயாளி உன் விரல்களைக் கண்ணிமைக்காமல் பார்த்துக்கொண்டிருக்கையில் நீ உன் கையை மெதுவாய் அவன் கண்ணுக்கெதிரில் வட்டஞ்சுற்ற அவன் கண்கள் உன் கை போகிற மார்க்கஞ்சென்று வட்டஞ் சுற்றிக்கொண்டிருந்த சிறிது நேரத்துக்குள் கண்கள் களைத்து மூடிக்கொள்ளும் உடனே தூக்கமந்திரஞ் சொல்லி தடவிக்கொடுக்க தூங்கிவிடுவான்.

26-வது பாடம்.

9-வது முறை.

சிறிதுநேரம் நோயாளியுடன் சம்பாஷணை செய்து அவன் தனக்கிருக்கும் கஷ்டங்களைத் தெரிவித்தபின் ஓர் வசதியான ஆசனத்தில் உட்காரச்சொல்லி உன் கை விரல்களிரண்டை அவன் தலைக்குப் பத்து அங்குல உயரத்தில் காண்பித்து, அவற்றை அண்ணார்ந்து பார்க்கச்சொல்லி, தூக்க மந்திரத்தை உச்சரி. அப்படிப்

பார்த்துக்கொண்டிருக்கையில் அவன் விழிகள் மேலாகச் சொருகி சீக்கிரம் களைத்துப்போக அவன் கண்களை மூடித் தூங்கிவிடுவான். கை விரல்களுக்குப் பதிலாக ஓர் கண்ணாடித் துண்டு, காகிதப் பென்சலின் நுனி முதலிய யாதேனுமோர் வஸ்துவையும் காண்பிக்கலாம்.

27-வது பாடம்.

10-வது முறை.

ஆனந்தசாகரன்:—சுவாமி! ஒருவனைத் திடீரென வசியஞ் செய்து தூங்காமல் தூங்கும் நிலைக்குக் கொண்டுவரக்கூடிய வழிகளில் மிக்க உசிதமாகத் தங்களுக்குத் தோன்றிய ஓரே வழியை அடியேனுக்குப் போதித்தால் போதுமென எண்ணுகிறேன். அப்படியிருக்க, தாங்களெத்தனையோ முறைகளைச்சொல்லிக்கொண்டு போகிறீர்களே அது எதற்காக?

சர்வகலாநிதி:—இவ்வுலகம் பலவிதம். இவ்வுலகிலுள்ள ஆன்மகோடிகளுள் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறான தன்மையுண்டு. ஒவ்வொருவருக்கும் அவரவர் தன்மைக்கேற்றவிதம் சிகிச்சை செய்வதே பண்டிதனது சாமர்த்தியமாகும். ஒரு வகையை உபயோகித்து சித்தியடையாவிடில் மற்றோர் வகையை உபயோகித்து நித்திரையை வருவிக்கவேண்டியதாகும். மேலும் இதுவரையில் பற்பல சாஸ்திரிகளும் கண்டுபிடித்துபயோகித்துவரும் முறைகளை அறிந்திருப்பாயாயின் சமயோசிதமாய் எந்தெந்தமுறை உசிதமெனத் தோன்றுகின்றதோ அந்த முறையை உபயோகித்து

சித்தியடையலாம். இம்முறைகளொவ்வொன்றையும் நீ அப்பியாசித்துப் பழகியிருக்க வேண்டிய தவசியம். முன் சொல்லப் பட்ட முறைகளில் நீ கை தேர்ந்தவுடன் பின் சொல்லப்படும் முறையே நல்லதாகும்.

நோயாளியை ஓர் வசதியான ஆசனத்தில் உட்காரச் சொல்லிக்கொண்டு நீயுமோர் சரிசமமான ஆசனத்தில் உட்கார்ந்துகொள். அவன் வலது கையை அவனது இடது தொடையிலும், இடது கையை வலது தொடையிலும் வைக்கச்சொல்லி, உன்னுடைய வலது கையால் அவனுடைய இடது கையையும், இடது கையால் அவனுடைய வலது கையையும் பிடித்துக்கொண்டு உனது பெருவிரல்களை அவன் கைகளின் பின்புறத்தில் வைத்துக்கொள். அவன் கண்களுக்கு ஒன்றரை ஜாண் தூரத்தில் உன் கண்களைவைத்து முன்னுகச் சாய்ந்துகொண்டு அவன் தனது கண்களைத் தட்டாமலும், அங்குமிங்கும் பாராமலும் ஒரே பார்வையாய் உன் கண்களொன்றினுள் உற்றுப் பார்க்கச்சொல். சிறிதுநேரத்திற்குப்பின் நீ உச்சரிக்கவேண்டிய மந்திரமாவது:—

மந்திரம்.

"நான் சொல்வதை நம்பவேண்டியது உன் கடமை. பயப்படாதே. நானெதைச் செய்தாலும் உன்னுடைய நன்மைக்காகவே செய்வேன். நான் உன் கைகளைப் பிடித்துக்கொண்டிருக்கையில் ஓர்வித மின்சார உணர்ச்சி உன் கைகளில் தோன்றும். அது வரவர அதிகரித்து உன்கைகள் முழுவதிலுஞ்சென்று உன் சரீரத்திலும் பரவும்.

சிறிது நேரத்திற்குள் என் கண்ணினுள் பார்த்துக்கொண்டிருப்பது உனக்கு கஷ்டமாகத் தோன்றும். உனக்குப்பார்க்கமுடி

யாமற்போனவுடன் உன் கண்களை மூடிக்கொள்ளலாம். பின்பு அவற்றைத் திறக்க உன்னால் கூடாது. உன் சரீரமுழுவதும் பிரகாசிக்கும் மின்சார சக்தியால் உனக்குள் இன்பகரமான ஆனந்த உஷ்ணந் தோன்றுகிறது. நீ கண்களைமூடவே உனக்குள் ஆழ்ந்த நித்திரையுண்டாகின்றது. இப்பொழுது நான் என் கரங்களால் உன் முகத்திலிருந்து தடவிக் கொடுக்கையில் காந்த சக்தி உன் சரீர முழுவதும் பரவி உனக்கு ஆனந்த நித்திரையை யுண்டாக்கும்.

" Place absolute confidence in me; do not be afraid; my whole treatment shall only be for your good. As I hold your hands in mine you will gradually feel a tingling sensation in your hands which will increase in power, slowly creeping up your arms and thence over your whole body.

You will find great difficulty after a time in keeping your eyes open and fixed upon mine, and when you feel you cannot keep them open any longer, they may close. Then you cannot open them. Your whole body will glow and the tingling sensation in your limbs will become a delicious genial warmth. When you close your eyes you will sink into a profound sleep and I shall make passes over you which will have the effect of distributing the magnetic fluid throughout your whole body."

மாந்திரீகன் நோயாளியின் கைகளைப்பிடித்துக்கொண்டு மேற்கூறியவாறு உச்சரித்துக் கொண்டிருக்கையில், தனது பெரு விரலால் அவன் கையின் பின்புறத்தை மெதுவாய் அமுக்தி அமுத்

திப் பிடிக்கவேண்டும். இவ்விதம் மாற்றி மாற்றி இரண்டு கைகளி லும் அழுத்திக்கொண்டிருக்கவேண்டும். ஆனல் மாந்திரீகன் தனது பெருவிரலால் விட்டு விட்டு அழுத்திக்கொண்டிருக்கிருனென்பது நோயாளிக்குத் தெரியக்கூடாவண்ணஞ் செய்யவேண்டும். வரவர அதிக மதிகமாய் அழுத்திக்கொண்டு மந்திரோச்சாடனத்தை தாலாட்டுவதுபோல் மெதுவாய் இழுத்து இழுத்து ஒவ்வொரு வார்த்தையாய் தூக்கமயக்கத்திலிருப்பவனைப்போல் உச்சரிக்கவேண்டும். பெரு விரலால் அடிக்கடி அழுத்திக்கொண்டிருப்பது நோயாளியின் கைகளில் ஓர் வித உணர்ச்சியை உண்டாக்கும். அந்த உணர்ச்சி அவன் சரீர முழுவதுமே பரவும். மேலும் அவ்வித அழுத்துதலால் இருவர் கவனமும் அக்கம் பக்கம் சிதருமல் ஏகோபித்து நிற்கும். நோயாளி தூக்கமயக்கத்திலிருந்தாலொழிய அவனுடைய கண்களை மூடவிடக்கூடாது. சிலர் ஆரம்பத்திலேயே தமது கண்களை மூடிக்கொண்டு மாந்திரீகன் சொல்வதையும் செய்வதையும் ஆராய்ந்து பார்த்துக்கொண்டிருப்பார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு தூக்கம் வரவேமாட்டாது. ஆதலால் உண்மையாகவே தூக்கமயக்கத்திலிருக்கிருன் என்று கண்டாலன்றி கண்களை மூடவிடக்கூடாது. வேறு சிலர் கண்களை அரைக்கண் போட்டுப் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே தூங்கிவிடுவார்கள். அப்படிப்பட்டவர்களின் கண்களை மூடிவிட்டுச் சொல்லவேண்டியதாவது :—

மந்திரம்.

நீ தூங்குகிருய்..., உன் சுவாசம் மெதுவாகவும் ஒழுங்காகவும் ஓடிக்கொண்டிருக்கிறது. நீ தூங்...கு...கிருய். நன்ருய்: தூங்...கு...கிருய். ஆழ்ந்த...நித்திரையி...லிருக்கிருய்.

You are asleep. Your breathing is easy and regular and you are falling faster and faster asleep. You are in deep sleep now. You are sleeping

இந்த மந்திரத்தை உச்சரித்துக்கொண்டே முன் சொல்லிய பிரகாரம் முகத்திலிருந்து தடவிக்கொடுக்கவேண்டும். சிறிது நேரத்திற்குப்பின் அவன் தூங்கிவிட்டானு இல்லையா என்று பார்க்கும்படி, அவன் கைகளில் ஒன்றைத்தூக்கிவிட்டால், அது நீ விட்ட இடத்திலேயே நின்றால் தூங்கிவிட்டானென் றறிந்துகொள்.

கைகள் திரும்பவும் கீழே விழுந்துவிடின் அவன் தூங்கவில்லையாதலின் மறுபடியும் தடவிக்கொடுத்து மந்திரோச்சாடனஞ் செய்யவேண்டியது. சிறிது நேரத்திற்குப் பின் கைகளை உயர்த்திவிட்டால் அப்படியே நிற்கும். அப்பொழுது தூங்கிவிட்டானென அறிந்துகொள். இந்தப்பரீக்ஷை எல்லாருக்குந்தகுந்ததன்று. ஏனெனில் சிலர் தூங்கிக்கொண்டிருந்தாலுங்கூட அவர்கள் கை எப்பொழுதும்போல் கீழே விழுவதும் உண்டு. அப்படிப்பட்டவர்களை மற்ற அறிகுறிகளால் பரீக்ஷிக்கவேண்டும். உதாரணமாக, “உன் கண்கள் காந்தசக்தியால் மூடப்பட்டிருக்கின்றன. அவற்றைத் திறக்கமுடியாது. நீ எவ்வளவு பிரயாசைப்படினும் திறக்க முடியாது. திற பார்ப்போம். உன்னால் கூடாது” என்று சொன்னால் தூக்கமயக்கத்தி லிருப்பவன் எவ்வளவு பிரயாசப் பட்டும் தன் கண்களைத் திறக்க முடியாமல் கஷ்டப்படுவான். உடனே அப்படிப்பட்டவனை நோக்கி, “நீ இப்பொழுது தூங்குகிறாய். ஆழ்ந்த நித்திரையிலிருக்கிறாய். நல்ல நித்திரை. ஆழ்ந்த நித்திரை. சுகமான நித்திரை” என்று சொல்லி தடவிக்கொடுக்கத் தூங்கி விடுவான். அவனை நோக்கி “நீ 5-நிமிஷந் தூங்கிவிட்டு எழுந்து விடுவாய். ஆனால் நான் எப்பொழுது தூங்கச்சொல்வேனோ அப்பொழுது தூங்கிவிடுவாய். இப்பொழுது தூங்கலாம். ஐந்து

நிமிஷத்திற்குப் பின்பு உன் தூக்கத்தினின்று சுகமாயும் சந்தோஷமாயும் விழித்துக்கொள்வாய்" என்று சொல்ல ஐந்து நிமிஷத்தில் தானுகவே விழித்துக் கொள்வான்.

அடுத்த தடவை அவனேக்கண்ட மாத்திரத்தில் தூங்கு, நீ ஆழ்நத நித்திரையிலிருக்கிருய். நீ தூங்குகிருய். நீ தூங்கிக்கொண்டிருக்கிருய்.

"Sleep, you are falling into a deep sleep. You are asleep. You are sleeping" என்று சொல்லி உன் கைகளே லேசாய் அவன் முகததின் மேல் தடவ அவன் தூங்கிவிடுவான். இவ்விதம் இரண்டு மூன்றுதடவை செய்தபின் நான்காவது தடவையில் அவனே நோய்க்காக சிகிச்சை செய்யலாம்.

28-வது பாடம்

11-வது முறை.

அநேகரைத் தூங்கச் செய்வது.

மாந்திரீகன் தான் முன்னதாகவே பழக்கிவைத்திருக்கும் இரண்டு மூன்று பேரை யோகநித்திரைக்குள்ளாக்கி சில விளையாட்டுகள் காண்பித்து கூடிவந்திருக்கிறவர்களுக்கு தன்னுடைய திறமையில் நம்பிக்கையுண்டாக்கவேண்டும். அதன் பின்பு கூடிவந்திருக்கிறவர்களுக்கு ஓர் பிரசங்கம் பின்வருமாறு செய்யவேண்டியது:—

பிரசங்கம்.

நண்பர்காள்! மற்றவர்களை மயக்கி வேடிக்கை விளையாட்டுக் காண்பிக்க நானிங்கு வரவில்லை. தற்காலத்தில் மேனாட்டவர்களுக்குள் வெளியாகியிருக்கும் ஹிப்னாடிசம் என்ற சாஸ்திரமானது பூர்வீக சித்தாதிகளும் யோகிகளும் அப்பியாசித்துவந்த சில அப்பியாசங்களேயன்றி நூதனமானதல்லவென்பதை ரூபிக்கும்பொருட்டே மனோதத்துவ சாஸ்திரிகள் நம்முடைய மனதை புறமனம், உள்மனம், ஆனந்தமனமென பல பிரிவுகளாகவும், அவற்றின் தொழில்களை ஜாக்ராவஸ்தை, சொர்ப்பனாவஸ்தை, சுழுத்தி, துரியம், துரியாதீதம் எனப்பல பிரிவுகளாகவும் வகுத்திருக்கின்றனர். அவற்றில் பஞ்சேந்திரியங்களால் உலகத்திலுள்ள விஷயங்களைக் கிரகிக்கும் புறமனமானது நாம் விழிப்பு நிலையிலிருக்கும்பொழுது மட்டுமே கிரியை செய்கிறது. நாம் தூங்கும்பொழுது பஞ்சேந்திரியங்களும் வெளிமனமும் அடங்கிவிட உள்மனமானது கிரியை செய்யத்தொடங்கி சொர்ப்பன ஸ்திதியை உண்டாக்குகிறது. அதற்கப்பாலுள்ள ஆனந்தமனம் கிரியை செய்கையில் நாம் சுழுத்தியைச்சேர்ந்து தூரதிருஷ்டி, மறைந்த பொருளைக் கண்டுபிடித்தல், முன்பின் சங்கதிகளை யறிதல் முதலிய தன்மைகளை யடைகிறோம். இவற்றிற்கு மேலானது துரியம் துரியாதீதம் முதலான ஸ்திதிகள்.

இப்பொழுது நான் விழிப்பு நிலையிலுள்ள வெளிமனதைக் கிரியைசெய்யவிடாமல் நிறுத்தி உள்மனதைக் கிளப்பிவிட்டு வேலைவாங்க யோசிக்கிறேன். இதற்கு உங்களுடைய ஒத்தாசை அத்யாவசியம். சந்தேகம், பயம், அவநம்பிக்கை, பராக்குப்பார்த்தல், என்ன நடக்கிறதென்றறிய ஆவல்கொள்ளுதல், ஆராய்ச்சி முதலிய சுபாவங்களுள்ளவர்கள் தங்கள் வெளிமனதை அடக்க முடியாத சாமான்ய ஜனங்களாயிருப்பார்கள். ஆனால் நான் சொல்வ

தை நம்பி, மற்றென்றையுங் கவனியாமல் மனதை ஒரே நிலையில் நிறுத்தி தூக்கநிலைமைக்குட்பட விரும்புவோர் நான் சொல்வதை மட்டும் கவனித்து சீக்கிரத்தில் நித்திரையாகுவர். ஆதலால் நானுங்களைக்கேட்டுக்கொள்வதியாதெனில், நீங்கள் ஒவ்வொருவரும் அவரவர் ஸ்தானத்தில் அமைதியா யுட்கார்ந்திருக்க வேண்டியது. மேலும் எவரேனும் கேலி கிருத்துவம் நகைப்பு வேடிக்கை விளையாட்டு முதலியவைகள் செய்யும் நோக்கத்துடனிங்கு வந்திருந்தால் உடனே வெளியேறவேண்டியது. ஏனெனில் ஒருவன் சிறிது அசட்டையான காரியத்தைச் செய்யினும், நகைக்கினும் மற்றவர்களெல்லோரின் கவனமும் அமைதிநிலையுங் கலைந்து நாம் கூடி வந்திருப்பதின் நோக்கம் தவறிப்போம்.

எவரெவர் தமது வெளிமனதை அடக்கி தூக்கநிலைமைக்குட்பட விரும்புகின்றனரோ அவர்கள் தமது மனதை பராக்கில் விடாமல் ஏகாக்ரமாக்கி என்னை மட்டும் பார்த்துக்கொண்டிருப்பார்களானல் சிறிது நேரத்திற்குள் அசதிமேலிட்டு தூங்கிவிடுவார்கள். அத்தூக்கத்தால் யாதொரு கெடுதியும் நேரிடாது. எவரையும் கட்டாயப்படுத்தி தூங்கச்சொல்லவுமாட்டேன். நான் சொல்வதினுண்மையை பரீக்ஷித்துப்பார்க்க விருப்பமுள்ளவர்கள் தூங்குவதற்கு ஆயத்தமாய் என்னைப் பார்த்துக்கொண்டிருந்தால் தூங்கிவிடுவார்கள். அவர்களை இரண்டு நிமிஷத்திற்குள் எழுப்பிவிடுவேன். அவர்கள் இளைப்புத்தீர்ந்து சுகதேகிகளாய் விழித்துக்கொள்வார்கள். அத்தூக்கத்தால் உங்களுக்கு நன்மையே யன்றி தீங்கொன்றும் நேரிடாதென திரும்பவும் வற்புறுத்திச் சொல்லுகிறேன்.

இப்பொழுது ஒரு பக்கத்திலிருந்து தூக்கமுண்டாக்கக்கூடிய மிருதுவான சங்கீதம் ஒன்றை வாத்தியத்தில் வாசிக்கவேண்டும். மாந்திரீகன் யாவருக்கும் தெரியத்தக்க ஓர் மேடையில் சமு

க்காளம் விரித்து அதன்மேல் சப்பணங்கால்போட்டு உட்கார்ந்து கொண்டு வாத்தியத்துக்கிசைந்த தாளத்துடன் தன் சரீரத்தை முன்னும் பின்னும் அசைத்துக்கொண்டிருச்கவேண்டும். ஜனங்களை நோக்கி நீங்கள் என்னை ஒரே சிந்தையாய் கண் தட்டாமல் பார்த்துக்கொண்டிருக்கையில் உங்களுக்கு தூக்கம் தானகவே வந்துவிடும். அப்பொழுது தூங்கிவிடுங்கள்" என்று சொல்லி விட்டு முன்னைகவும் பின்னைகவும் அசைந்துகொண்டிருக்கவேண்டும். சில நிமிஷங்களுக்குப்பின் வாத்தியத்தை மெள்ளமெள்ள நிறுத்திவிட்டுப் பார்த்தால் ஏகமனதாய்க் கவனித்தவர்களெல்லாம் தூங்கிக்கொண்டிருப்பார்கள். சிலர் அரைத் தூக்கத்தினின்றெழும்புவார்கள். கவனத்தைச் செலுத்தாதவர்கள் தூங்காமலிருப்பர். சிறிது நேரம் தூங்கிவிட்டபின் நான் மூன்று எண்ணிக் கை தட்டினவுடன் விழித்துக் கொள்ளுங்கள்....ஒன்று...இரண்டு... மூன்று...விழித்துக்கொள்ளுங்கள் (Awake when I say Three and clap my hands; One, Two, Three Wide awake"). என்று சொல்லி கையைத்தட்ட உடனே விழித்துக்கொள்வார்கள் இதே மாதிரி ஒவ்வொருவரிடமும் தனித்துச்சென்று எழுப்பியும் விடலாம். அவர்கள் சிறிது திடுக்குடன் விழித்து, தாம் தூங்கி விட்டதை நினைத்து தாங்கள் நன்ருய் தூங்கிவிழித்ததாகவும் யாதொரு கேடுமில்லையென்றும் புன்னகையுடன் சொல்லுவார்கள்.

29-வது பாடம்.

12-வது முறை.

அநேகரை ஒரேமுறையில் தூங்கச்செய்யும் விதம்.

அநேகரை ஒரே முறையில் தூங்கச்செய்யும் விதம்.

முதலாவது சொல்லிய நான்கு பரீக்ஷைகளுக்கும் உள்ளான பத்துப்பேரை வரிசையாக உட்காரவைத்துக்கொண்டு அவர்கள் ஒவ்வொருவர் கையிலும் இரண்டணு வெள்ளி நாணயத்தை வைத்து அதையே கவிழ்ந்துபார்த்துக்கொண்டிருக்கச் சொல்லவேண்டும். அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில் மாந்திரீகன் தூக்க மந்திரத்தை உச்சரித்துக் கொண்டிருந்தால் அவர்களி லனேகர் தூங்கிவிடுவார்கள்.

தூங்காமலிருக்கும் மற்றவர்களை சிரிக்கவாவது பேசவாவது விடக்கூடாது. ஏகாக்ர சித்தத்துடன் ஒருவன் எந்த வஸ்துவை நோக்கி தியானித்தாலும் சீக்கிரத்தில் அந்த வஸ்து மங்கித்தோன்றும். சிறிது நேரத்திற்குள் அசதி மேலிட்டு தூக்கம் வந்துவிடும். அப்படி அநேகர் தலையசைத்து தூங்குவதைக் கண்டவுடன் மாந்திரீகன் சொல்லவேண்டியதாவது:—

மந்திரம்.

நீங்கள் தூக்கத்தை விரும்புகிறீர்கள். தூக்கத்திற்கான அசதி உங்கள்மேல் வந்திருக்கிறது. அந்த அசதி வரவர அதிகரிக்கிறது. தலைமூளையிலுள்ள இரத்தமெல்லாம் கீழே இறங்கிவிட்டதால் அசதிமேலிட்டு நீங்கள் தூங்குகிறீர்கள். நானுங்களை எழுப்பு மட்டும் நன்ருய்த் தூங்குங்கள்.

Your wish is to sleep. You have induced a feeling of drowsiness. The drowsiness increases, the blood leaves

the brain and you sleep. You are sound asleep, fast asleep. You are sleeping. Sleep until I awake you.)

ஐந்து நிமிஷமானவுடன் தூங்குகிறவர்களை நோக்கி, "இப்பொழுது உங்களை எழுப்பப் போகிறேன். ஆயத்தமாயிருங்கள். நான் மூன்று எண்ணினவுடன் விழித்துக் கொள்வீர்கள். ஒன்று இரண்டு, மூன்று" என்று சொல்லி கையைத்தட்ட உடனே விழித்துக் கொள்வார்கள். அக்கூட்டத்தில் சிலருக்கு தூக்கமே வராததையும், சிலருக்கு அசதிமேலிட்டு அரைத்தூக்கம் வந்திருப்பதையும், சிலர் நன்றாய்த்தூங்கி எழுந்திருப்பதையுங் காண்பாய்.

30-வது பாடம்.

13-வது முறை.

ஆனந்தசாகரன் :—யோசனைக் குறிப்பு வசனங்கள் எளிதில் மூளையில் பதியக்கூடாத பயங்காலிகள், சிறுவர்கள் முதலியவர்களுக்கு யோக நித்திரை வருவிக்கும் விதம் யாதேனுமுண்டோ? அதை அடியேனுக்கருள அஞ்சலி செய்கின்றேன்.

சர்வகலாநிதி :—ஓர் சுகமான ஆசனத்தில் நோயாளியை வைத்து நீ சொல்லவேண்டியதாவது "நான் சொல்லுகிற பிரகாரம் நீ செய்யவேண்டும், உரக்க ஒன்று இரண்டு என்று எண்ணுவதால் உனக்கு யோகநித்திரை உண்டாக்க உத்தேசித்திருக்கிறேன். நானெவ்வொரு லக்கங்களையும் எண்ணும்பொழுது நீ உன் கண்க

ளைத்திறந்து என்னைப்பார்த்துவிட்டு மூடிக்கொள்ள வேண்டும். நான் 'ஒன்று' என்று சொன்னவுடன் உன் 'கண்களைத்திறந்து என்னைப்பார்த்துவிட்டு மூடிக்கொள். 'இரண்டு' என்று நான் சொல்லும்பொழுதும் நீ அப்படியே செய்யவேண்டும். நான் மற்ற லக்கங்களை எண்ணும்பொழுதும் அப்படியே செய்."

(You must do exactly as I now tell you. I intend to put you to sleep by the simple process of counting aloud. As I pronounce each word you must open you eyes and look at me and then close them again. When I count "one" open your eyes, look at me and close them again; when I count "two" repeat the actions and so on.)

இப்பொழுது மாந்திரீகன் ஒவ்வொரு லக்கத்திற்குமிடையில் ஐந்து விநாடிநேரம பொறுத்து ஒன்றுமுதல் இருபதுவரை எண்ணவேண்டும். இரண்டாந்தடவை ஒவ்வொரு லக்கத்திற்குமிடையில் பத்து விநாடி பொறுத்து இருபதுவரை எண்ணவேண்டும். மூன்றுந்தடவையும் அப்படியே ஒவ்வொரு லக்கத்திற்குமிடையில் பதினைந்து விநாடி நேரம் தாமதித்து இருபதுவரை எண்ண வேண்டும். நோயாளி தன் கருத்தையுங் கவனத்தையும் நீ சொல்வதிலேயே நிறுத்தி நீ சொல்லுகிற பிரகாரம் செய்வானாயின் நீ மூன்றுந் தடவை எண்ணி முடிப்பதற்குள் அவனுடைய கண்ணிமைகள் பளுவாகிப் போவதால் கண்களை மூடித் தூங்கிவிடுவான். எப்பேர்க்கொத்த பயங்காளியையும் இம்முறையால் தூங்கச்செய்யலாம். மற்றெந்த முறைகளாலும் யோகநித்திரைக்குள்ளாகாத அநேகரை இந்த முறையால் தூங்கவைத்திருக்கிறேன்.

31-வது பாடம்.

14-வது முறை.

முன்சொல்லிய முறைகளினாலும் எளிதில் தூக்கத்துக்குட்படாத ஒருவனை தூக்கத்துக்குட்படுத்தும் விதம் வேறொன்றுண்டு. அவன் தனது கைகளை தளர்த்திவிட்டுக்கொண்டு நிற்கட்டும். பின்பு சுவாசப் பையாகிய நுரைஈரல் பூர்த்தியாய் நிறையுமட்டும் எட்டு விநாடி நேரம் சுவாசத்தை நாசியின் வழியாக உள்ளே இழுத்துப் பூரகம் செய்து, அங்கு அதை எட்டு விநாடி நேரம் நிறுத்தி கும்பகம் செய்கையில் சரீரத்திலுள்ள ஒவ்வொரு தசையும் சுருங்கி கட்டைபோல் விறைத்துநிற்கட்டும். அதன்பின்பு எட்டு விநாடிநேரம் சுவாசத்தை சிறிது சிறிதாக வெளியேவிட்டு இரேசகம் செய்கையில் சரீரத்தை திடீரென்று தளர்த்திவிட வேண்டும். இவ்விதம் ஐந்து அல்லது பத்து நிமிஷநேரம் அவனை பூரகக் கும்பக இரேசகம் செய்யச்சொல்லு.

சுவாசாப்பியாசம் செய்துமுடிந்தவுடன், அவனை ஓர் நாற்காலியில் உட்காரச்சொல்லி முன் சொல்லிய முறைகளின்படி யோசனைக்குறிப்பு வசனங்களைச் சொல்லித் தூங்கவைக்கலாம்.

32-வது பாடம்.

15-வது முறை.

பற்பல சமயங்களில் பலரைத் தூங்கவைத்துப் பழகின மாந்திரீகன் மெஸ்மர் செய்துவந்தபிரகாரம் ஒரு லோட்டாவில் சிறிது தண்ணீர் கொண்டுவரச்சொல்லி அதில் தனது இரண்டு விரல்களை விட்டுமந்திரித்து தனது காந்த சக்தியை அதனுள் விட்டிருப்பதால் அதைக்குடித்தவுடன் தூங்கிவிடுவாய் என்று சொல்லி குடிக்கக் கொடுக்கத் தூக்கமுண்டாகும். சில சமயம் முழுத்தூக்கமும் உண்டாகாதிருந்தபோதிலும், அசதிமேலிட்டுக்காணும். அச்சமயம் தூக்கமந்திரத்தை உச்சரித்துத் தூங்கச்செய்யலாம்.

33-வது பாடம்.

16-வது முறை.

உடனே தூங்கச் செய்தல்.

Instantaneous Hypnotisation.

ஹிப்னடிசம் படிப்பவர்களுக்கு எவரையும் உடனே தூங்கச் செய்யும் திறமை உண்டாகிவிடவேண்டுமென்று விரும்புவது சகஜம். ஆனல் எல்லாரையும் உடனே தூங்கச்செய்வது எளிதான காரியமன்று. சிலர் மாத்திரமே உடனே தூங்கிவிடுவார்கள். ஆனல் அநேகர் கூடிய சபையில் ஹிப்னடிச வித்தையின் அற்புத-

ங்களைக் காண்பிக்கத் துணிபவன் அங்குள்ளவர்களில் எவர்கள் எளிதில் தூக்கத்துக்குட்படக் கூடியவர்கள் என்று குறிப்பினுல் அறிந்துகொள்ளவேண்டும். சிலர் அவனைப் பார்த்து நகைத்து கேலிசெய்துக்கொண்டிருக்கலாம். அவர்களில் ஒருவரை தான் இருக்கும் மேடைக்கு வரச்சொல்லவேண்டும். அவன் வர மனமில்லாதிருந்தானும் பக்கத்திலுள்ளவர்களெல்லாரும் அவனைப் போகும்படி சொல்ல ஒருவிதமாய் மனதைத் தைரியம் பண்ணிக் கொண்டு எழுந்திருப்பான். உடனே அவன் சிறிது நேரத்திற்கு முன்னும் மேடையின்மேல் கண்ட காக்ஷிகளும் தன்னை எல்லாரும் கவனித்துக்கொண்டிருக்கிறுர்களென்ற எண்ணமும் அவன் மனதில் உதிக்க அவனுக்குள் ஓர் வித மனக்குழப்பமுண்டாகும். அவன் அந்த ஸ்திதியில் மேடையின் படிகளில் ஏறிவருகையில் மாந்திரீகன் தைரியத்துடன் அவனுக்கெதிர்கொண்டுபோய் திடீரென்று தனது கையை அவன் பிடரியில் போட்டு மற்றோர் கையின் உட்பாகத்தை அவன் நாடியில் வைத்துத் தாங்க அவனுக்கு அதிகக் குழப்பமுண்டாகிவிடும். திடீரென்று உள்ளங் கையால் நாடியைத்தட்டினுல் அது பின்மூளையைத் தாக்கி காதில் ஓர் வித தொனியைப் பிறப்பிக்கும். அச்சமயம் அவனுக்கு ஸ்மரணை நீங்கி ஐம்புலன்களின் அறிவும் ஒடுங்குவதுபோல் காணும். உடனே "தூங்கு. உனக்குத் தூக்கம் வந்துவிட்டது. நீ தூங்கிவிட்டாய். தூங்கு, தூங்கு" என்று அதிகாரத்துடன் சொல்ல அவன் தூங்கிவிடுவான். அவன் தாடையில் அடித்த அடியினுல் ஒரு சேதமும் இராது. மற்றவர்களுக்கும் அதைப் பற்றி யாதொன்றும் தெரியாது. இந்த முறையினுல் தூக்கம் வராவிடின் பையனை ஓர் நாற்காலியில் உட்காரச் சொல்லி அதிகாரத்துடன் யோசனைக்குறிப்பு வசனங்களைச் சொல்லத் தூங்கிவிடுவான். எந்த முறையைக் கையாடினுலும் திடீரென்று உதாரத்துடன் செய்யவேண்டுமேயன்றி பிறருக்கு யோசிப்புக்கிடம் கொடுக்கலாகாது.

34-வது பாடம்.

17-வது முறை.

தூரத்திலுள்ளவர்களை தூங்கச்செய்யும் முறை.

To Hypnotise at a Distance.

ஆனந்தசாகரன்:—சுவாமி! தாங்கள் இதுவரை சொல்லிவந்ததெல்லாம் சமீபத்திலுள்ள ஒருவனை யோசனைக்குறிப்பு வசனங்களாலும் பலவித தாடனங்களாலும் தூங்கச் செய்யும் வகைகள். ஆனால் தூரத்திலுள்ள ஒருவனைத் தூங்கச்செய்யும் முறைகளேதும் உளதோ? அதை அடியேனுக்கு விளக்க அஞ்சலி செய்கின்றேன்.

சர்வகலாநிதி:—உனது தனித்த அறையினுட் சென்று ஓர் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு நீ விரும்பிய மனிதனின் உருவத்தை உன் மனதில் சிருஷ்டித்து உன் மனக்கண்ணால் தெளிவாய் பார்க்கும் சக்தியை அடைந்தவுடனே இது உனக்கு சித்தியாகும். அவ்விதம் மனக்காக்ஷியால் அவன் உருவத்தை தெளிவாகக்கண்டவுடன் அதை நோக்கி நீ தூங்கவேண்டும் என்பது என்னுடைய விருப்பம். நீ கட்டாயம் தூங்கி ஐந்து நிமிஷத்தில் விழிக்கவேண்டும் என்று மனதினால் உச்சரிக்க தூரத்திலிருப்பவன் அசதிமேலிட்டு தூங்கிவிடுவான். ஆனால் உன் சித்தத்தை ஒரே நிலையில் நிறுத்தி ஏகாக்ரமாக்கும்தன்மையை அடையும்வரையில் இதுஎளிதில் சித்தியாகாது.

35-வது பாடம்.

18-வது முறை.

கடிதம், தந்தி; மனத்தந்தியை உபயோகிப்பது.

முன்னதாகவே பலதடவை தூங்கவைக்கப் பட்டவர்களை கடிதம், தந்தி, மனத்தந்தி முதலியவற்றால் தூங்கவைக்கலாம். உதாரணமாக, ஓர் சிறு காகிதத் துண்டில் "தூங்கு, தூங்கிவிடு, தூங்குகிறாய், அயர்ந்த நித்திரை செய்கிறாய்" என்ற பதங்களை எழுதி அதன் கீழ் உன் கையொப்பமும் வைத்து எவர்மூலமாக வாவது அனுப்பினால் அதைத் திறந்துபார்த்தமாத்திரத்தில் தூங்கிவிடுவான். சிறிது நேரத்திற்குள் மாந்திரீகன் அங்கு சென்று அவனை எழுப்பிவிடவேண்டும்.

எச்சரிப்பு.

தூரத்திலுள்ளவர்களை கடிதம், தந்தி மூலமாகத் தூங்கவைப்பது நன்றன்று. ஏனெனில் மாந்திரீகனில்லாத விடத்தில் சாதாரண ஜனங்களுக்குள் கலக்கமுண்டாகிவிடும். மேலும் திடீரென்று தூக்கததினின் றெழுப்புவதும் அசாத்தியமாகி விடலாம். ஹிப்னுடிச தூக்கத்தால் யாதொரு கேடுமில்லையாயினும் இவ்வித வேடிக்கைகளால் பயனொன்று மில்லை.

36 வது பாடம்.

19-வது முறை.

கருவிகளையும் படங்களையும் உபயோகிப்பது.



கருவிகளையும் படங்களையும் உபயோகிப்பது.



ஹிப்னடிச சக்கரம், கண்ணாடிச் சுழல் கருவி முதலியவைகளைச் சிறிது நேரம் பார்த்துக்கொண் டிருக்கச் செய்வதால் தூக்கம் வருவிக்கலாம்.



சுயமனோவசிய அப்பியாசிகளுக்கும் இங்கு காட்டியிருக்கும் படங்களைப் பார்த்துக் கொண்டு மனதை ஒரே நிலையில் நிறுத்துவதனால் தூங்காமல் தூங்கும் நிலையுண்டாகிவிடும்.

37-வது பாடம்.

20-வது முறை.

சாதாரண தூக்கத்தை ஹிப்னடிச தூக்சமாக மாற்றுவது.

ஹிப்னடிச தூக்கத்திலிருப்பவனை எழுப்புவது சில சமயம் அசாத்தியமாகிவிடலாம். அப்படிப்பட்டவனை எழுப்பாமல் தூங்கவிடுவதனால் அது சாதாரண தூக்கமாகிவிடும். சில மணி நேரங்களுக்கு நித்திரைசெய்து பின் எழுந்திருப்பான் என்பதை ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அதேவிதமாக சாதாரண தூக்கத்திலிருப்பவர்களையும் ஹிப்னடிச தூக்கத்திற்குகொண்டுவந்துவிடலாம். அதாவது:—

சாதாரண தூக்கத்திலிருப்பவனின் உள்மனதை மட்டும் எழுப்பி அதற்கு மாந்திரீகன் தனது பக்கத்திலிருந்து யோசனைக் குறிப்புகளை மந்திரித்துக்கொண்டிருக்கிறான் என்பதை மட்டும் தெரிவிப்பதாகும். வெளிமனம் தூங்குகையில் உள்மனம் விழித்திருந்தால் அது யோசனைக்குறிப்பு வசனங்களை விசுவாசத்துடன் உண்மையானவைகளாக ஏற்றுக்கொள்ளும். ஒரு நோயாளிக்கு சரீரத்தின் ஓர் பக்கத்தில் நோயிருப்பதாக வைத்துக்கொள்வோம். அவன் நித்திரை செய்யும்பொழுது மாந்திரீகன் அவன் பக்கத்தில் அமைதியாய் உட்கார்ந்துகொண்டு ஓர் உள்ளங்கையை அவன் தலைமேல்வைத்து மற்றக்கரத்தால் முகத்திலிருந்து மார்பு வரை தடவுபாவனை செய்துகொண்டு பின் வரும் மந்திரத்தை உச்சரிக்க வேண்டும்.

மந்திரம்.

"நீ தூங்குகிருய், தூங்கு, நல்ல தூக்கம், ஆழ்ந்த நித்திரை, விழித்துக்கொள்ளாதே, நன்ருய்த்தூங்கு. நீ அயர்ந்த நித்திரையிலிருக்கிருய். என் சப்தத்தைத் தவிர மற்றெந்த சப்தமும் உன் காதில் விழாது" என்று பலதடவை சொல்ல அவன் நித்திரையிலிருந்து விழிப்பதுபோல் நெளித்துக் கொடுப்பான். உண்மையாகவே விழித்துக்கொண்டால் ஒன்றும் பேசாமல் மெதுவாக "தூங்கு என்று சொல்லிவிட்டு சிறிது நேரம் சும்மா இருந்துவிடு. பின்பு மெதுவாக தூக்கமந்திரத்தை உச்சரிக்க ஹிப்னுடிசத் தூக்கத்திற்குள்ளாவான். அப்பொழுது அவன் கையை நீட்டச்சொன்னுல் நீட்டுவான். "அந்தக் கை கட்டைபோல் மதத்துப்போயிற்று" என்று சொன்னுல் அப்படியே விறைத்துக் காட்டுவான். அப்பொழுது அவன் ஹிப்னுடிச தூக்கத்திலிருக்கிருன் என்று அறிந்துகொண்டு நோவுள்ள இடத்தில் உன் கைகளை வைத்துத் தடவிக்கொண்டு உனக்கு நோவில்லை. வலிநீங்கிப்போய்விட்டது. சுகமாகிவிட்டாய். சுகமாயிருக்கிருய் என்று பலதடவை சொல்ல வலி நீங்கிவிடும். நன்மை பயக்கத்தக்க எந்த மந்திரத்தையும் உண்மையானதாக ஏற்றுக்கொள்ள உள் மனம் தயாராகவிருக்கிறது. ஆனுல் தீமையை விளைக்கத்தக்கதும் மனச்சாக்ஷிக்குவிரோதமானதுமான எந்த மந்திரத்தையும் ஏற்றுக்கொள்ளாமல் உடனே விழித்துக்கொள்ளும்.

38-வது பாடம்.

21-வது முறை.



யோகிகளின் முறை.

யோகிகளின் முறை

Indian Yogi's Method.

ஆனந்தசாகரன் :— ஐயன்மீர்! நமது தேசத்தில் யோகீஸ்பரர்களும், தபோதனர்களும் தாமாகவே யாதொரு வஸ்துவையும் பாராமல் கண்களை மூடிக்கொண்டே தூங்காமற் றூங்கும் நிலைக்குட் படுகின்றார்களே, அது எங்ஙனம்?

சர்வகலாநிதி :— இந்தியாவிலுள்ள யோகீஸ்பரர்கள் நோன்பு பூண்டு தங்களை முற்றும் மறந்து பசியால் வருந்தியும் தாகத்தால் தவித்தும் உண்ண அன்னமும் உடுக்க ஆடையுமின்றி,

பட்டணத்துப்பிள்ளையார்

சினந்தனை யற்றுப் பிரியமுந் தானற்றுச் செய்கையற்று
நினைந்ததுமற்று நினையாமையுமற்று நிற்சிந்தனாய்
தனந்தனியே யிருந்தானந்த நித்திரை தங்குகின்ற
வனந்தனிலென் றிருப்பே னத்தனே கயிலாயத்தனே.

பத்திரகிரியார்

ஆங்காரமுமடக்கி யைம்புலனைச் சுட்டறுத்துத்
தூங்காமற்றூங்கிச் சுகம்பெறுவ தெக்காலம் 1
நீங்காச் சிவயோக நித்திரைகொண் டேயிருந்து
தேங்காக் கருணைவெள்ளந் தேக்குவது மெக்காலம். 2

என்று புலம்பி வனாந்திரங்களில் தவம்புரிந்து, சற்குரு கிருபாவீக்ஷணியத்தாற் பெற்ற வருட்பார்வையில் மனதை நிறுத்தி அவித்யாசகிதத்தன்மையுடையதேஹபாவம்நீங்கிதைலதாரைபோலாகாசபாவம் நிலைபெற்று மனஞ் சொரூபத்தி லேகாக்கிரத்தை

யடைந் தாங்குண்டாகின்ற அகண்டாகார விருத்தியானது மேலீட்டினால் ஜனிக்கும் ப்ரம்ஹாநந்தத்தில் நிலைபெற்று பிரவாகரூபமாய் நிறைந்துள்ள ஜாக்கிர சொப்பனங்களாகிய சகலாவஸ்தையும் சுழுப்தியாகிய கேவலாவஸ்தையும் அத்தியந்த நிவர்த்தியடைந்து சதாகாலமும் பரிபூர்ணமாய் விளங்காநின்ற ப்ரம்ஹ ஸொரூபத் தகமுக வப்பியாச முதிர்ச்சியாலுண்டாகின்ற நிலைப்பேறுடைத்தாய வகண்டாகார விருத்தி ஞானத்தின் ஆனந்தாதீதமாகிய துரிய ஸொரூபத்தை நிதரிசனமாயறிந்து ஆங்கு சகஜானந்த நித்திரையை யடைந்த அறிஞர்களெவர்களோ அவர்கள் ப்ரம்ஹ ஸொரூபத்திற் பிரிதலின்றிய வின்றியமையாநிலையைப் பெற்றிருப்பார்கள்.

ஞானவாசிட்டம்.

அறிபொருளை விட்டகன்று வழியுஞ்சித்த
 மந்தநிலைவியாபார மனைத்து மில்லாச்
செறிநனவிற் சுழுத்தியா மிதனைநாளுந்
 தீராத பரிசயமே செய்யச் செய்யப்
பிறிவின்முது துரியமா மென்பர் மேலோர்
 பிழையிலா விதனிலே நிலைமை பெற்றுக்
குறியறு மானந்த மேகாந்த சீலக்
 கொள்கையா லாநந்தங் கூடுமென்றே.

39-வது பாடம்.

விளையாட்டு வேடிக்கைகள்.

மாந்திரீகன் ஏற்கனவே தூக்கநிலைமைக்குக் கொண்டுவந்திருந்த சிலரைத் தன்பக்கம் வைத்திருப்பது நலம். வெகுஜனங்கூடிய கூட்டத்தில் அவர்களைச் சிறிதுநேரத்தில் தூங்கவைத்து அவர்களுக்கு எல்லாவகை பொய்த்தோற்றங்களையும் காட்டலாம்.

1. சிறிப்பு விளையாட்டு.

சிலரைத் தூங்கவைத்து சொல்லவேண்டியதாவது, "நான் மூன்றுஎண்ணி முடிந்தவுடன், மூன்றுஎன்று கேட்டமாத்திரத்தில் உங்கள் கண்களைத் திறந்து உங்கள்முன் கூடிவந்திருப்பவர்களைக் காண்பீர்கள். அவர்கள் விசித்திர உடை தரித்திருப்பதால் கோமாளிகளைப்போல் தோன்றுவார்கள். அந்தக்கோமாளிகளைக்கண்ட மாத்திரத்தில் சிறிப்பீர்கள். அடக்கமுடியாத சிறிப்புத்தோன்றும். இப்பொழுது தயாராயிருங்கள்" என்று சொல்லிவிட்டு ஒன்று, இரண்டு, மூன்று என்றுசொன்னமாத்திரத்தில் கண்களைத்திறந்து பார்த்து சிறிப்பார்கள். அவர்கள் சிறிக்க ஆரம்பித்த இரண்டொருநிமிஷத்திற்குள் "இனிமேல் சிறிக்கவேண்டாம், தூங்குங்கள், நல்ல தூக்கம்" என்றுசொல்ல சிறிப்பை நிறுத்திவிடுவார்கள். மற்ற விளையாட்டுகளை ஆரம்பிக்கலாம். அப்படி வேறு விளையாட்டுகளைக்காண்பிக்க மனமில்லாவிடில் "விழித்துக்கொள்ளுங்கள் நீங்கள் சுகமாயிருக்கிறீர்கள்" (Wake up, you are all right) என்றுசொல்லி மேனோக்கித் தடவி கையைத்தட்ட விழித்துக்கொள்வார்கள்.

40-வது பாடம்.

2. துக்க விளையாட்டு.

சிலரைத் தூங்கவைத்து சொல்லவேண்டியதாவது, "நீங்கள் நன்றாய்த் தூங்குகிறீர்கள். நான் ஐந்துவரை எண்ணிமுடிந்தவுடன் உங்கள் கண்களைத் திறந்து பார்ப்பீர்கள். உங்கள் பந்துக்களிலொருவன் மரணாவஸ்தையிலிருப்பதைக் காண்பீர்கள். அவனை நீங்களதிகமாய் நேசிப்பதால் மிக துக்கப்படுவீர்கள். அவன் பக்கமாக முழந்தாளிட்டு அவனுக்காக ஜெபிப்பீர்கள். அவன் சாவதைக்கண்டு உரத்த சத்தத்துடன் அழுவீர்கள். கவனியுங்கள், நான் ஐந்து என்று சொன்னவுடன் கண்களைத்திறந்து உங்களினத்தான் சாவதைக்கண்டுஅழுவீர்கள்" என்று சொல்லிவிட்டு விழிப்பு நிலையிலுள்ள ஒருவனை கீழே படுக்கவைத்தபின் 1, 2, 3, 4, 5 என்று எண்ண கண்களைத் திறந்து பார்த்து அழத்தொடங்குவார்கள். சிலர் முழந்தாளிட்டு ஜெபிப்பார்கள். அந்த நிலையிலிருக்கும்பொழுது எல்லாம் சரி, விழித்துக்கொள்ளுங்கள்" (All right, wake up) என்றுசொல்லிக் கையைதட்ட விழித்து ஒருவரையொருவர் பார்த்து ஆச்சரியப்படுவார்கள்.

எச்சரிப்பு.

தூக்கநிலையிலுள்ளவனை மரித்தவனாகப் பாவனைசெய்யச்சொல்லக்கூடாது. துக்கத்தையும் விசனத்தையுமுண்டாக்கக்கூடிய விளையாட்டுகளாலும் நன்மையுண்டாகமாட்டாது. எக்காலத்திலும் விசனத்தையுண்டாக்கும் யோசனைக்குறிப்புகள் நன்றன்று.

Very important

41-வது பாடம்.

3. மீன் பிடித்தல்.

சிலரை தூக்க நிலைமைக்குட்படுத்தி அவர்கள்முன் எதாவது சில சாமான்களைப் பரப்பிவிட்டு சில குச்சிகளையுந் தயார்செய்து வைத்துங்கொண்டு சொல்லவேண்டியதாவது:—

"நான் மூன்று எண்ணியவுடன் உங்கள் கண்களைத் திறந்து பார்ப்பீர்கள். ஒரு குளந் தோன்றும். அதிலனேகவித மீன்களைக் காண்பீர்கள். தூண்டில் தருவேன். அதால் மீன் பிடிப்பீர்கள். உங்கள் கண்களைத் திறந்துபார்த்தவுடன் குளந்தோன்றும் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். ஒன்று...இரண்டு...மூன்று கண்களைத்திறவுங்கள். இதோ ஓர் அழகியகுளம். அதனுள் மீன்கள் குதிப்பதைப் பார்த்தீர்களா? இதோ தூண்டில்கள். இவற்றால் மீன் பிடியுங்கள்" என்று சொல்லி அவர்கள் கையில் சிறுகுச்சிகளைக்கொடுத்தால் மீன் பிடிப்பார்கள். அப்பொழுது இதோ கடிக்கிறது இழு. என்னநேர்த்தியானமீன். அந்த மீனை எடுத்துக் கூடைக்குள் போடு" என்றுசொல்ல அப்படியே செய்வார்கள்.

"இனிமேல் மீன் பிடிக்கவேண்டாம். தூண்டில்களைத்தந்து விடுங்கள். தூங்குங்கள், ஆழ்ந்த தூக்கம், குளத்தில் முகங் கழுவுங்கள், நீந்துங்கள், அதோ நாரைகள், இதோ துப்பாக்கி" என்றுசொல்லிக் குச்சிகளைக் கையில்கொடுத்தால் துப்பாக்கிகளை உபயோகிப்பார்கள். அதன்பின் எழுப்பிவிடவேண்டும்.

42-வது பாடம்.

4. குடிவெறிக்காக்ஷி.

சிலரைத்தூங்கவைத்து "நான் மூன்று எண்ணியவுடன் கண்களைத் திறந்துபார்ப்பீர்கள். நான் பீர் குடிக்கத்தருவேன். நீங்கள் குடித்தவுடன் வெறியுண்டாகும். நீங்கள் நேராய் நிற்கமுடியாமல் தள்ளாடுவீர்கள் ஒருவர்மேலொருவர் விழுவீர்கள். ஆனல் கீழே விழமாட்டீர்கள். நான் மூன்று எண்ணியவுடன் கண்களை திறப்பீர்கள். பீர் குடித்து வெறிகொள்வீர்களென்பது ஞாபகத்திலிருக்கட்டும்" என்று சொல்லிவிட்டு 1, 2, 3 என்றுசொல்ல கண்களைத்திறப்பார்கள். அவர்களுக்கு சிறிது தண்ணீர் குடிக்கக் கொடுத்துவிட்டு "வெறியுண்டாகிவிட்டது" என்று சொல்ல வெறித்தவர்களாய் நடிப்பார்கள்.

43-வது பாடம்.

5. மோக்ஷக்காக்ஷி.

சிலரைத்தூங்கவைத்து "நீங்கள் கண்களைத்திறந்து பார்க்கும்பொழுது வானந் திறந்திருக்கும் அங்கிருந்து தேவதூதர்கள். இறங்குவதையும் ஏறுவதையும் காண்பீர்கள். இறந்துபோன உங்கள் பந்துக்களையும் சிநேகிதரையுங்காண்பீர்கள். அவர்களைக் கண்டவுடன் அவர்கள் இவ்வுலகிலிருக்கும்பொழுதுசெய்துவந்த விஷயங்கள் உங்கள் மனதில் ஞாபகத்துக்குவரும். அதை நினைத்து சிலர் அழுவீர்கள். சிலர் மரித்துப்போனவர்களுக்காக ஜெ

பிப்பீர்கள். உங்கள் கண்களைத் திறந்தவுடன் வானம் திறந்திருப்பதையும் தேவதூதரையுங் காண்பீர்கள். இப்பொழுது கண்களைத் திறவுங்கள். மேனேக்கிப்பாருங்கள். இதோ! தேவதூதர்கள். மரித்துப்போன உங்களினத்தாரின் ஆவிகள். ஓ! என்ன ஆச்சரியக்காக்ஷி! "ஆணிப்பொன் னம்பலத்தேகண்ட காக்ஷிகள் அற்புதக் காக்ஷியடி—அம்மா" என்று பாட ஆனந்த பரவசத்திலாழ்ந்து அகங்களிப்புற்று அவர்களும் பாடத்தொடங்குவார்கள்.

சிலநேரத்திற்குப் பின்பு கையைத் தட்டி "விழித்துக்கொள்ளுங்கள். நீங்கள் நன்ருய் விழித்துக் கொண்டீர்கள்" என்று சொல்ல எல்லாரும் விழித்துக்கொள்வார்கள்.

44-வது பாடம்.

6. இல்லறக்காக்ஷி.

இருவரைத்தூங்கவைத்து "நீங்கள் கண்களைத் திறந்துபார்க்கையில் நீ மாப்பிள்ளையாகவும், அவன் பெண்ணுகவும் தோன்றுவீர்கள், அன்புடன் முத்தமிடுவீர்கள்" என்றுசொல்ல அவர்கள் ஒருவரை யொருவர் தாவிச்சேர்த்து முத்தமிடுவார்கள். மேலும், பெண்ணுகப்பாவிக்கப்பட்டவன் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு ஆகிய பெண்களுக்குரிய் குணங்களுடன் தோன்றி சிலசமயம் முக்காடிட்டுக்கொள்வான். மாப்பிள்ளையாகவிருப்பவன் மாப்பிள்ளையாகப் பாவனைசெய்து மீசையை முறுக்குவான். உல்லாசமாய் நடப்பான். பெண்ணுனவனின் கையில் ஓர் சிறு தலையணையைக் கொடுத்து இது உனக்குப் பிறந்த சிறு குழந்தை, பாலில்லாமல்

அழுகிறது என்று சொல்ல பால் கொடுப்பான். தாலாட்டுவான். பாட்டுத்தெரிந்தவனுயிருந்தால் பாட்டுப்பாடித் தூங்கவைப்பான். இது உன்பிள்ளையல்ல பூனைக்குட்டி என்றால் மெதுவாய்த் தடவிக் கொடுப்பான். இது பூனைக்குட்டியல்ல ஓர் பாம்பு என்று சொன்னால் உடனே எறிந்துவிடுவான். ஓர் குச்சியை அவன் கையில் கொடுத்து இது உன் குடை. இப்பொழுது மழைபெய்கிறது என்று சொன்னால் மழைத்துளி தனமேல்விழாமல் குடைபிடித்துக் கொள்வான்.



நீங்கள் இருவரும் "மனிதரல்ல, பூனைகள். நீங்கள் ஒருவரோடொருவர் சண்டைபோடுவீர்கள். பூனைகள்போல கத்திக்கொண்டு சண்டைபோடுவீர்கள்" என்று சொல்ல படத்தில் காண்பித்திருக்கிற பிரகாரம் சண்டைபோடுவார்கள். பூனையைப்போல் "மியா, மியா" என்று சப்தமிட்டுக்கொண்டு அங்குமிங்கும் திரிவார்கள்.

45-வது பாடம்.

7. பூஞ்சோலைக்காக்ஷி.



சிலரைத் தூங்கவைத்து "இப்போது நாம் ஓர் பூஞ்சோலைக்குப்போவோம். அங்கே அன்னமயில்களாடுவதும், மாங்குயில்கள் பாடுவ்தும், ரம்பா ஸ்திரீகள் நிர்த்தனம் செய்வதும், கண்டு

களிகூர்ந்து ஆனந்தமடைவீர்கள். இப்பொழுது கண்ணைத்திறந்து பாருங்கள். இதோ! பூஞ்சோலை. அதனடுவே அதோ! ஓர் ஏரி. இதோ! மாங்குயில். அதோ! ரம்பா ஸ்திரீகள் நிர்த்தனஞ் செய்கிறார்கள். என்ன காக்ஷி! என்ன அதிசயம்! இன்னிசையோசையுடன் அவர்கள் பாடும் சங்கீதங்கள் உங்கள் காதில் விழுகின்றனவா?" என்றுகேட்க, ஆம் என்பார்கள். அப்பொழுது அவர்கள் பாடும் கீதங்களைப் பாடுங்களென்று சொன்னால் ஒவ்வொருவரும் தத்தமக்குத்தெரிந்த இனிமையான பாடல்களைப்பாட ஆரம்பித்துவிடுவார்கள். அவர்கள் கைகளில் துடப்பங்களைக்கொடுத்து இது வீணை என்றுசொல்ல அவர்கள் வீணைவாசித்துப் பாடுவார்கள். அதன் பின் இனிபோதும்! போதும்! நிறுத்துங்கள். நான் மூன்று சொன்னவுடன் விழித்துக்கொள்வீர்கள். எப்பொழுதும் உங்கள் முகத்தில் மகிழ்ச்சியே யிருக்கும் என்றுசொல்லி, மூன்று எண்ணிக்கையைத்தட்ட விழித்துக்கொள்வார்கள்.

46-வது பாடம்.

8. சுடுகிற நாற்காலி.

ஒருவனைத் தூங்கச்செய்து, நாற்காலியில் உட்கார்வைத்துக்கொண்டு, "நான் மூன்று எண்ணியவுடன் நாற்காலி அதிகசூடாகிவிடும், உன்னால் சகிக்கமுடியாது, ஆனால் நாற்காலியில் ஒட்டிக்கொள்வாய். ஆதலால் எழுந்திருக்கவும் முடியாது" என்று சொல்லிவிட்டு, "ஒன்று, இரண்டு, மூன்று. நாற்காலி அதிக சூடாகிவிட்டது. நீயும் நாற்காலியில் ஒட்டிக்கொண்டாய்" என்றுசொன்னவுடன் சுடுகிறது சுடுகிறது என்று சொல்லி எழுந்திருக்கப் பார்

ப்பான். ஆனல் எழுந்திருக்க முடியாமல் கஷ்டப்பட்டு அழுவான். அப்பொழுது "இதோ! நாற்காலி குளிர்ந்துவிட்டது. நீயும் எழுந்திருக்கமுடியும்" என்றுசொல்ல, அழுகையை நிறுத்திவிட்டு எழுந்திருப்பான்.

இப்படத்தில் காண்பிததிருக்கிற பிரகாரம் உன்கை சுவற்றில் ஒட்டிக்கொண்டது. ஆனல் சுவர் அதிகச்சூடாயிருக்கிறது. உன்னல் அந்தச்சூட்டை தாங்கமுடியாது. உன் கையோ சுவற்றில் ஒட்டிக்கொண்டது என்கு அவன் கையை எடுக்கமுடியாமல் கஷ்டப்படுவான்.

47-வது பாடம்.

9. இனிப்பை கசப்பாகவும், கசப்பை இனிப்பாகவும் மாற்றுவது.

ஒருவனைத் தூங்கவைத்து அவனிடத்தில் கொஞ்சம் வேப்பெண்ணையைக்கொடுத்து, இது மிக்க இனிமையான ஷர்பத்து, என்று சொல்லிக் குடிக்கக் கொடுத்தால் அதைக் குடித்துவிட்டு,

மிக இனிமையாயிருக்கிறதென்பான். அப்படியே தேனைக் குடிக்கக்கொடுத்து இது வேப்பெண்ணை கசக்கும் என்று சொன்னால் அந்தக் கசப்பை சகிக்கமுடியாத ஜாடைகாட்டுவான். அதேமாதிரியாக ஒரு மிளகாயை வெள்ளரிக்காயென்று சொல்லி தின்னக் கொடுத்தால் அதை வெள்ளரிக்காயாகவே பாவித்துக் கடித்துத் தின்பான். கண்ணில் கண்ணீராவது, வாயில் உரைப்பாவது தோன்றாது.

48-வது பாடம்.

10. அக்கினிப் பிரவேசம்

ஒருவனை நன்றாய்த்தூங்கவைத்து அவன் கையைத் தடவிக் கொடுத்து, "உன் கை மதத்துப்போயிருக்கிறது அதற்கு உணர்ச்சியேயில்லை, இரத்தமுமில்லை, இரும்புபோலிருக்கிறது. இதோ! ஒரு புஷ்பம். இதை உன் கையில் வைக்கிறேன். இதை வாங்கினவுடன் உன் கை குளிர்ச்சியாயிருக்கும் என்று ஓர் நெருப்புத் தழலை அவன் கையில் வைத்தால் அவன் அதை ஓர் புஷ்பத்தைப் போல் எடுப்பான். அதனால் அவனுக்கு யாதொரு தீங்குமுண்டாகாது. அப்படியே அவனைத் தீயின்மேல் நடக்கவும் வைக்கலாம்.

49-வது பாடம்.

11. செடில் குத்துவது.

கவனிப்பு.

வலியை நீக்குவது கஷ்டமான காரியமன்று என்பதை மாந்திரீகன் மனதில் வைத்து தைரியமா யிருக்கவேண்டும். அம்மன் கோவில்களில் செடில்குத்தி யாடுகிறவர்களுக்கு யாதொருங் கஷ்டமுந் தோன்றாததுபோலவே ஹிப்னடிச தூக்கத்தி லிருப்பவனின் சதையை யூடுருவ எஃகின்ல் செய்த ஊசியைச் செலுத்துவதால் யாதொரு வேதனையுந் தெரியாது. இரத்தமும் வரமாட்டாது. மாந்திரீகன் சந்தேகத்திற் கிடங்கொடுக்காமலும் கைநடுக்கமில்லாமலும் தைரியத்தைக்கைவிடாமலும் அமைதியாயிருந்து தன் தொழிலில் தேர்ந்தவனைப்போலிருக்கவேண்டும்.

2. துரைசானிமார் தொப்பிகளில் குத்திக்கொள்ளும் நீண்ட எஃகு ஊசியில் துருப்பிடிக்காததைத்தெரிந்தெடுத்து கொதிக்கிற வெந்நீரில் போட்டு சுத்திசெய்து வைத்துக்கொள்ளவேண்டும்.

3. ஒருவனை நாற்காலியில் வசதியாய் உட்காரச்சொல்லி அவன் சதைகளைத்தளர்த்திவிட்டு அவன் முன்பாகநின்று தூக்கம் வருவிக்கவேண்டும். அவன் தூங்கி யோசனைக்குறிப்பு வசனங்களை ஏற்றுக்கொள்ளும்பருவத்திலிருக்கையில் மாந்திரீகன் தனது இடதுகைப்பெருவிரலை தூங்குகிறவனின் புருவமத்தியில் வைத்து வலது கையால் அவன் முகத்திலும் இரத்தாசயத்திலும் தடவு பாவனைசெய்து உறுதியாய்ச் சொல்லவேண்டியதாவது "நீ நன்றா ய்த் தூங்குகிறாய். ஆழ்ந்த தூக்கத்திலிருக்கிறாய். நான் இப்பொழுது செய்வதும் உனக்கு விழிப்புண்டாக்காது, இப்பொ

ழுது உன் இடதுகை மதத்துப்போயிற்று. அதில் இரத்தமே யில்லை. உனக்கு இடதுகை இல்லாததுபோலவே தோன்றுகிறது. அதில் உணர்ச்சியே கிடையாது. மதத்துப்போயிற்று. இரத்தமே யில்லையென்று பலதடவை சொல்லி அவன் இடது கையினுச்சியி லிருந்து இரத்தாசயத்திற்கு நேராக சிறிதுநேரம் தடவிக்கொண்டே யிருக்க, கை மதத்துப்போகும்.

4. பின்பு அவன் இடதுகையின் சதையில் கொஞ்சத்தை பெருவிரலாலும் ஆள்காட்டி விரலாலும் பிடித்து மெதுவாய் இழுக்கவேண்டும். அதில் நரம்பு இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதன்பின்பு முன் சுத்திசெய்து வைத்திருக்கும் ஊசியையெடுத்து சதையை ஊடுருவ மெதுவாய்க் குத்தவேண்டும். குத்தும்போது சொல்லவேண்டியதாவது; "வலியில்லை. உனக்கு உணர்ச்சியேயில்லை. உன் இடதுகை மதத்துப்போயிற்று."

5. இதைப்பார்த்தவர்கள் பிரமிப்பார்கள். ஆனல் எவரையும் தொடவாவது ஆட்டிப்பார்க்கவாவது விடக்கூடாது. அவர்கள் சமீபத்தில்போய் ஊசிகுத்தியிருப்பது உண்மையேயன்றி பொய்ஜாலமில்லையென்பதை மட்டும் தெரிந்துகொள்ளலாம். ஆனல் அதிகநேரமாக அப்படி ஊசியைக் குத்திவைத்திருக்கவேண்டிய அவசியமுமில்லை. கூடிய சீக்கிரத்தில் உனது இடதுகையின் பெரு விரலையும் ஆள்காட்டிவிரலையும் அந்த ஊசி குத்தியிருக்கும் கையின் சமீபத்தில் வைத்துக்கொண்டு சொல்லவேண்டியதாவது, "உன் இடதுகையில் இரத்தமேயில்லை. அதிலிருந்து இரத்தம்வர மாட்டாது. அது வீங்கவும் மாட்டாது. இரத்தமில்லை. வலியில்லை. இரத்தமேயில்லை" என்று சொல்லிக்கொண்டு ஊசியை மெதுவாக ஆனல் துரிதமாய் வெளியே இழுக்கவேண்டும். இழுத்துவிட்டு அத்துவாரங்களை உனது இரண்டு விரல்களால் மூடிக்கொண்டு உன் வலது கையால் அவன் இரத்தாசயத்திற்கு நேராக தாடனம்செய்து அதன்பின்பு உனது விரல்களை எடுத்துவிடலாம்.

6. தூங்குகிறவனை எழுப்புமுன் உன் இடதுகையின் பெரு விரலை அவனது புருவமத்தியில் வைத்துக்கொண்டு உனது வலதுகையால் அவனது இடதுகைமேல் இரத்தாசயத்திலிருந்து தாடனம்செய்து "உன் இடதுகை நன்ருய்ப்போய்விட்டது. அதில் நன்ருய் இரத்தம் செல்லுகிறது. அதில் உணர்ச்சியுண்டு. இரத்தமுண்டு. மதப்பு நீங்கிவிட்டது. உன் வலது கையைப்போலவே இடது கையையும் நன்ருய் உபயோகிக்கலாம். நீ விழித்துக்கொண்டபின்பு உனக்கு எந்தயிடத்திலும் வலிதோன்ருது. இப்பொழுது நடந்ததெதுவும் உன் ஞாபகத்திலிராது" என்று நாலைந்து தடவைசொல்லி மேனேக்கி தடவுபாவனை செய்து "விழித்துக்கொள். நீ நன்ருயிருக்கிருய்" என்று சொல்லிக் கையைத் தட்ட விழித்துக்கொள்வான்.

50-வது பாடம்.

12. விழிப்புநிலையில் நோயில்லாமல் செய்வது.

ஆனந்தசாகரன் :— சுவாமி! செடில் குத்தியாடுகிறவர்களைத் தூங்கவைத்தா சரீரத்தில் குத்துகிறார்கள்? அவர்கள் விழிப்பு நிலையிலல்லவோயிருக்கிறார்கள். அவ்விதம் ஒருவனைத் தூங்கவைக்காமலே அவன் சரீரத்தில் ஊசியால் குத்தக்கூடியவிதங்களேதேனும் உண்டோ? அப்படிக் குத்தினால், குத்துண்ட இடத்தினின்றும் உதிரம் கசியாமலிருக்குமோ? இவைகளை அடியேனுக்கு விளக்க அஞ்சலி செய்கின்றேன்.

சர்வகலாநிதி :— அப்பா! ஆத்திரப்படாதே. நீ ஆரம்பத்தில் ஒருவனைத் தூக்க நிலைமைக்குட்படுத்திச் செய்யும் அற்புதங்கள் யாவும் நாள் செல்லச் செல்லத் தூங்கவைக்காமலே விழிப்புநிலையிலும் செய்யக்கூடிய சக்தியுடையவனாவாய். அப்பொழுதுதான் ஒருவனின் மனமானது மற்றவனுடைய மனதை எவ்வளவு தூரம் அடக்கியாளக்கூடுமென்பது எளிதில் விளங்கும். யோசனைக்குறிப்புகளோ ஒரு மனதிற்கும் மற்றோர் மனதிற்கும் தொந்தபந்தம் உண்டாக்கும் சக்தியை யுடையன. அற்பத்தொழில்முதல் மகாசித்திவரையில் உண்டாகும் வெற்றிகளெல்லாம் மாந்திரீகன் யோசனைக்குறிப்புகளை மற்றவர்கள் மனதில் பதியச்செய்யுஞ் சாமர்த்தியத்திற்குத் தக்கதாக இருக்கும். 'மனோவசிய சாஸ்திரம் 7, 8, 9, 10, 29 முதலிய பாடங்களைக் கவனமாய்க் கற்று அப்பியாசிக்க வேண்டியது. விழிப்புநிலையிலுள்ள எவரையாவது ஓர்நாற்காலியில் உட்காரவைத்து மாந்திரீகன் அவன் முன் நின்று அவனின் புருவமத்தியை நோக்கிச் சொல்லவேண்டியதாவது :—

"நான் உனது கன்னத்தில் தொட்டு தடவிக்கொடுக்க அதில் வலியொன்றுமிருக்காது, வலியில்லை, வலியில்லை" என்று பலதடவைசொல்லி அவன் சிரசிலிருந்து நாடிவரையில் பத்து அல்லது பன்னிரண்டு தடவை தடவிக்கொடுக்கவேண்டும். அப்பொழுது மனதில் தியானிக்கவேண்டிய மந்திரமாவது, உன் மனதும் சித்தமும் என் சித்தத்திற் கடங்கியவை. நான் சொல்வது பலிக்கும். உனது கன்னத்தில் வலியேயிருக்காது. உணர்ச்சியே யில்லை" என்று ஏகாக்ர சித்தத்துடன் தியானிக்கவேண்டும்.

"உன் வாயை விரி வாய்த்திற. நான் அதை மூடச்சொல்லும் வரை அதை மூடக்கூடாது" என்று சொல்லிக்கொண்டு உனது பெருவிரலை அவன் வாயினுட் செலுத்தி அவனது இடது கன்னத்தோலை பெருவிரலாலும் ஆள்காட்டி விரலாலும் மெதுவாய்ப்

கன்னத்தில் ஊசிகுத்துதல்.

பிடித்து முன்னதாகவே சுத்திசெய்து வைத்திருந்த ஊசியை எடுத்து உனது பெருவிரலைச் சிறிது கீழேதள்ளிக்கொண்டு அந்த ஊசியை அவன் கன்னத்தை ஊடுருவச் செலுத்தவேண்டும். அப்படிச் செலுத்துகையில் சொல்லவேண்டியதாவது, "உனது கன்னத்தில் உணர்ச்சியேயில்லை, வலியில்லை, வலியில்லை" இனிமேல் உனது கையை எடுத்துவிட்டு நீ செய்தது மந்திரமாவது, சூதானவிஷயமாவது ஒன்றுமில்லை என்பதை வந்திருப்பவர்கள் பார்க்கும்படி செய்.

ஊசியைப்பிடுங்குமுன், உனது பெருவிரலை முன்போலவே அவன் வாயினுட்செலுத்தி, அவன் கன்னத்தைப் பெருவிரலாலும் ஆள்காட்டி விரலாலும் பிடித்துக்கொண்டு "உனது கன்னத்தில் இரத்தமில்லை, வலியில்லை, மரத்துப்போயிருக்கிறது என்று சொல்லிக்கொண்டு, ஊசியை திடீரென்று பிடுங்கிவிட்டு, கன்னத்திலுள்ள துவாரங்களை உனது பெருவிரலாலும் ஆள்காட்டி விரலாலும் மூடிக்கொள்ளவேண்டும். அதன்பின் காது, சிரசுக்கு நேராக மேன்னுக்கித்தடவுகையில், "இரத்தமில்லை, இரத்தமில்லை" என்று சொல்லவேண்டும். இவ்விதம் பன்னிரண்டு தடவைசெய்த பின், "உனது இடது கன்னம் சுகமாகிவிட்டது, வலியிராது, அதில் ஒன்றுமில்லை" என்றுசொல்ல முன்போலாகிவிடும்.

குறிப்பு.

இதே மாதிரியாக ஒருவன் விழித்திருக்கும்பொழுது அவனுடைய சரீரத்தின் எந்தப் பாகத்தையும் ஹிப்னடைஸ் செய்து அதிலிருக்கும் நோவைத் தணிக்கலாம். தேள் கடி விஷத்தையும் அப்படியே நீக்கலாம்.

51-வது பாடம்.

13. சரீரத்தை விறைக்கச் செய்தல்.

மாந்திரீகன் தனது யோசனைக்குறிப்பு வசனங்களால் ஒருவன் சரீரமுழுவதையுமே கட்டைபோல் விறைக்கச் செய்யலாம்.

இதற்காக ஒருவனைத் தூக்கத்துக்குட்படுத்துவது அவசியமன்று. விழிப்பு நிலையிலிருக்கும்போதே அப்படி விறைக்கச் செய்யலாம். தூக்கமுண்டாக்கி விறைக்கச்செய்யும் விதத்தைப்பற்றி இங்கு சொல்லுகிறேன் கேள்:—

ஒருவனைத் தூங்கவைத்து நேராய் நிமிர்ந்து நிற்கச்சொல்லி அவன் புருவமத்தியில் உனது பெருவிரலை வைத்துப் பிடித்துக் கொண்டு உச்சரிக்கவேண்டிய மந்திரமாவது, "நீ ஆழ்ந்த நித்திரையிலிருக்கிறாய். நன்றாய்த் தூங்குகிறாய். ஆழ்ந்த நித்திரை. நான் ஐந்து எண்ணி முடித்தவுடன் உனக்கு அயர்ந்த நித்திரையுண்டாகும். உன் கை கால்கள் விறைத்துப் போகின்றன. உன் சரீரம் இரும்புக்கம்பிபோல் விறைத்துப்போயிற்று. நீ இரும்புக் கம்பியாகிவிட்டாய். உன்னை வளைக்கமுடியாது. ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, நீ விறைத்துவிட்டாய். இரும்புக்கம்பியாகிவிட்டாய்" என்று சொல்லி மாந்திரீகன் தனது இரு கரங்களாலும் தூங்குகிறவனின் தோளினின்று பாதம்வரை நெடுங்ல்தாடனஞ்செய்து, தடவிக்கொடுக்க அவன் இரும்புபோல் விறைத்துவிடுவான். உடனே பக்கத்திலிருப்பவர்களின் உதவியால் அவனைத்தூக்கி அவன் தலையை ஓர் நாற்காலியிலும், காலை ஓர் நாற்காலியிலும்வைக்க, அவன் அப்படியே விறைத்த கட்டைபோல் கிடப்பான். விழிப்பு நிலையிலுள்ள ஒருவனை அவ்விதம் படுக்கச்சொன்னால் அவனால் முடியாது. ஆனால் விறைத்திருப்பவனை நாற்காலியின் பின்புற சாய்மானத்திலுங்கூட தலைபணைகளை வைத்து அதன்மேல் கிடத்தலாம். நாற்காலிகள் விழுந்துவிடாதபடி அவற்றின்மேல் பளுவாக இருவர் உட்கார்ந்திருப்பது நலம். அப்பால் அவன்மேல் மிக்க பழுவான கல்லைவைத்தாலும் தாங்கிக்கொள்ளுவான். அந்தக் கல்லைச் சுத்தியாலடித்துப் பிளக்கலாம். அதனால் அவனுக்கு கஷ்டம் ஒன்றுந் தோன்றாது. கல்லை யெடுத்துவிட்டு

பக்கத்தில் நிற்பவர்களை அவன்மேல் ஏறி நிற்கச் சொன்னாலும் அவனுடம்பு சற்றென்கிலும் வளைந்துகொடுக்காமல் இரும்பு போலவே நேராகயிருக்கும். அந்த சமயத்தில் "உன் கழுத்தும் தலையும் விறைத்திருக்கமாட்டாது. சீரம் மட்டுமே விறைத்திருக்கும்" என்று சொன்னால் கழுத்துக் குளைவாகவே யிருக்கும். அதன்

பின்புமேலே ஏறியிருப்பவர்கள் ஒரு நிமிஷத்திற்குள் இறங்கிவிட வேண்டும். அவனையும் நாற்காலியிலிருந்து இறக்கி நிறுத்திக் கொண்டு உன் சரீரத்திலுள்ள விறைப்பு நீங்கிவிட்டது. சதைகள் தளர்ந்துவிட்டன. நான் ஐந்து எண்ணிக் கைதட்டவே விழித்துக் கொள்வாய்" என்றுசொல்லி ஏழுதடவை அவன் பாதங்களிலிருந்து மேனோக்கித் தடவிக்கொடுத்து, "ஐந்து எண்ணியவுடன் விழித்துக்கொள், சுகமாயிருக்கிறாய்" என்று சொல்ல விழித்துக் கொள்வான்.

எச்சரிப்பு.

ஒரு நிமிஷத்திற் கதிகமா எவனையும் விறைப்பு நிலையில் வைக்காதே. ஒருவனையே அநேக தடவை விறைக்கச் செய்வதும் நன்றன்று. அப்படிச் செய்யப்பட்டவர்கள் தூங்குகையிலும் நீ விறைக்கச்செய்வதுபோல் மனோபாவனை செய்துகொண்டு, தாமாகவே அநேக மணிநேரங்களுக்கு இரும்புபோல விறைத்துக்கிடப்பர். ஹிப்னடிசத்தொழில் செய்வோருடன் பிரயாணம்பண்ணும் சில பையன்கள் இப்படி ஒவ்வொருநாளும் விறைப்புநிலைமைக்குக் கொண்டுவரப்பட்டதால் அவர்கள் நரம்புகளெல்லாம் கெட்டுப் போயிருக்கின்றன. போதுமான அனுபோகத்தினால் தூங்குகிறவனுக்குச் சரியான சவுக்கியத்தையும் சந்தோஷத்தையும் கொடுக்கக்கூடிய சக்தியுடையவர்களன்றி மற்றவர்கள் இதனை அப்பியாசிக்கக் கூடாது. இந்த ரகசியத்தை உனக்குவெளியிடாமலே மறைத்திருப்பதே உததமமெனினும், இம்முறைகளைச் சொல்லிக்கொடுத்து அவற்றால் உண்டாகக்கூடிய தீமைகளையும் விளக்கிக்காட்டுவதால் அதிகப் பிரயோஜனமுண்டாகுமென்றெண்ணியே இச்சாஸ்திரத்தின் மர்மங்களை ஓர் விதமாய் வெளியிடலானேன்.

52-வது பாடம்.

14. விழிப்புநிலையில் விறைக்கச் செய்வது.

1-வது முறை.

சபையிலுள்ள எவனையாவது எழுந்து மேடைக்குவரச்சொல்லி, அவன் சந்தேகத்துடனும் ஆச்சரியத்துடனும் எழுந்துவருகையில், திடீரென்று அவன் எதிர்பாராவண்ணம், "கண்ணைமூடு, உன் சரீரம் விறைத்துப்போயிற்று, உன் சதைகள் வரவர கடினமாகிவிட்டன. இரும்புக்கம்பிபோல் உறுதியாகிவிட்டது" என்றுசொல்லி ஒரு கையால் அவன் பிடரியில்தட்டி மறு கையால் அவன் தாடையைத் தூக்கிவிட அவன் விறைத்துப்போவான். முன் அப்பியாசத்தில் சொல்லிய பிரகாரம் அவன்மேல் எந்தப்பாரத்தையும் ஏற்றலாம்.

2-வது முறை.

ஒருவனை வரச்சொல்லி இரண்டு கால்களையும் பூட்டிக்கொண்டு நேராய் நிற்கச்செய்து "உன் கண்களை மூடிக்கொள். உன் சரீரம் மரம்போல் விறைத்துப்போனதாக எண்ணிக்கொள்" என்றுசொல்ல அவன் தன்னை மரமாகப் பாவிப்பான். அப்பொழுது அவனது புயங்களிலிருந்து பாதம்வரை தடவுபாவனை செய்து உன் சரீரம் முழுவதும் விறைத்துப் போயிற்று" என்று சொல்ல விறைத்துவிடும்.

53-வது பாடம்

தூங்கி விழித்தபின்பும் கிரியை செய்ய ஏவுதல்.

Post Hypnotic Suggestions.

ஆனந்தசாகரன்:—அருள்ஞானரவியே! மந்திரத்தால் தூங்க வைத்த ஒருவனை அவன் விழித்தபின்பும் நமக்கிஷ்டமான விஷயத்தைச்செய்யத் தூண்டுதல் சாத்தியமாகுமோ?

சர்வகலாநிதி:—ஒருவனுக்கு ஆழ்ந்த நித்திரையுண்டாக்கியபின் அவனை நோக்கி நீ விழித்துக்கொண்ட ஐந்து நிமிஷமானவுடன் ஓர் கடுதாசியில் உன் பெயரை எழுதிக்கொண்டு சிறிப்பாய் என்று சொல்லிவிட்டு அவனைத் தூக்கத்தினின்றும் எழுப்பிவிட்டால் ஏறக்குறைய ஐந்து நிமிஷமானவுடன் அவன் ஓர் காகிதத்தை எடுத்து அதில் தன் பெயரை எழுதிக்கொண்டு சிறிப்பான். யாராவது அவனை நோக்கி நீ ஏன் உன்பெயரை எழுதினாய்? ஏன் சிறிக்கிறாய்? என்று வினவினால் அவன் மாறுத்தரஞ்சொல்ல ஏலாமல் திகைப்பான். இதே மாதிரி ஒரு நாளை அல்லது மாதத்தை அல்லது வருடத்தைக்குறிப்பிட்டு இன்னவருடம் இன்னமாதம் இன்னதேதியில் இந்தக்காரியஞ்செய்யவேண்டுமென்றுசொன்னால் அப்படியே செய்வான். வியாதிகளை நீக்குவதற்கும், அபின், கஞ்சா, குடி, புகையிலை முதலிய துர்ப்பழக்கங்களை மாற்றுவதற்கும், ஒருவனின் தீயகுணங்களை போக்கி நற்குணங்களைப் புகட்டுவதற்கும் இது மகாஉத்தம முறையாகும். தாய்மார், போதனாசிரியர்

முதலியவர்கள் இம்முறையை சிறுவர்களிடம் உபயோகித்து நன்னடக்கை, புத்தி தீக்ஷண்யம், ஞாபகசக்தி, படிப்பில் ஆவல் முதலியவற்றை விர்த்தியாக்கலாம்.

ஆனல் அநேக நன்மைகளுக்குதவக்கூடிய ஓர் கூறியவாளால் ஒருவன் சிரசை வாங்கிவிடுவதும் எளிதாவதுபோல் இதே முறையால் அநேகருக்குக் கெடுதியுண்டாக்கவும், செய்யத்தகாத அக்ரமக்கிரியைகளைச்செய்யத் தூண்டிவிடவுங்கூடும். அவ்விதஞ் செய்வதால் தோஷமேற்படுவதற்கு இடமுண்டாகுமென்பதை மாந்திரீகன் அறியவேண்டியது.

இவ்வித தூக்கமுண்டாக்கும் முறையைச் சொல்லுகிறேன் கேள்.

ஒருவனை வசதியான ஆசனத்திலுட்கார வைத்து ஹிப்னுடிச நித்திரையை வருவிக்கவேண்டியது. பின்பு உன் பெருவிரலை அவன் புருவ மத்தியில் வைத்துப் பிடித்துக்கொண்டு சொல்லவேண்டியதா

வது

மந்திரம்.

"நீ இப்பொழுது ஆழ்ந்தநித்திரையிலிருக்கிறாய். நன்றாய் தூங்குகிறாய். ஆழ்ந்த நித்திரை. நான் பத்து எண்ணி முடிப்பதற்குள் அதிக ஆழ்ந்த நித்திரை செய்வாய். ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து என்று மெதுவாக நிறுத்தி எண்ணியானவுடன் "இப்பொழுது நீ ஆழ்ந்த நித்திரையிலிருக்கிறாய், நான் சொல்லுகிற பிரகாரமே செய்வாய், இப்பொழுது நடக்கிறதொன்றும் நீ விழித்தபின்பு உன் ஞாபகத்திலிராது, ஆனால் நான் சொல்லுகிற பிரகாரமே குறித்தநேரத்தில் விழித்தபின்பு செய்துமுடிப்பாய், கட்டாயம் செய்யவே செய்வாய்" என்று சொல்லிவிட்டு நீ விழித்தெழுந்த பின் இத்தனை மணி அடித்தவுடன் இன்னகாரியஞ் செய்வாய்" என்றுசொல்ல அவன் அப்படியே செய்வான்.

இவ்விஷயம் உனக்கு நன்றாய் விளங்கும்பொருட்டு என் அனுபோகத்திற்குவந்த சிலவற்றைக் கூறுகிறேன் கேள்.

1-வது உதாரணம்.

ஆழ்ந்த நித்திரைக்குள்ளான ஒருவனைநோக்கி, இன்றைக்குப் பதினைந்தாவது நாள் வெள்ளிக்கிழமை நீ என்னைப் பார்க்கவருவாய். ஆனால் என்னைக் கண்டவுடன் உன்னால் பேசமுடியாது என்று சொன்னேன். அப்படியே அவன் பதினைந்தாவது நாள் வந்தான். ஆனால் பேசக்கூடாமல் ஊமைபோல் நின்றான்.

2-வது உதாரணம்.

யோசனைக்குறிப்பு வசனங்களுடன் சில குறிப்பு அடையாளங்களையும் நிர்ணயிப்பது மந்திரசித்திக்கு மகா அனுகூலமாகும். காலநிர்ணயம் எல்லாருடைய மனதிலும் திட்டமாய் பதியமாட்டாது. உதாணமாக, சிலரைத் தூங்கவைத்து நீங்கள் விழித்து ஒருமணி நேரமானபின் நிர்த்தனஞ் செய்வீர்களென்றுசொன்னால் சிலர் முக்கால் மணியானவுடன் குதிக்கத் தொடங்குவார்கள். சிலர் சரியாய் ஒருமணி நேரமானவுடனும் வேறுசிலர் ஒன்றேகால் மணியானவுடனும் குதித்து நிர்த்தனஞ் செய்வார்கள்.

நீ விழித்துக்கொண்டபின் நான் எப்பொழுது என் காதைத் தொடுகின்றேனோ அப்பொழுது உனக்கு கோபமுண்டாகும் என்று சொல்லிவிட்டு தூக்கத்திலிருப்பவனை எழுப்பிவிட்டால் அவன் சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருப்பான். ஆனால் மாந்திரீகன் தனது காதைத்தொட்டவுடன் அவனுக்குக் கோபமுண்டாகிவிடும்.

3-வது உதாரணம்.

நான் மேசையில் மூன்றுதடவை தட்டினவுடன் நீ சிறிப்பாய் என்று சொன்னால் அப்படியே சிறிப்பான். ஏன் சிறித்தாய் என்றுகேட்டால் ஏதாவது முகாந்தரஞ் சொல்வான்.

54-வது பாடம்.

ஆனந்தசாகரன் :—மாந்திரீகனின் ஆக்ஞைப்படி ஒருவன் விழித்தெழுந்தபின்பும் கிரியை செய்வானாயின் அந்தப்படி கிரியை செய்யுஞ் சமயம் அவன் தூங்குகின்றானோ? விழித்திருக்கின்றானோ?

சர்வகலாநிதி :—அப்பா! நீ கேட்டகேள்வி மிகக் கடினமானது. இதற்கு விடைசொல்வதவ்வளவு எளிதானதல்ல. தூங்குகிறவனின் சுபாவத்திற்குத் தக்கது பற்பல விதமாகத் தோன்றும். ஆதலால் இன்னுஞ்சில உதாரணங்கள் சொல்லுகிறேன் கேள்.

4-வது உதாரணம்.

ஹிப்னாடிச தூக்கத்திலிருக்கும் ஒருவனை நோக்கி "நீ விழித்தபின்பு என் கையை மேஜைமேல் வைப்பேன், அப்பொழுது உன் பெயரை மறந்துவிடுவாய்" என்று சொன்னேன். அவன் விழித்தபின்பு நன்றாய்ப் பேசிக்கொண்டிருந்தான். உன் பெயரென்னவென்று கேட்க சரியாய் மாறுத்தரஞ் சொன்னான். சிறிது நேரம் பேசிக்கொண்டிருக்கையில் என் கையை மேசைமேல் வைத்துக்கொண்டு உன் பெயரென்னவென்றேன். பெயர் சொல்ல முடியவில்லை. ஆனால் அவனிடம் நித்திரைக்குறிய குறிகள் ஒன்றுந் தோன்றவில்லை. பெயர்மட்டுஞ் சொல்லமுடியவில்லை. நான் இப்பொழுதுதானே என்பெயரைச் சொன்னேன். திரும்பத்திரும்ப ஏன் கேட்கவேண்டுமென்றான். மறுநாள் அவன் பெயரைக் கேட்டவுடன் மாறுத்தரஞ் சொன்னான். முந்தின்நாள் தன் பெயரை மறந்துவிட்டதும் அவன் ஞாபகத்திலிருந்தது. இவன் திரும்பவும் தூங்கினதாகத் தெரியவில்லை.

5-வது உதாரணம்.

ஹிப்னடிச தூக்கத்திலிருக்கும் வேருெருவனை நோக்கி "நீ விழித்தவுடன் இந்த அறையின் ஒருபக்கத்திலிருந்து மறு பக்கம் வரை பதினைந்து தடவை நடப்பாய்" என்றுசொல்ல அப்படியே செய்தான். அவன் நடந்துகொண்டிருக்கையில் "தரை அதிகஞ் சுடுகிறது" என்று சொன்னவுடன் குதித்தான். "நீ குடிவெறியிலிருக்கிருய்" என்று சொல்ல குடிகாரனைப்போல் கால் தடுமாறி நடந்தான். பதினைந்து தடவை நடந்து முடிந்தவுடன் "உன் கையைநீட்டமுடியாது" என்று சொன்னபோதிலும் கையை நன்ருய் நீட்டினுன். நீ ஏன் அங்குமிங்கும் நடந்தாய்? ஏன் குதித்தாய்? ஏன் குடிகாரனைப்போல் கால்தடுமாறி நடந்தாய்? என்று கேட்டபோது மறுமொழிசொல்ல ஏலாமலிருந்தான். இவன் நடந்துகொண்டிருக்கும்பொழுதும் ஹிப்னடிச தூக்கத்திலிருந்தானென்றே சொல்லவேண்டும்.

55-வது பாடம்.

ஐம்புல விர்த்தி.

ஆனந்தசாகரன்:—அருளே வடிவாய் அவதரித்த என் அருமைக்குருவே! ஹிப்னடிச மந்திரங்களால் பஞ்சேந்திரியங்களின் உணர்ச்சியை விர்த்தி செய்யலாகுமோ? அதை அடியேனுக்குப் பல உதாரணங்களாலும் தெளிவாய் விளக்க அஞ்சலி செய்கின்றேன்.

சர்வகலாநிதி:—ஹிப்னடிச நித்திரையை வருவித்து தகுந்த மந்திரத்தை உபயோகிப்பதனுல் ஒருவனுடைய இரத்த ஓட்டம், சுவாசம், சீதோஷ்ணம் முதலியவற்றை அதிகரிக்கச் செய்யவும் குறைக்கவும் ஏலும்.

கண் பார்வை.

ஹிப்னடிசத்தால் கண்பார்வைக்குண்டாகக்கூடிய மாறுதல்கள் மிக்கவியப்பை உண்டாக்கத்தக்கன. ஹிப்னடிச தூக்கத்திலிருந்த மாணிக்கம் என்பவனை நோக்கி, நீ விழித்தவுடன் கோபாலனின் உருவம் உன் கண்களுக்குத் தெரியாது என்று சொல்லிய பின் எழுப்பிவிட்டேன். தூங்கினவனின் எதிரில் கோபாலன் நின்றிருந்தாலும் அவனுருவம் தெரியவில்லையாதலால் அவனை நோக்கிப் பார்க்கவில்லை. கோபாலன் தன் கையை நீட்டினபோதும் அவன் அதைக் கவனிக்காமல், தான் முன் தூங்கின நாற்காலியிலேயே உட்கார்ந்திருந்தான்.

நாங்களனைவரும் அவனைச்சுற்றி உட்கார்ந்திருந்தோம். சில நேரத்திற்குப்பின் அவன் திடீரென்று, கோபாலன் எங்கே? அவனைக் காணுமே? என்று ஆச்சரியத்துடன் கேட்டான். அதற்கு நாங்கள் மாறுத்தரமாக, கோபாலன் வெளியே போய்விட்டான். நீ அடுத்த அறையிற்போய் உட்கார்ந்துகொள் என்று சொன்னோம். அவன் எழுந்து அடுத்த அறைக்குட் செல்லுகையில் கோபாலன் வாசலண்டை நின்றுகொண்டான். மாணிக்கம் கதவண்டை போய் கோபாலன்மேல் மோதிக்கொண்டான். ஏனெனில் அவன் நிற்கிறது இவன் கண்ணுக்குத் தெரியவில்லை. அவன் திரும்பவும் போக எத்தனித்தான். ஆனல் மறுபடியும் தன் கண்ணுக்குத் தோன்றாத ஏதோ ஓர் வஸ்து தன்னைத் தடுப்பதை நினைத்து ஆச்சர்யமுற்றான். உடனே பயமுண்டாகி, அந்த வழியில் போகமாட்டேன் என்றான்.

நாங்கள் ஓர் கைக்குட்டையை எடுத்து மாணிக்கத்துக்குக் காண்பித்தோம். அவன் அதைப் பிடித்துப்பார்த்து 'இது கைக் குட்டைதான்' என்றான். அதன்பின்பு அதை விரித்து கோபாலன் தலையில் போட்டோம். மாணிக்கம் அதைக்கண்டு ஆச்சரியமடைந்து, 'கைக்குட்டை அந்தரத்தில் நிற்பதைப் பார்த்தீர்களா' வென்று வியப்புடன் சொன்னான். கோபாலன் அந்தக் கைக்குட்டையை எடுத்து மாணிக்கத்தின்முன் ஆட்டினான். அப்பொழுது மாணிக்கம் 'இந்தக்கைக்குட்டை ஓர் கம்பியில்தொங்க வேண்டும்' என்று சொல்லி, அந்தக் கம்பியைப்பார்க்கப் பிரயத்தனப்பட்டான்.

நாங்கள் ஓர் மழைச்சட்டையை எடுத்து கோபாலனுக்கு உடுத்தினோம். மாணிக்கம் மகா ஆச்சரியமடைந்து 'இதென்ன! மழைச்சட்டை ஓர் பொம்மைபோல் தெரிகிற' தென்றான். அறையிலுள்ள ஓர் நாற்காலியை கோபாலன் அங்குமிங்கும் தூக்கிக் கொண்டு நடந்தான். அதைக்கண்ட மாணிக்கம் 'இந்த நாற்காலியை ஏதோ ஓர் ஆவேசம் தூக்கிச்செல்லுகிற' தென்றான்.

பின்பு, மாணிக்கத்தை உட்காரவைத்துப் பேசிக்கொண்டிருந்தோம். கோபாலன் மெள்ளவந்து, அவன் செங்கி, நெற்றி, கன்னம், மூக்கு முதலியவற்றைத் தொட்டான். மாணிக்கம் பயப்படாமல் தன் கையை நீட்டித் தடுத்தான். 'நீ ஏன் உன் கையை நீட்டுகிறாய்' என்று கேட்டதற்கு, 'என்முகத்தில் நமைச்சலெடுத்தது. ஆதலால் சொரிந்துவிட்டேன்' என்று சொல்லி அமைதலாயிருந்தான். நாங்கள் மாணிக்கத்தை நோக்கி, 'உன் கையை உதறு' என்று சொன்னோம். அவன் உதறவே, கோபாலன் அதைத் தடுத்தான். 'என்னசெய்கிறாய்' என்றுகேட்டோம். அதற்கு அவன், 'கை சுளுக்கிக்கொண்டது, ஆதலால் உதறினேன்' என்றான்.

ஆகவே, மாணிக்கம் தான் செய்யும் ஒவ்வொரு கிரியைகளுக்கும் ஏதாவதோர் காரணம் சொல்லிக்கொண்டு வந்தான்.

2-வது உதாரணம்.

ஹிப்னாடிச மந்திரத்தால் கண்பார்வை கூர்மையாகுமென்பதற்கோர் உதாரணம் சொல்லுகிறேன் கேள் :—

ஒருவனைத்தூங்கவைத்து அவன் கையில் ஒரு வெறுங் கடுதாசியைக் கொடுத்து 'இதில் வரிசையாக எண்கள் எழுதப்பட்டிருக்கின்றனவே, அவைகள் தெரிகிறதா?' வென்றேன். அவன், 'தெரிகின்றது' என்றான். 'வாசிபார்ப்போம்' என்க அவன் வாசித்த எணகளாவன :—

'5, 9, 7, 10, 4, 8, 3, 2, 12, 1, 9, 5, 11' அவைகளைக் கூட்டி மொத்தம் இன்னதென்றுசொல்லென, அவன் '86' என்று சொன்னான். '2, 5, 7' இந்த இலக்கங்களைக் கூட்டிச் சொல்லென, அவன் '16' என்றான். 'ஒன்பதிற்கு மேலான எண்களையெல்லாம் கூட்டிச்சொல்' என்று சொல்ல, '33' என்று சொன்னான். 'பத்துக்குக் கீழான லக்கங்களின் மொத்ததொகை யென்னசொல்' என்று கேட்க '53' என்று சொன்னான். அதன்பின்பு கடுதாசியை அவன் கையிலிருந்து வாங்கிக்கொண்டு, 'இலக்கங்களைத் திரும்பச்சொல் பார்ப்போம்' என்றேன். முதல் இரண்டு லக்கங்களையும் சொன்னான். மற்றவைகளைச் சொல்லக்கூடவில்லை.

ஹிப்னாடிஸத் தூக்கத்தினால் கண்பார்வை அதிகக்கூர்மையாகிவிடுவதால் சாதாரண மனிதருக்குத் தெரியாமல் அதிலிருக்கும் புள்ளிகள் கோடுகள் முதலியவற்றை அடையாளமாகவைத்துக்கொண்டு, அந்த இலக்கங்களை ஞாபகத்தில் வைத்து வாசிக்கக்கூடிய சக்தி உண்டாகிவிடுமென்பதை நாம் கவனிக்கவேண்டியது.

3-வது உதாரணம்.

ஹிப்னுடிஸ மந்திரத்தால் கண்பார்வை மகா நுண்ணிய கூர்மையடையும் என்பதற்கு மற்ருேர் உதாரணஞ்சொல்லுகிறேன்:—

சீட்டாட்டத்தில் உபயோகிக்கும் கார்டுகளி லொன்றை எடுத்து அதன் பின் பக்கத்தை ஹிப்னுடிச தூக்கத்தி லிருப்பவனுக்குக் காண்பித்து ‘ இதோ! இதில் ஓர் படமிருக்கிறது பார். தெரிகிறதா’ வென்ருல், தெரிகிற தென்பான். ‘அதை நன்ருய்க் கவனித்துக்கொள்’ என்று சொல்ல அது அவன் மனதில் பதிந்துகொள்ளும். அதன்பின், அந்தச்சீட்டை யெடுத்து மற்றச்சீட்டுகளுடன் கலந்து அவன்கையில்கொடுத்து, படமிருக்கிற சீட்டை எடுவென, அவன் அந்தச்சீட்டுகளையெல்லாம் ஆராய்ந்துபார்த்து எந்தச்சீட்டில் படமிருக்கிறதென்று சொன்னேமோ, அந்தச் சீட்டை எடுத்துக் கொடுப்பான். இதற்குக் காரணம் அவன் படமிருக்கிறதாக கவனித்த சீட்டிலுள்ள புள்ளிகள் கோடுகள் முதலியவற்றை அவனுடைய நுண்ணிய கூர்மையுள்ள கண்களால் சோதித்ததே. சாதாரண மனிதரின் கண்களுக்கு அந்தச் சீட்டின் பின்புறத்திற்கும் மற்றச் சீட்டுகளின் பின்புறத்திற்கும் யாதொரு வித்தியாசமும் தோன்ருது.

56-வது பாடம்.

செவியின் கூர்மை.

ஹிப்னடிஸ மந்திரங்களால் செவியின் கூர்மையை அதிகரிக்கச் செய்யலாம். சாதாரணமா யிருக்கையில் எட்டடி தூரத்தில் வைக்கப்பட்டிருக்கும் கெடியாரத்தின் சப்தத்தைக்கேட்கக்கூடிய மனிதன் ஹிப்னடிஸத் தூக்கத்திலிருக்கையில் இருபத்தைந்து அடிக்கப்பாலுள்ள கெடியாரத்தின் சப்தத்தைக் கேட்கலாம்.

ஓர் நாள், ஒருவனைத் தூங்கவைத்து, அந்தக்கூட்டத்திலுள்ள இன்னான் சுந்தரம் என்று சொன்னவுடன் கவனித்துச்சொல் என்று ஆக்ஞாபித்துவிட்டு, அநேகரை சுந்தரம், சுந்தரம் என்று சொல்லச் சொன்னேன். அதனடுவில் குறிப்பிட்ட மனிதன் தூரத்தில் ஓர் மூலையிலிருந்துகொண்டு மெதுவாய் 'சுந்தரம்' என்று சொன்னவார்த்தை தூங்கினவன் காதில் விழுந்தது. அவன் நிறுத்தி, நிறுத்தி 'சுந்தரம்' என்று சொல்லும்பொழுதெல்லாம் தூங்கினவன், குறிப்பிட்ட மனிதனின் சப்தத்தைக் கேட்டதாகச்சொன்னான்.

2-வது உதாரணம்.

மனிதர் சாதாரணமாக தம் சப்தத்தை வெளியிடாமல் மெதுவாய் வாயைமாத்திரம் அசைத்துப் பேசும்பொழுது அதை இன்னார் பேசினார்களென்றறிவது சாத்தியமாகாது. ஆனால் ஹிப்னடிஸ தூக்கத்திலிருந்த ஒருவனின் பின்னால் பதினைந்துபேர் வரை 'மாணிக்கம், மாணிக்கம்' என்று சப்தம் வெளியே கேட்காதபடி மெதுவாய்சொல்லிவிட்டுப் போயினர். ஆனால் குறித்த மனிதன் 'மாணிக்கம்' என்று கூப்பிடும்போதெல்லாம் இன்னானின் சப்தமென்று சொல்வான்.

57-வது பாடம்.

நாவின் ருசியை அதிகரிக்கச் செய்தல்.

ஹிப்னுடிஸத் தூக்கத்திலிருப்பவனிடம் ஓர் மிளகாயைக் கொடுத்து, 'இது மகா மதுரமான கனி. வெகு ருசி. தின்றுபார்' என்று சொல்ல அவன் சிறித்துக்கொண்டு வெகு ருசியாயிருக்கிறதென்று சொல்லித் தின்பான்.

அப்படியே ஓர்நாள் ஒருவன்பசிதீபனமில்லை. சாப்பாட்டின் மேல் வெறுப்பாக யிருக்கிறது என்று வந்தான். அவனை ஹிப்னுடிஸ நித்திரைக்குள்ளாக்கி, அவன் முன்னால் சாதம்படைத்து, 'உனக்கு இப்பொழுது அகோர பசி. அதிகப் பசியாயிருக்கிறாய். உன் ஜீரணக்கருவிகள் நீ சாப்பிட்டதையெல்லாம் ஜீரணித்துவிட்டனவாதலால் உனக்குப் பசி அதிகமாயிருக்கிறது. இதோ! உன்முன் மகாருசியான பதார்த்தங்களுடன் சாதமிருக்கின்றது. சாப்பிடு' என்று சொல்ல இரண்டு நிமிஷத்தில் சாதத்தை சாப்பிட்டுவிட்டான். பின்பு விழித்துப்பார்க்கையில், நடந்தவிஷயமொன்றும் அவனுக்குத் தெரியாது.

58-வது பாடம்.

வர்சவணயின் கூர்மை.

கூடியிருக்கும் சபையிலுள்ள ஒவ்வொருவரும் பென்கத்தி, பென்சில், கோலிஉண்டை, கைக்குட்டை, காசு முதலிய ஏதாவது சாமானை தத்தம் கைகளில் வைத்துக்கொள்ளட்டும். அவர்களி

ருக்கும் அறையின் வெளிப்புறத்தில் மாந்திரீகன், ஒருவனை ஹிப்னுடிஸ தூக்கத்துக்குள்ளாக்குகையில் சபையார் தத்தங் கரங்களிலுள்ள வஸ்துவை மேசையின்மேல் வைத்தபின் ஹிப்னுடிச தூக்கத்திலிருப்பவனை உள்ளே கொண்டுவந்தால் அவன் மேசையிலுள்ள ஏதாவதொரு சாமானை எடுத்து முகர்ந்துபார்த்துவிட்டு சபையார் ஒவ்வொருவரின் கையையும் முகர்ந்து பார்த்து அந்த சாமான் எவருடையதோ அவர் கையில் கொடுப்பான். இவ்விதமாகவே மேசையின்மேலிருக்கும் ஒவ்வொரு சாமானையும் எடுத்து உடையவன் கையில் கொடுப்பான்.

இன்னும் அம்மோனியா முதலிய காரமான வஸ்துக்களடங்கிய சீசாக்களைக் கொடுத்து இதிலிருப்பது வெறுந் தண்ணீர்தானென்றால் அவன் யாதொரு கஷ்டமின்றி முகர்ந்து பார்ப்பான்.

59-வது பாடம்.

உயிர்ப் பிராணிகளை வசியஞ் செய்யும் முறை.

கோழிகளை வசியஞ்செய்தல்.



ஒரு கோழியைப்பிடித்து அதன் கால்களிரண்டையும் சேர்த்துக்கட்டி அதன் மூக்குத் தரையில் படத்தக்கதாக படுக்கவைத்து ஒரு சீமைச்சுண்ணாம்பினால் கோழியின் மூக்கிலிருந்து இரண்டு கெஜ நீளத்திற்குக் கோடு கிழித்துவிட்டால் அந்தக்கோழி அசைவின்றி அப்படியே படுத்திருக்கும். கோழி அடைக்கு விழாதிருந்தால் அதைப்பிடித்து அதன் தலையை இறக்கைக்குள் விட்டுவைத்துக்கொண்டு; அக்கோழியை நாலைந்து தடவை மெதுவாக ஆட்டினால் அது தூங்கிவிடும். அப்பொழுது அதை எந்த அடையில் வைக்கிறோமோ அதில் அவயங் காக்கும். இதேவிதஞ் செய்து ஒரு கோழியை மற்றொரு கோழியின் அடையைக் காக்கும்படி வைக்கலாம்.

60-வது பாடம்.

பாம்புகளை வசியஞ் செய்யும் முறை.

பாம்பாட்டிகள் செய்வதுபோல், புல்லாங்குழல் ஊதிக்கொண்டிருந்தால் பாம்புகள் வெளியே வந்து படமெடுத்தாடும். அவைகளின்முன் பாம்பாட்டி தன் கால்களை அல்லது சரீர முழுவதும் ஆட்டிக்கொண்



டிருந்தால் பாம்புகள் வசியமாகி, பாம்பாட்டி செய்கிற விதமே செய்யும்.

61-வது பாடம்.

புருக்களை வசியஞ் செய்யும் முறை.

ஓர் புருவைப் பிடிக்கவேண்டுமானால் அதினிடத்தில் நேரே கையைக்கொண்டு போனால் அதைப்பிடிப்பது கஷ்டமாகும். ஆனால் அதைச்சுற்றி பலதடவை ஓடிக்கொண்டிருந்தால் புருவும் அந்த மனிதன்மேல்வைத்த பார்வையைநீக்காமல் சுற்றிக்கொண்டு வரும். சிறிது நேரத்திற்குள் அது மயங்கிவிடும்.

மற்றோர் முறை யாதெனில், புறுவின் கண்முன் கையை மெதுவாக வலது பக்கத்திலிருந்து இடது பக்கத்தில் வரும்படி அசைத்துக்கொண்டிருந்தால் புறுவின் நோக்கமானது கை செல்லும் பக்கமெல்லாம் போய்க்கொண்டிருக்கும். இப்படிசெய்துகொண்டே சமீபத்திற்போய் கையைப் புறுவின்மேல் போட்டுப் பிடித்துக் கொள்ளலாம்.

62-வது பாடம்.

குதிரை, குரங்கு, நாய், பூனை வசியம்.

குதிரை, குரங்கு, நாய், பூனை முதலிய வீட்டிலுள்ள பிராணிகளை வசியஞ் செய்யும் வகை யாவரு மறிந்ததே. அவைகளுக்கு ருசியைக் கொடுக்கும் ஏதேனும் வஸ்துவைத் தின்னக்கொடுத்து பின்பு பக்ஷமான பார்வையுடன் அவற்றின் முதுகின் மேல் இரண்டு மூன்றுதடவை தட்டிக்கொடுத்து அவற்றிற்குள்ள பயத்தை நீக்கவேண்டும். அதன்பின் அவற்றின் தலையிலிருந்து வால் வரையிலும் நெற்றியிலிருந்து மூக்குவரையிலும் பலதடவை மெதுவாகத் தடவிக் கொடுக்கவேண்டும். இப்படிச் செய்வதால் எந்த வீட்டுப்பிராணியும் வசியமாகி நம்மிடத்தில் பிரியங் காட்டும்.

63-வது பாடம்.

காட்டுப் பிராணிகளின் வசியம்.

காட்டுமிருகங்கள் நம்மைக் கண்டமாத்திரத்தில் திடுக்கிட்டு கலைத்துவிடுந் தன்மையுடையனவாதலின் அவற்றை வசப்படுத்துவது கஷ்டமான காரியமாகும். அவற்றைக் கைகளால் தடவ முடியாது. மந்திரங்களும் பயன்படா. நமது கண் பார்வையினாலும் அசைவினாலும் மட்டும் அவற்றின் கவனத்தை இழுத்து கீழ்ப்படியச் செய்யலாம்.

ஓர் புலியுங்கூட நமது கண்களுக்கு மறைந்தே நம்மேல் பாய்வதற்கு எத்தனிக்கும். ஆதலால் எந்த மிருகத்தையும் நமது பார்வையை விட்டகலாமல் செய்வோமாயின் அதனால் ஒன்றுஞ் செய்யமுடியாது.

புலி, சிங்கங்களைப் பழக்கி வேடிக்கை காண்பிப்பவர்களைக் கவனித்துப் பார்த்தால் அவர்கள் தமது முதுகை அம்மிருகங்களுக்குக் காண்பிக்காமல் எப்பொழுதும் வெகு ஜாக்ரதையுடன் தம்து பார்வையை அவற்றின்மேல் ஊன்றி வேடிக்கை காண்பிப்பர்கள்.

64-வது பாடம்.

மானிட வசியம்.

நாம் சிலரைப்பார்த்தமாத்திரத்தில் அவர்களை நேசிக்க விருப்பமுண்டாகின்றது. வேறு சிலரைப் பார்த்தமாத்திரத்தில் வெறுக்கிறோம். இதற்குக் காரணமென்ன?

இவ்வுலகில் சிலர் கோரிய காரியங்கள் கைகூடி வருகின்றன. ஜனசமூகமானது அவர்களைப் பார்த்தவுடனே மரியாதை செலுத்தி நேசிக்கத் தொடங்குகின்றனர். வேறுசிலரோ எவ்வளவு சிரமமெடுத்த போதிலும் ஒருவரும் அவர்களைக் கவனிக்கிறதில்லை. இவ்வுலகில் இருந்தும் இல்லாதவர்கள் போலவே பாவிக்கப்படுகின்றனர்.

ஒருவனைக் கீர்த்திமானாகவும் மற்றவனை சுத்த சூனியமாவும் செய்யும் இந்த மகாசக்தியாது?

மனோதத்துவ சாஸ்திரிகள் இதனைக் காந்தசக்தி யென்பர். சிறிது காலம்வரை இச்சக்தியின் தன்மையைப்பற்றி எவருங் கவனித்திலர். இக்காலமோ இரகசியங்களெல்லாம் வெளியாகுங் காலமாதலின் தீர்க்க ஆராய்ச்சிசெய்து தெளிந்தவர்கள், இச்சக்தியை எளிதில் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் அதற்குச் சிறிது பிரயாசை வேண்டுமென்கின்றனர்.

௧. மௌன சக்தி.

(The Force of Silence.)

பேசவேண்டும், கீர்த்திமானாகவேண்டும், யாவரும் நம்மைப் புகழவேண்டுமென்றாசை கொள்வது மனுஷ இயற்கை. ஆனால்

மற்றவர்களிடம் மதிப்படைய விரும்புபவன் மௌனத்தைக் கைக் கொள்வதே உத்தமம்.

"வற்றியஓலை கலகலக்கு மெஞ்ஞான்றும்
பச்சோலைக் கில்லை யொலி."

எவனொருவன் அதிகமாய் அலப்புகிறானோ, எவனொருவன் புகழ்ச்சியை நாடித்தேடி அவாவுடன் செல்கின்றானோ, அவன் புகழ்ச்சிக்குப் பதிலாக இகழ்ச்சியையும் அவமானத்தையும் அடைவான். ஆனால் இகபர கீர்த்தியைத் தரத்தக்க உத்தம காரியங்களில் உண்மையாய் உழைத்துவருபவன் எந்தக்காட்டிலிருக்கினும், எந்த மூலையில் ஒளித்துக்கொண்டிருக்கினும் உலகம் அவனை நாடித்தேடும். சபை யலங்காரம் அவனே யாதலின் அவனில்லாத இடம் பாழாகத் தோன்றும். ஆதலால் அரிய பெரிய காரியங்களைச் செய்துவருபவரில் எவனொருவன் மௌனத்தைக் கையாடி தன் காரியாதிகளைப்பற்றி பிறரிடம் அலப்பாமலிருக்கின்றானோ அவனே மதிப்படைவான்.

தன்னடக்கமே வசிய சக்தி.

தன்னிடத்திலுள்ள இரகசியத்தை மற்றவர்களுக்குச் சொல்லவேண்டுமென்னும் ஆவலானது தன்னடக்கம் என்னும் கட்டை மீறி வரயைத்திறந்து மர்மத்தை வெளியாக்கத் தூண்டிவிடும். பெண்களுக்குள் இது சகஜம். இரகசியம் வெளியாக வெளியாக நமது வசிய சக்தியும், வல்லமையுங்குறைந்துகொண்டே வருகின்றன. உனக்குத்தெரிந்த வர்த்தமானத்தைப் பிறருக்குச் சொல்ல வேண்டுமென்னும் ஆவலின் சக்தி மிக வலிதேயாயினும் தெரிந்ததை வெளியிடாது அடக்கும் சக்தி அதனிலும் வலிதாகும். உனக்குத்தெரிந்ததை வெளியிட்டால் அதைக்கேட்டவர்கள் சிறிது

ஆச்சரியமுறுவர், அல்லது மகிழ்வர். ஆனலதனுலுனக்குண்டாகும் வசிய நஷ்டம் அதிகரித்துக்கொண்டே வருமென்பதைத் திட்டமாயறி.

மௌனத்தைக் கையாடிவரும் தன்னடக்கமுள்ளவனே நாளுக்குநாள் தன்னில் ஓர் சக்தி விருத்தியாகிக்கொண்டு வருவதைக் காண்பான். இதற்கு முதலடையாளம் உனக்குள் சுயநம்பிக்கை (Self-confidence), சுயமதிப்புக்கான உணர்ச்சிகள் தோன்றும். உன் மூளையும் நரம்புகளும் முறுக்கேறி வீரத்தைக் காண்பிக்கும். தன்னடக்கமற்ற மனிதர் உன் முன் அற்பப் பிராணிகள் அலப்புவதுபோல் தோன்றுவார்கள். இவைகளெல்லாம் உள்ளான இரகசியம். இனிமேல் வெளித்தோற்றங்கள் சிலவற்றைச் சொல்லுகிறேன்.

65-வது பாடம்.

காந்த திருஷ்டி.

ஒருவருடன் பேசிக்கொண்டிருக்கையில் கூர்ந்து பார்க்கக் கூடாது. ஆனல் மற்றவர்களின் எண்ணங்களைக் கொள்ளைகொள்ளத்தக்கதான அதிகாரமும் அன்புங் கலந்த பார்வை யொன்றுண்டு. மற்றவன் பேசுகையில் அவன் கண்களை நோக்கிப்பாராமல் அவன் போட்டிருக்கும் சட்டையை அல்லது பக்கத்திலுள்ள ஓர் வஸ்துவைப் பார்ப்பதுபோல பாவனை செய்யவேண்டும். ஆனல் நீ பேச ஆரம்பித்தவுடன் அவன்புருவமத்தியை உறுதியாய்நோக்கிப் பார்த்துப் பேசப் பழகு. உனக்கு மேலான அதிகாரி யொருவர்

தமது கைக்குள் வேலை பார்ப்பவர்களை கெஞ்சும்படி செய்யுங் குரூரத்தன்மை வாய்ந்தவரென வைத்துக்கொள்வோம். அவருடன் பேசும்பொழுது புருவமத்தியை நோக்கிப் பேசுவாயாகில் அவருடைய தன்மையிலுண்டாகும் மாறுதலை உடனே கவனிக்கலாம். நீ ஒருவன் கண்களுக்குள் நோக்கிப்பார்க்கையில் அவன் எதிர்த்துப்பார்க்க உன் கண்கள் கீழ்நோக்குமாயின் அவன் உனக்கு மேலானவன். ஆனால் அவன் கீழ்நோக்கிப் பார்க்கின், உன் அதிகாரம் அவனிடத்தில் செல்லுமென் றறிந்துகொள். ஆகையால் காந்தப்பார்வையை உபயோகிக்கும் விதத்தை அப்பியாசித்துவருவது நலம். ஓர் கண்ணாடியின்முன் உட்கார்ந்துகொண்டு உன் பிரதிபிம்பத்திலுள்ள புருவமத்தியை நோக்கிப் பார்க்கப் பழகு. இவ்விதம் பிரதி தினமும் பத்து நிமிஷம் செய்துகொண்டு வந்தால் எதிரியை ஜெயிக்கக்கூடிய காந்தத் திருஷ்டியை அடைவாய். இன்னும் மற்றவர்கள் உட்கார்ந்திருக்கையில் அல்லது நடந்துபோகையில் அவர்கள் பிடரியைக்கூர்ந்து நோக்கினால் உடனே திரும்பிப்பார்ப்பார்கள். மற்றவர்கள் உன்னிடம் கைகுலுக்க வந்தால் உன் கையால் அவர்கள் விரலைப்பிடித்துக் குலுக்கினால் யாதொரு பிரயோஜனமுமிராது. ஆதலால் உன் உள்ளங்கை அவர்கள் உள்ளங்கையில் படத்தக்கதாக உறுதியாய் திணித்துப் பிடித்துக் குலுக்கினால் அவர்கள் உனக்கு மரியாதைசெய்து உன் மேல் அன்பு கூறுவார்கள். கைகுலுக்குகையில் புருவமத்தியை நோக்கிப்பார்த்து குலுக்க அதிக வலுவுண்டாகும்.

-வது பாடம்.

தாமதிக்காதே.

எந்தக்காரியத்திலும் இன்னொருவன் ஆரம்பிக்க இடங்கொடுக்காதே. தாமதமின்றி உன் கையை முதலாவதாகநீட்டி அவனின் மறுமொழிக்காக உறுதியாய்க் காத்திரு. அச்சமயத்தில் நேரிடும் குழப்பத்திற் கிடங்கொடாதே. நீயே முதலாவதாக ஆரம்பிக்க வேண்டும். மற்றவன் ஆரம்பித்தால் உன் காந்தசக்தி குறைவதற் கிடமாகும். உன்னில் காந்த சக்தி அதிகரிக்க அதிகரிக்க சுய நம்பிக்கையும் சரீரத்திலேயே ஓர் மாறுதலும் உண்டாகும். உன் முதுகு நேராய் நிற்கப்பழகு. உன் கண்களில் பிரகாச காந்தியும் உன் முகத்தில் வஜீகரமும் உண்டாகும். சித்த சக்தியும் அதிகரிக்கும். அதையும் அப்பியாசத்திற்குக் கொண்டுவரப் பழகவேண்டும். இரவில் தூங்கப்போகுமுன் இத்தனை மணிக்கு விழித்துக் கொள்ளவேண்டுமென்றும் உறுதியாய்த் தீர்மானஞ் செய்துகொண்டு படுக்கைக்குப்போனால் குறித்தநேரத்தில் விழித்துக்கொள்ளும் வழக்கம் அநேகருக்குண்டு. அதேவிதமாக, வியாபாரத்தில் அல்லது தொழிலில் உண்டாகியிருக்கும் கஷ்டங்களை நினைத்துக்கொண்டு தூங்கப்போனால் இரவும் பகலும் தூங்காமல் விழித்திருக்கும் உள்மனமானது தீர்க்க ஆலோசனை செய்து அதிகாலையி லெழுந்தவுடன் இன்னவிதஞ்செய்தால் காரியசித்தியாகுமென்பதைக் காண்பிக்கும். ஆரம்பத்தில் சில தவறுதல்களிருப்பினும் நாள் செல்லச் செல்ல சரியான உத்தரவு கிடைக்கும்.

67-வது பாடம்.

மானத தந்தி.

உள்மனதின் கிரியையை விளக்கும் திருஷ்டாந்தம் ஒன்று கூறுகிறேன். ஒரு மனிதன் அல்லது ஓர் ஸ்திரீயினிடமிருந்து ஏதோ ஓர் விஷயத்தைப்பற்றி உனக்குக் கடிதம் வரவேண்டுமென்று ஆவலிருந்தால், அந்தக் காரியத்தைப்பற்றி உடனே கடிதமெழுதும் ஆவல் அவனுக்கு அல்லது அவளுக்கு உண்டாகிவிட்டது. அதைத் தடுக்கமுடியாது. ஆதலால் "கட்டாயம் கடிதம் எழுதியனுப்பு" என்று ஒரு கடிதமெழுதி கவருக்குள்போட்டு மேல் விலாசமெழுதிவிடு. பின்பு அக்கடிதத்தை எடுத்து ஒரு பிரகாசமான வெளிச்சத்தில் வைத்து ஐந்து நிமிஷம் கண்ணிமைக்காமல் கூர்ந்துபார்த்துக்கொண்டு நீ எழுதிய விஷயத்தைப்பற்றி தியானம் பண்ணிக்கொண்டிரு. ஒரு காகிதத்தைச் சுருட்டிக் குழாய் செய்து அக்குழாயின் மூலமாக நீ எழுதிய கடிதத்தைக் கூர்ந்துபார்த்துத் தியானித்துக்கொண்டிருப்பாயாயின், பலன் உடனே கிட்டும். அதன்பின்பு காகிதத்தை வைத்துவிடு. உன் சங்கதி குறித்தயிடம் சேர்ந்துவிட்டது. நீ எதிர்பார்க்கும் பதில்கிடைக்கும். ஆரம்பத்தில் சில தவறுதல்களிருப்பினும் கடைசியில் எவ்விதமும் சித்தியாகும். இதுவே கம்பியில்லாத தந்தி. செய்துபார்.

சுபம்.

உ

ஓம்

ஆ. தம்பையா.

ஸ்ரீ வ[illegible]கோவி[illegible]

தென்காசி.